DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX Realty Inc. Brokerage
416-948-0693
Broker

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1372 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 22, 2022

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

# ரணில் விக்கிரமசிங்க வின் வெற்றி யாருக்குத் தேவை?

## அவர் ஜனாதிபதியாக தெரிவாவதை இந்தியாவும் சீனாவும் விரும்பவில்லை?



ஜனாதிபதித் தெரிவின் பின்னணியில் எத்தரப்பினர்கள் உள்ளனர் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முந்திக்கொண்டு வாழ்த்துக்கள் தெரித்துள்ளவர்களை வைத்து இலகுவாக அடையாளம் காணலாம். அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய யூனியன் ரணிலை வாழ்த்தியுள்ளன. அதுமட்டுமின்றி ரணிலின் வெற்றியை ஏற்றுக்கொள்வதாக ஐக்கிய நாடுகள் சபையும் தெரிவித்துள்ளது. இந்நாடுகள் ரணிலின் வெற்றியையே விரும்பின. ரணிலின் வெற்றிக்கான காரியங்களையும் இந்நாடுகள் மேற்கொண்டன. ரணிலின் வெற்றியையே தமது கேடயம் என்பது ராஜபக்சக்களின் திட்டமுமாகும்.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதனை இந்தியா, சீனா ஆகியனவும் இந்நாளின் சார்பு நாடுகளும் விரும்பவில்லை. இதனால்தான் இந்நாடுகள் இது வரை வாழ்த்துக்களைத் தெரிவிக்கவில்லை.

கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற போது சீனாதான் முதலில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டது. ஆனால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கவில்லை. இந்தியா கூட கோத்தபாய ராஜபக்சவின் வெற்றியில் மகிழவில்லை. ராஜபக்சவினர் சீனா சார்புடையவர்கள் என்ற காரணத்தினால் தான் கோத்தபாய ராஜபக்சவின் வெற்றி துக்கத்தையே இந்நாடுகளுக்கு ஏற்படுத்தியது. கோத்தபாய ராஜபக்ச சீனாக்காரன் போலவே செயற்பட்டார். சீனாவின் குப்பையையும் பசளையாக வாங்கிக் கொண்டார். அமெரிக்கா மற்றும் இந்தியாவின் செல்வாக்கு இலங்கையில் மிகவும் குறைவடையத் தொடங்கியது. இந்தப் பின்னணியில் கொவிட், அதிக வட்டியில் கடன், முஸ்லிம்களின் கொவிட் ஜனாஸாக்களை எரித்தமையால் முஸ்லிம் நாடுகளை பகைத் கொண்டமை, பிழையான பொருளாதாரக் கொள்கை, சிறுபான்மையினரை கணக்கில் கொள்ளாமை போன்ற காரணங்களால் இலங்கையில் பெரும் பொருளாதார பிரச்சினை ஏற்பட்டது. சகல பொருட்களுக்கும் வரிசையில் நிற்க வேண்டிய சூழல், யூரியா பசளையை தடை செய்யமையால் நாட்டு மக்கள் கோத்தபாய ராஜபக்சவுக்கும், அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்கள் வெடித்தன. நாட்டில் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இந்த சூழலை பயன்படுத்தி இந்தியா இலங்கைக்கு பல்வேறு உதவிகளையும். கடன்களையும் வழங்கி இலங்கையில் தனது ஆதிக்கத்தை அதிகரித்துக் கொண்டது. சீனாவின் ஆதிக்கம் குறைந்தும் காணப்பட்டது. இத்தகையதொரு சூழலில் காலி முகத்திடல் முதல் நாட்டின் பல பாகங்களிலும் போராட்டங்கள் இடம்பெற்றன. இந்த போராட்ட சூழலை அமெரிக்கா தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டது. போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக செய்யப்பட்டது. மக்களின் ஜனநாயக போராட்டத்திற்கு தடைகளை ஏற்படுத்தக் கூடாது என்று அமெரிக்கா தெரிவித்தமை கவனத்திற்குரியது. தங்களின் ஆணைக்கு ஆட்டம் போடக் கூடிய ரணிலை வெற்றி பெற செய்து வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளது. ஆகவே இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி ஜனாதிபதி தெரிவு ஆகியவற்றின் மீது இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் நாடுகளின் செல்வாக்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நாடுகளின் ஆதிக்க விளையாட்டு இத்துடன் நிற்கப் போவதில்லை. அது மட்டுமல்ல ரணிலுக்கு எதிரான போராட்டங்களும் நடைபெறும். இந்த ஆதிக்க நெருக்கடிகளை சாதுரியமாக வெற்றி கொள்வதிலேயே இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சமாளிக்கலாம். சுமார் மூன்று வருடங்கள் கடந்ததன் பின்னரே நாட்டின் பொருளாதாரம் ஓரளவுக்கு முன்னேற்றமடையும்.

சஹாப்தீன் - கொழும்பு

# அவசியமற்ற மிருகத்தனத்தை அரசியலில் பயன்படுத்த வேண்டாம் என்கிறார் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ்



தற்போதைய இக்கட்டான அரசியல் சூழ்நிலையில் மக்களுக்காகப் போராடும் போராட்டக்காரர்கள் மீது, அவசியமற்ற மிருகத்தனத்தை அரசியலில் பயன்படுத்த வேண்டாம் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் ஜனாதிபதி ரணிலுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

தமது உத்தியோபூர்வ டுவிட்டர் பதிவில் அவர் இதனை குறித்துள்ளார் என்றும் அத்துடன் இராணுவத்தளபதி மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கும் மின்னஞ்சல்களை அனுப்பியுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE Realty Inc., Brokerage
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
Mortgage Alliance
Right Team
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ALL IN 1 ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE Realty Inc. Brokerage
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
RE/MAX
கவாஸ். சோம சச்சிதானந்தன்

# STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### ROOM for RENT

Eglinton / McCowan சந்திப்பிற்கு அருகில் detached வீட்டொன்றில் அறை வாடகைக்கு உண்டு.
Close to GO Train, NoFrills, Wallmart & many convenient stores.
Rent: $750 (Utilities included)
Parking lot will be provided. Females ONLY.
Address: 43 Blue Lagoon Crt
Scarborough, ON, M1J3M3

Contact: (437) 235-6130
(647) 656-8544

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RAJAN: 416-464-2415



### லக்ஷ்மி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம் தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும் தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

**சுலபமாய் ஒரு சுயம்வரம்**

**647-961-6886**

### ATSIN LAW சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### Basement for Rent

**Markham & Denison**

**1 bedroom basement available immediately.**
**Parking, laundry, cable, internet included.**
**Close to all facilities.**

**Call: 416-317-8449**
**416-451-6680**



# மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்

# ஆடிப்பூர ருதுசாந்திப் பெருவிழா

--------------------

**80, Nashdene Rd, Unit #99. Scarborough, Ontario**

27-07-2022 புதன்கிழமை அன்று ஆடி அமாவாசை
காலை 9:00 மணி தொடக்கம் சிறப்பு பூஜையுடன் மகேஸ்வரபூசையும் நடைபெறும்.

31-07-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று ஆடிப்பூர ருதுசாந்தி சிறப்பு பூஜை
8:00 மணி தொடக்கம் நடைபெறும்.

05-08.2022 வெள்ளிக்கிழமை காலை சுமங்கலி பூஜை.
விளக்குப் பூஜை நடைபெறும்.



அத்துடன் ஆடிச்செவ்வாய் மாலை 5:30 மணி சிறப்புபூஜை நடைபெறும்.
அனைத்து சக்திகளும் அன்னையின் அருளைப்பெற்றுய்யுமாறும்.
அத்துடன் தேசிக்காய், வேப்பிலை, பூக்கள்
அன்புடன் அன்னைக்கு சமர்ப்பிக்கலாம்.

Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergics
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

முன்பக்கத் தொடர்ச்சி:-

## அவசியமற்ற மிருகத்தனத்தை அரசியலில் பயன்படுத்த வேண்டாம் என்கிறார் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ்

தற்போதைய இக்கட்டான அரசியல் சூழ்நிலையில் மக்களுக்காகப் போராடும் போராட்டக்காரர்கள் மீது, அவசியமற்ற மிருகத்தனத்தை அரசியலில் பயன்படுத்த தமது உத்தியோபூர்வ டுவிட்டர் பதிவில் அவர் இதனை குறித்துள்ளார் என்றும் அத்துடன் இராணுவத்தளபதி மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கும் மின்னஞ்சல்களை அனுப்பியுள்ளதாகவும் அறியப்படுகின்றுத.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தனது பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியைபொறுப்பேற்ற 24 மணி நேரத்திற்குள் ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தன்னை ஒரு சர்வாதிகாரியாக வெளிப்படுத்தியுள்ளார். எனவே அவரிடம் நான் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன்.தேவையில்லாத மிருகத்தனத்தை அரசியலில் பிரயோகித்து எமது நாட்டிற்கு பாதகம் செய்ய வேண்டாம் என்றும் நாட்டின் மீதான சர்வதேச பிம்பத்திற்கும் வலுப்படுத்த வேண்டாம் என்றும் சாலிய பீரிஸ் கூறியுள்ளார்.

தற்போது கொழும்பு - காலிமுகத்திடலில் அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கை குறித்து அவர் வெளியிட்ட விசேட செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், ரணில் விக்கிரமசிங்கவின் அராஜகப்போக்கிற்கு கண்டனம் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க தனது டுவிட்டர் பதிவில் அவருக்கு எதிர்ப்பை தெரிவித்துள்ளார். தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் ‘தாராளவாத ஜனநாயகவாதி’ என்ற தனது பிம்பத்தை முற்றிலுமாக அழித்து, ஒரு அடக்குமுறை சர்வாதிகாரியாக தன்னை ரணில் விக்ரமசிங்க வெளிப்படுத்தியுள்ளார் என பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

உதயன் கதிரோட்டம்

# ரணிலை ஜனாதிபதி ஆசனத்தில் அமரச் செய்தவர்களுக்கு கோடிக்கணக்கில் சன்மானம்

## ரணில் விக்கிரமசிங்க என்னும் ‘தோல்வியாளன’ வெற்றிபெற்ற சம்பவம்

இலங்கையில் மீண்டும் ஒரு தடவை அரசியல் அதிகார பீடத்தைக் கைபற்றுவதற்காக பெருமளவு நிதிப்பரிமாற்றத்தின் மூலம் சதிச் செயல்கள் அரங்கேறியுள்ளன என்பதை இவ்வாரத்தின் பதிவில் மிகுந்த வெறுப்புடன் பதிவு செய்கின்றோம்.

இலங்கையில் அரசியல் உயர் பதவிகள் அமைச்சுப் பதவிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகள் போன்றவை சாதாரணமானவை அல்ல். சாதாரண மக்களும் அடிமட்ட தொழிலாள மற்றும் விவசாயிகளும் என்ன நினைக்கின்றார்கள் என்றால். நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சர்களும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டு மக்களுக்கு சேவை செய்கின்றார்கள் என்று. ஆனால் உண்மையான நிலவரம் அதுவல்ல.

இவ்வாறான அரசியல் பதவிகள் ஆட்சி பலத்தையும் அதிகார சிந்தனையையும் பண பலத்தையும் தரவல்லன என்பதையும் அரசியல்வாதிகள் நன்கு அறிவார்கள்.

ஆமாம்! சில நாட்களுக்கு முன்னர் இலங்கையின் ஜனாதிபதியாக ‘பின்கதவால்’ தேர்ந்தெடுக்கப்பெற்ற ரணில் என்னும் ‘குள்ளநரி’யானது ஒரு கட்சிப் பலமோ அல்லது வாக்குப் பலமோ அற்ற ஒரு அரசியல்வாதி. ஆனால் ஏனைய கட்சிகளையும் சார்ந்த எம்பிக்களின் ஆதரவோடு அவர் ஜனாதிபதியாக அமர்ந்துள்ளார்.

முஸ்லிம் கட்சிகள் மற்றும் தமிழ்க் கட்சிகள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சிகள் என அனைத்து உறுப்பினர்களும் ரணிலுக்கு வாக்களித்ததன் மூலம் மீண்டும் கோடீஸ்வரர்கள் ஆகியுள்ளார்கள் என்பதை கொழும்பு ஊடகங்கள் வெளிப்படையாகவே பதிவிட்டுள்ளன.

எழுந்து நடக்க உடலில் பலமில்லாத தமிழ்த் தலைவர் சம்பந்தர் பணப் பலமும் சுகபோகங்களும் கொண்ட கொழும்பு வாழ்க்கையை தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்கு ராஜபக்சாக்களும் ரணில் விக்கிமசிங்காவும் தொடர்ச்சியாக ‘பாலம்’ அமைத்துக்கொடுத்துள்ளார்கள். அவ்வாறான ஒரு பணப் பலத்தை மீண்டும் அவர்கள் பெற்றுக்கொண்ட ஒரு நிகழ்வாகவே இலங்கை மக்கள் ரணில் விக்கிரமசிங்கா என்னும் தோல்வியாளன் வெற்றிபெற்ற சம்பவத்தை பார்க்கின்றார்கள்.

முன்னைய காலங்களில் கட்சிகள் சார்ந்த அரசியல் இலங்கையில் நிகழ்ந்த போது கட்சி சார்ந்தவர்களே பயன்பெற்றார்கள். ஆனால் தற்போது, தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளும் ‘எந்தக் கட்சி’ பதவிக்கு வந்தாலும் இலகுவாக சலுகைகளையும் சுகபோகங்களையும் பெற்றுக்கொள்ளும் பாதையம் பாலமும் அங்கு அமைக்கப்பெற்றுள்ளன.

இதற்கு உதாரணமாக கடந்த காலத்தில் இடம்பெற்ற பல அரசியல் நியமனங்கள். வாக்கெடுப்புக்கள் போன்று சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற ரணிலின் ஜனாதிபதி பதவியேற்பும் இடம் பெற்றுள்ளது என்றே நாம் பதிவு செய்கின்றோம்.

நீங்கள் குடியிருக்கும் அடுக்குமாடி வீட்டின் பழுதுகளை உங்கள் கட்டிட சொந்தக்காரர் இன்னும் சரி செய்யவில்லையா?
நாங்கள் உதவ முடியும்



உங்கள் வேண்டுகோளை இன்றே சமர்ப்பிக்கவும்:
mississauga.ca/MARC
அல்லது அழைக்கவும் 311

Mississauga Apartment Rental Compliance (MARC)
MISSISSAUGA

இந்தியா செய்திகள் India News

# "கல்வியும் மருத்துவமும் நமது அரசின் இரண்டு கண்கள்" பெருந்தலைவர் பிறந்த நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் டுவிட்

"கல்வியும் மருத்துவமும் நமது அரசின் இரண்டு கண்கள்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தமிழக முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் தமிழகம் முழுவதும் இன்று கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாப்பட்டது.

இந்நிலையில் காமராஜர் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவு வருமாறு: "பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளை கல்விவளர்ச்சிநாள் எனத் தலைவர் கலைஞர் அறிவித்ததே, நாம் கல்வி பெற்றிட அவர் முன்னெடுத்த திட்டங்களைத் தலைமுறைகள் தாண்டியும் எடுத்துக்கூறும்! போராடிப் பெற்ற கல்வி உரிமையால், அறிவார்ந்த நற்சமுதாயமாய் விளங்கிடுவோம்! கல்வியும் மருத்துவமும் நமது அரசின் இரண்டு கண்கள்! தரமான கல்வியும் மருத்துவமும் அனைவருக்கும் கிடைத்திடும் வகையில் நாம் செயல்படுத்தி வரும் திட்டங்களை இன்னும் செம்மைப்படுத்திடப் பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளில் உறுதிகொள்வோம்."

இவ்வாறு அவர் அந்தப் பதிவில் கூறியுள்ளார்.



# தவத்திரு ஊரன் அடிகள் மறைவு! தமிழர்களுக்குப் பேரிழப்பாகும்


## உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கை



தவத்திரு ஊரன் அடிகள் மறைந்த செய்தி தமிழ்கூறும் நல்லுலகை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. வள்ளலார் அவர்களின் சன்மார்க்க நெறியை பரப்பும் நோக்கத்துடன் துறவறம் பூண்டு அரை நூற்றாண்டுக் காலத்திற்கும் மேலாக வடலூரிலேயே வாழ்ந்து தமிழகம் மட்டுமல்ல, கடல் கடந்து தமிழர்கள் வாழும் நாடுகள் அனைத்திற்கும் சென்று வள்ளலாரின் புகழையும், அவர் வழங்கிய திருவருட்பா நெறியையும் பரப்பும் சீரியத் தொண்டினை ஆற்றியப் பெருமைக்குரியவர் ஊரன் அடிகளார் ஆவார்.

அவரின் மறைவு சன்மார்க்க அன்பர்களுக்கு மட்டுமல்ல, தமிழர்கள் அனைவருக்குமே பேரிழப்பாகும். அவரின் பெரு விருப்பமான வள்ளலார் அவர்கள் நிறுவிய சத்திய சன்மார்க்க சபை மற்றும் நிறுவனங்கள் இருக்கும் வடலூரை புனிதத் தலமாக அறிவித்து அங்கு மதுக்கடைகளோ, புலால் உணவகங்களோ இல்லாமல் செய்வதற்கும், இந்த நிறுவனங்கள் அனைத்தையும் இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழிருந்து விடுவித்து சுயாதிக்க அமைப்பாக செயல்பட அனுமதிக்கும்படியும் தமிழக முதல்வரை வேண்டிக்கொள்கிறேன்.

அன்புள்ள,



(பழ. நெடுமாறன்)
தலைவர்.

# உள்ளாடைகளை அகற்றினால்தான் தேர்வெழுத அனுமதி..கேரளாவில் மாணவிகளுக்கு நடந்த அநீதி



எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ் உள்ளிட்ட இளங்கலை மருத்துவப்படிப்புகளுக்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வான நீட் தேர்வு இந்தியா முழுவதும் நடைபெற்றது. இதற்காக வழிகாட்டுதல்களை தேசிய தேர்வு முகமை வெளியிட்டது. வழிகாட்டு நெறிமுறைகளில் ட்ரெஸ் கோட் எனப்படும் ஆடை கட்டுப்பாடும் அறிவிக்கப்பட்டது. அதன்படி நீண்ட கைகளுடன் (புல் ஹேண்ட்) கூடிய லேசான ஆடைகள் அணிந்திருக்கும் மாணவர்களுக்கு தேர்வெழுத அனுமதியில்லை. குறைந்த குதிகால் (ஹீல்ஸ்0 கொண்ட செருப்புகள் மற்றும் செருப்புகள் அனுமதிக்கப்படும், ஹுக்களுக்கு அனுமதியில்லை. பர்சுகள், கண்ணாடிகள், கைப்பைகள், பெல்ட்கள், தொப்பிகள் போன்ற பொருட்கள் தடைசெய்யப்பட்டுள்ளன. 4. கைக்கடிகாரம், கைக்கடிகாரம், வளையல், கேமரா, ஆபரணங்கள் மற்றும் உலோகப் பொருட்களும் தடைசெய்யப்பட்டுள்ளன. பெண் வேட்பாளர்களை சோதனையிடுவது பெண் ஊழியர்களால் மட்டுமே மூடப்பட்ட அடைப்புக்குள் செய்யப்படும் போன்ற கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டன.

இந்த நிலையில், கேரள மாநிலத்தில் உள்ள கொல்லம் நகரில் அமைக்கப்பட்டிருந்த நீட் தேர்வு மையத்தில், மாணவிகளின் உள்ளாடைகளை அகற்ற வலியுறுத்தப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மாணவிகளின் உள்ளாடைகளில் உலோக ஹுக்குகள் இருப்பதால் அவர்களை தேர்வு மையத்தில் அனுமதிக்கமுடியாது என அதிகாரிகள் மறுத்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக நீட் தேர்வு எழுதிய மாணவியின் தந்தை காவல்நிலையத்தில் புகார் ஒன்றை அளித்துள்ளார். அதில் "என் மகள் பல மாதங்கள் நீட் தேர்வுக்கு தயாரான நிலையில், இது போன்ற மனு அழுத்தம் காரணமாக சரியாக தேர்வு எழுதவில்லை. என மகள் அழுதுகொண்டே வெளியே வந்தாள்" எனக் கூறியுள்ளார். இந்த சம்பவம் கேரளத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# அதிகரித்து வரும் மின்னணுக் கழிவுகள் – இந்தியாவின் எதிர்காலம் என்ன?



செல்போன், டிவி, லேப்டாப், கணினி, ப்ரிட்ஜ், வாஷிங் மெஷின், ஸ்மார்ட் வாட்ச் என மின்சாரத்தைக் கொண்டு பயன்படுத்தப்படும் அனைத்து மின்னணு சாதனங்களையும் குறிப்பிட்ட காலம்வரை மட்டும்தான் நாம் பயன்படுத்த முடியும். அதன் ஆயுட்காலம் முடிந்தபின், அதாவது அதனை நாம் பயன்படுத்துவதை நிறுத்தியபின் அவை அனைத்தும் மின்னணுக் கழிவுகளாக மாறிவிடும். மின்னணுக் கழிவுகள் பொதுவாக முறையாக மறுசுழற்சி செய்யப்பட வேண்டும். ஆனால், இந்தியாவில் அப்படியல்ல. மிகக்குறைந்த அளவிலான மின்னணுக் கழிவுகளே முறையாக மறுசுழற்சி செய்யப்படுகின்றன. இந்தியா மட்டுமன்றி, உலகளவிலும் இதுவே நிலைமை. உலகம் முழுவதும் வருடத்துக்கு சுமார் 5 கோடி டன்களுக்கும் அதிகமான மின்னணுக் கழிவுகள் உற்பத்தியாகின்றன.

சரியாகச் சொல்லவேண்டுமென்றால், உலகளவில் உற்பத்தியாகும் மொத்த மின்னணுக் கழிவுகளில் சுமார் 10 சதவிகிதம் மட்டுமே சரியான முறையில் மறுசுழற்சி செய்யப்படுகின்றன. மீதமுள்ள 90 சதவிகித மின்னணுக் கழிவுகள் நிலத்திலோ அல்லது நீரிலோ கொட்டப்பட்டு நிலத்தையும், நீரையும் மாசுபடுத்திக் கொண்டிருக்கின்றன. அவை காற்றிலும் தனது தாக்கத்தை ஏற்படுத்தி, அதிலும் தீங்கை ஏற்படுத்துகிறது. இந்தியாவைப் பொருத்தவரை கடந்த 2017 லிருந்து 2020ம் ஆண்டுவரை, 3 ஆண்டுகளில் மட்டும் சுமார் 25 லட்சம் டன் மின்னணுக் கழிவுகள் உற்பத்தியாகியுள்ளன. இதன்படி பார்த்தால், 2017-18ம் ஆண்டில் 7,08,445 டன்களும், 2018-19ம் ஆண்டில் 7,71,215 டன்களும், 2019-20ம் ஆண்டில் 10,14,961.21 டன் மின்னணுக் கழிவுகளும் உற்பத்தியாகியுள்ளன. உற்பத்தியான 25 லட்சம் டன் மின்னணுக் கழிவுகளில் சுமார் 53.218 சதவிகித கழிவுகள் மறுசுழற்சி செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதே நிலை தொடர்ந்தால் நிலம், நீர், காற்றுமாசு என சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்பட்டு இந்தியாவின் எதிர்காலம் கேள்விகுறியாகிவிடும்.

மின்னணுக் கழிவுகளால், ஒவ்வொரு ஆண்டுக்கு 20 கோடிக்கும் அதிகமானோர் பாதிக்கப்படுவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. நிலம், நீர், காற்று மட்டுமின்றி ஒவ்வொரு உயிர்களுக்கும் கொடிய நோய்களை உருவாக்கும்.

# மாணவியின் மூக்கில் ரத்தம் வடிய வைத்த "நீட் அரக்கன்"



நீட் என்னும் அரக்கத்தனமான தேர்வினால் மாணவர்கள் சித்ரவதைக்கு ஆளாக்கப்படுவதற்கு எல்லையே இல்லாமல் போய் விட்டது. திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூரில் தேர்வு மையத்திற்கு வந்த நன்னிலம் மாணவி ஒருவரிடம் மூக்குத்தியை கழற்றச் சொன்னார்கள். அவர் சிரமப்பட்டு கழற்றியபோது மூக்கில் இருந்து ரத்தம் வழிந்தது.

உடனே பதறிப் போன தந்தை அருகில் உள்ள அடகுக்கடைக்கு அழைத்துச்சென்று, சிறுகருவியின் உதவியால் மூக்குத்தியை கழற்றி, தேர்வு மையத்திற்கு மகளை அனுப்பி வைத்தார்.

# மன்னார் மாவட்டத்தில் இருந்து வெளிநாடு செல்பவர்களுக்கு விசேட அதி சொகுசு பேருந்து சேவை ஏற்பாடு

இலங்கை செய்திகள் Sri Lanka News



மன்னார் மாவட்டத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்து கொழும்பு ஊடாக மன்னாரிற்கு வருகின்றவர்களுக்குமான விசேட போக்குவரத்து சேவை யை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டிமெல் ஏற்பாடு செய்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிற நிலையில் வெளிநாடுகளிலிருந்து அதிகமானோர் மன்னார் மாவட்டத்திற்கு வருகை தருகின்றனர்.

இவ்வாறு கொழும்பிலிருந்து மன்னார் மாவட்டத்திற்கு வருவதற்கு அல்லது மன்னார் மாவட்டத்தில் இருந்து கொழும்பிற்கு செல்வதற்கு சராசரியாக 70 லிட்டர் எரிபொருள் தேவைப்படுகிறது. இது வரையில் வெளிநாடு செல்பவர்களுக்கு உதவிகள் செய்யப்பட்டிருந்தது.

ஆனால் இனி வரும் காலங்களில் எவ்வளவு தொகை ஒரு தனி நபருக்கு செலவிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதால் அரசாங்க அதிபர் திருமதி. ஸ்டான்லி டிமெல் சொகுசு பேருந்து முகாமையாளர் இடம் தொடர்பு கொண்டு இவ்வாறு வெளிநாடு செல்பவர்களுக்கு அல்லது வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் கொழும்பிலிருந்து மன்னாருக்கு வருவதற்கு அதி சொகுசு பேருந்து சேவை ஒன்றை ஏற்பாடு செய்துள்ளார்.

அந்த வகையில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் கொழும்பிலிருந்து மன்னார் மாவட்டத்திற்கும்,ஞாயிறு, செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் மன்னாரிலிருந்து கொழும்பிற்கு செல்வதற்காக ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு செல்பவர்கள் 0774902440 என்ற தொலைபேசியின் ஊடாக தொடர்பு கொண்டு ஆசனங்களை பதிவு செய்து கொள்ள முடியும்.

அண்மைக்காலமாக மன்னாரில் இருந்து கொழும்புக்கு 1 லட்சம் ரூபாவும், பேசாலையில் இருந்து கொழும்பிற்கு 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் கூலியாக அறவிடபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர் (18-07-2022)

# காலி முகத்திடல் "அரகலய" போராட்டக் குழுவினரின் பிரதிநிதிகள் ரிஷாட் பதியுதீன் குழுவினருடன் சந்திப்பு





காலி முகத்திடல் “அரகலய” போராட்டக் குழுவினரின் பிரதிநிதிகள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்களை திங்கட்கிழமை (18) கட்சி அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, எதிர்வரும் புதன்கிழமை (20) புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வது தொடர்பில், “அரகலய” பிரதிநிதிகள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

அத்துடன், அவர்கள் அரசியல், சமூக, பொருளாதார விடயங்களில் தமது கருத்துக்களையும், தாம் கொண்டிருக்கும் திட்டங்களையும் வெளிப்படுத்தியதோடு, அது தொடர்பான ஆவணத்தையும் கையளித்தனர்.

தொடர்ச்சியாக அரசியல் கட்சிகளுடன் “அரகலய” போராட்டக் குழுவினர் நடாத்தி வரும் பேச்சு வார்த்தையின் ஒரு கட்டமாகவே இந்த சந்திப்பு இடம்பெற்றது.

- மன்னார் நிருபர் (18-07-2022)

MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ் தலைமைகள் மிக நிதானமாக செயல்பட வேண்டும் – இல்லையேல் கோட்டாவின் நிலை எதிர்காலத்தில் ஏற்படும்

## தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கம்



நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான அரசியல் ஸ்திரத்தன்மை அற்ற சூழலை மிகவும் நிதானமாகவும் பொறுமையுடனும் பொறுப்புடனும் தமிழ்த் தலைமைகள் கையாள வேண்டும் என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் வெள்ளிக்கிழமை (15) மாலை ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், தமிழ் மக்களின் நீண்ட கால பிரச்சினைக்கு தீர்வு காணக் கூடிய வழிகளை எட்டுவதற்கு இந்த இக்கட்டான சூழ்நிலையை எமக்கு சாதகமாக பயன்படுத்த வேண்டும். இது தான் தமிழ்த் தலைமைகளின் புத்திசாதுர்யமான அறிவார்ந்த அணுகுமுறை ஆகும்.

கடுமையான பொருளாதார நெருக்கடி நிலையில் கூட தமிழ்க் கட்சிகள் தற்சார்பு பொருளாதார முறையை மேற்கொள்ள தமிழ் மக்களை ஊக்குவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு.

மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியலை முன்னெடுக்காமல் அரசியல் மயப்படுத்தப்பட்ட வெறும் வாக்காளர்களாகவே தமிழ் மக்களை தமிழ் கட்சிகள் நோக்குகின்றன. இதனால் இடைவெளி அதிகமாகின்றது.

தென்னிலங்கையில் நடைபெறும் "கோட்டா கோ கம" போராட்டம் ஒரு தொலைநோக்கு சித்தாந்த போராட்டம் அல்ல. அந்த போராட்டக்காரர்களால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை புரிந்து கொள்ளவோ, ஏற்றுக்கொள்ளவோ, தயாராக இருப்பதாக தெரியவில்லை.

இந்த போராட்ட பின்னணியில் அரசியல் கட்சிகளான ஜே.வி.பி., முன்னிலை சோசலிச கட்சி, சில அரசியல்வாதிகள், அமைப்புக்கள், ஒரு சில சிங்கள சிவில் அமைப்புகள் காணப்படுகின்றன. எனவே நெறிமுறை ஒழுங்கு கூட போராட்டத்தில் பின்பற்றப்படவில்லை.

இவர்களினால் கைப்பற்றப்பட்ட அலுவலகங்களில் நடந்து கொண்ட முறை யாவரையும் விசனத்திற்குட்படுத்தியது! எனவே இதில் உள்ள அரசியல் கட்சிகள் தமது விருப்பை நிறைவேற்றுவதில் இலக்காக உள்ளனர்.

குறிப்பாக ஜே.வி.பி தான் இந்த நாட்டில் தமிழருக்கு எதிராக மிகப்பெரிய அளவில் இனவாதத்தை தூண்டி, வடகிழக்கை பிரித்து, சுனாமி கட்டமைப்பை முடக்கி, பல சூழ்ச்சிகளை எமக்கு எதிராக மேற்கொண்டவர்கள் தமிழ் மக்களுக்கு மிக ஆபத்தானவர்கள். இவர்களது சிந்தனையை நாம் ஆதரிக்கலாமா?

எமது இனத்திற்கு எதிரான அரசியலை மேற்கொள்வதை விடுத்து "கோட்டா கோ கம வை" கூட்டமைப்பு ஆதரிப்பது முற்றிலும் அரசியல் முதிர்ச்சியற்ற செயலாகும்.

தேர்தல் அரசியலில் எவரும் உத்தமர் இல்லை. தற்போதைய அரசியலில் எவரும் காமராஜர் இல்லை. அரசியல் என்பது அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் என்ற மாக்கியவல்லியின் கூற்று முற்றிலும் சரியானது. அதை அனைவரும் அவ்வப்போது நிரூபித்து வருகிறார்கள்.

ஜனநாயகம் என்பது லெனின் கும்பல் ஆட்சி என்றால் பாராளுமன்றம் பன்றிகளின் தொழுவம் என்றான். ஆகவே ஆட்சி தத்துவ முறைமைகள் எல்லாம் கேலிக்கூத்தான வையே. இதில் நல்ல ஜனநாயகம், கெட்ட ஜனநாயகம், நல்லவர், கெட்டவர், என்ற எந்த விளக்கமும் இருப்பதாக தெரியவில்லை.

பொருள்முதல்வாதம் பதவி முதல் வாதமே. அரசியலின் மூலதனம் இதில் நீதி நியாயம் எல்லாம் வெறும் வார்த்தைகளே.

இனவாதமும் பௌத்த தேசியவாதமும், யுத்த வெறிவாதமும் தான் சிங்கள ஆட்சி யாளர்களின் தாரக மந்திரம். அதனால் தான் சிங்கள பௌத்த ஆட்சியை எவராலும் அழிக்க முடியாது என்றார் கோட்டா கோ கம போராட்ட பிரதானிகளில் ஒருவரான ஓமல்பே சோபித்த தேரர். ஆகவே இந்த போராட்டத்தை ஆதரிக்கும் கூட்டமைப்பு தேரரை கண்டிக்காமல் அமைதியாக இருக்கிறது.

ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச இனப்படுகொலையாளி. அவரை அரசியலில் இருந்து அகற்றுவது மட்டுமல்ல சிறைக்கு அனுப்ப வேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

எனவே பலராலும் நிராகரித்த 13ம் சரத்தை அமல்படுத்தக் கோரி இந்தியாவுக்கு கடிதம் எழுதி பெரு நாடகம் நடத்திய தமிழ் கட்சிகள் இந்த இக்கட்டான சூழலை தமிழ் மக்களுக்கு சாதகமாக பயன்படுத்தாமல் அமைதி காப்பதும் தென்னிலங்கை அரசியலில் ஈடுபடுவதும் வேடிக்கையாக உள்ளது.

கோட்டா கோ கம போராட்டம் ஒரு அறிவுபூர்வமான போராட்டம் இல்லை. அது வெறும் தலைமையற்ற அத்தியாவசிய தேவைக்கான உணர்ச்சிகரமான அரசியல் கட்சிகளின் விருப்பு வெறுப்பு போராட்டம். இதை தமிழ் மக்கள் ஆதரிப்பதிலோ, எதிர் பார்ப்பிலோ எந்த பயனும் இல்லை. அதை கண்டுகொள்ளவே தேவையில்லை. அது அவர்களின் பிரச்சனை.

ஆகவே கடந்த பதின்மூன்று (13) ஆண்டுகள் தமிழ் கட்சிகள் எந்த சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தாமல் ஆக்கபூர்வமாக சிந்தித்து செயலாற்ற வில்லை எனும் பொதுவான குற்றச்சாட்டை மறுக்கமுடியாத உண்மை என நிரூபித்து வருகிறார்கள். எனவே இனியாவது உங்களுக்குள் ஐக்கியப்பட்டு தூரநோக்கோடு தமிழ் மக்களின் விடுதலை அரசியல் இலக்கை அடைவதற்கு செயலாற்ற வேண்டும்.

இல்லையேல் கோட்டாவின் நிலை தமிழ் அரசியல் வாதிகளுக்கும் எதிர்காலத்தில் ஏற்படலாம். தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**- மன்னார் நிருபர்**




# பின் வாசல் வழியாக ஒரு வெற்றி

சிவா பரமேஸ்வரன் - மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்

*எத்தனைக் காலந்தான் ஏமாற்றுவார்*
*இந்த நாட்டிலே - இன்னும்*

*எத்தனைக் காலந்தான் ஏமாற்றுவார்*
*இந்த நாட்டிலே சொந்த நாட்டிலே நம் நாட்டிலே*

*சத்தியம் தவறாத உத்தமன் போலவே நடிக்கிறார்*
*சமயம் பார்த்துப் பல வகையிலும் கொள்ளை அடிக்கிறார்*

*பத்தனைப் போலவே பகல் வேஷம் காட்டி*
*பாமர மக்களை வலையினில் மாட்டி (எத்தனை)*

*திரைப்படம்: மலைக்கள்ளன், பாடலாசிரியர்: தஞ்சை என் ராமையாதாஸ் இசை: எஸ் எம் சுப்பையா நாயுடு, பாடியவர்: டி எம் சௌந்தரராஜன் நடிகர்கள்: எம் ஜி ஆர், பானுமதி*



என்னை மிகவும் கவர்ந்த பாடல்களில் இதுவும் ஒன்று. தமிழ் திரையுலகத்தில் அமரத்துவம் வாய்ந்த ஆயிரக்கணக்கான பாடல்களில் இது முதல் நூறு பாடல்களிலாவது இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இந்த பாடல்களில் உள்ள வரிகள் அனைத்தும் இப்போது இலங்கையில் நடைபெற்றுள்ளவற்றிற்கும் மிகவும் பொருந்தும். "இன்னும் எத்தனை காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே.....

இலங்கையில் போர் முடிந்து 10 ஆண்டுகளுக்குப் பிறகு அப்பட்டமான மனித உரிமைமீறல்கள்மற்றும் ஆயிரக்கணக்கானவர்களின் உயிரிழப்பு, கையளிக்கப்பட்ட மற்றும் சரணடைந்த ஏராளமானவர்கள் என்ன ஆனார்கள் என்பது இன்றளவும் தெரியாத நிலையில், அந்த போர் வெற்றியின் பின்னணியில் வெற்றி பெற்ற கோத்தாபய ராஜபக்ச, அவருக்கு வாக்களித்த சிங்கள மக்களாலேயே பதவியிலிருந்து அகற்றப்பட்டு நாட்டிலிருந்தும் விரட்டப்பட்டார். ராஜபக்ச குடும்பத்திற்கு எதிராக "அரகலிய" போராட்டம் வலுத்த நிலையில், மகிந்த ராஜபக்ச பதவி விலகும் நிலைக்கும் தள்ளப்பட்டார். இதையடுத்து சர்ச்சைக்குரிய வகையில் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக நியமித்தார் கோத்தாபய ராஜபக்ச மக்கள் புரட்சியால் கோத்தா விரட்டப்பட இடைக்கால அதிபராக ரணில் பொறுப்பேற்றார். இதையடுத்து சமூக ஊடகங்களில் "ஜனநாயக நடைமுறைகளுக்கு மாறாக, தார்மீக நெறிமுறைகளை மீறி" ரணில் தற்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக வியாழக்கிழமை (21) அன்று பொறுப்பேற்றார்.

கோத்தாபய ராஜபக்சவின் பதவிக்காலம் எஞ்சியிருக்கும் வரையில் மட்டுமே அதாவது 2024 நவம்பர் மாதம் வரையில் மட்டுமே ரணில் பதவி வகிக்க முடியும். ஆனால் அதற்கு முன்னர் தேர்தலொன்று வருமா, வந்தால் அதில் போட்டியிடுவாரா, போட்டியிட்டாலும் வெற்றிபெறுவாரா என்று பல கேள்விகள் உள்ளன. ஆனால், அவை அவற்றையெல்லாம்விட பெரிய கேள்வி அவர் இப்போது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முறை. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அவர் போட்டியிட்ட கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் அவர் தோல்வியடைந்தார். அவர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில் ஒரு இடத்தில் கூட வெல்ல முடியவில்லை. ஏதோ தப்பித்தோம் பிழைத்தோம் என்ற வகையில் நூலிழையில் தேசியப் பட்டியலில் ஐக்கிய (மில்லாத) தேசியக் கட்சிக்கு ஒரு இடம் கிடைக்க, அதை யாருக்கு அளிப்பது என்கிற இழுபறி ஆறு மாதங்கள் சென்ற நிலையில், அவர் தன்னைத்தானே அந்த இடத்திற்கு நியமித்துக் கொண்டார். பிறகு, ஒரு நபர் கட்சி என்று விமர்சிக்கப்பட்ட அவர் மறைமுகமாக ராஜபக்சக்களுடன் நெருக்கம் காட்ட ஆரம்பித்தார். இது குறித்து பல சந்தேகங்களும் விமர்சனங்களும் எழுந்தன.

இதேவேளை இரண்டாம் ராஜபக்ச ஆட்சியில் குளறுபடிகளும் குழப்பங்களும் அதிகரித்து, திறமையற்ற நிர்வாகம் காரணமாக நிதி நெருக்கடி மோசமாகி மக்கள் அன்றாட வாழ்வாதாரம் அதலபாதாளத்திற்குச் சென்றது. மக்கள் உணவு, எரிபொருள் போன்றவற்றிற்கு அல்லாடும் நிலை இன்றளவும் தொடரும் வேளையில், நாடாளுமன்ற உறுப்பினராக பின் வாசல் வழியாக வந்த ரணில் விக்ரமசிங்க நாட்டின் பிரச்சனைகள் குறித்து ஒரு முன்னாள் பிரதமர் என்கிற வகையில் எந்த கருத்து, கண்டனம் வெளியிடாமல் வாய்மூடி மௌனமாகவே இருந்தார். நாளுக்கு நாள் மக்களின் இன்னல்கள் அதிகரிக்க எந்த சிங்கள மக்கள் கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதி ஆக்கினார்களோ அவர்களே வீதியில் இறங்கிப் போராடத் தொடங்கினர். "அரகலிய" என்றழைக்கப்பட்ட அந்த மக்கள் புரட்சி வெடித்த போதும் ரணில் மௌனமாகவே இருந்தார்.

அவர் பிரதமராக தேர்நெடுக்கப்பட்ட போது எழுந்த கருத்துக்கள் கவனிக்கத்தக்கவை. அதாவது ராஜபக்சக்களுக்கு மறைமுகமாக ஆட்சி செய்ய ஒரு நபரும், ரணிலுக்கு மறைமுகமாக ஆட்சியில் இருக்க ஒரு கட்சியும் தேவைப்பட்டது என்று அந்த கருத்துக்கள் கூறின. அது இப்போது உண்மையாகியுள்ளது.

அவர் முதல் முறையாக நாடாளுமன்றம் நுழைந்தது 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி. சரியாக 45 ஆண்டுகளுக்குப் பின்னர் அதே ஜூலை 21 ஆம் திகதி அவர் நேரடியாக மக்களால் தேர்வு செய்யப்படாமல் அரசியல் யாப்பிலுள்ள வழியைப் பயன்படுத்தி, தனது கட்சியின் சார்பில் இல்லாமல், யாரை எதிர்த்து 45 ஆண்டுகாலம் அரசியல் செய்தாரோ, அந்த கட்சியின் ஆதரவுடன், நாடாளுமன்றத்தில் தனது கட்சியின் சார்பில் ஒரே உறுப்பினராக இருந்து பிரதமரானவர் இன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட 8 ஆவது ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டுள்ளார்.





ஜனாதிபதியாக தெரிவான பிறகு அவர் கூறுகிறார், "ராஜபக்சக்கள் எனது நண்பர்கள் அல்ல"! அப்படியானால் அவருக்கு வாக்களித்தவர்கள் யார்? அவரைத் தவிர அவருக்கு வாக்களிக்க அவரது கட்சியில் யாருமில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சக்தி போன்றவை டலஸ் அழகபெருமவை ஆதரிப்பதாக அறிவித்தன. ராஜபக்சக்களால் உருவாக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் மிகப் பெரும்பான்மையான பலத்துடன் இருக்கும் மொட்டுக் கட்சியினரே அவரை இன்று பதவியில் அமர வைத்துள்ளனர். ராஜபக்சக்கள் அவரது நண்பர்கள் இல்லையென்றால் மொட்டுக் கட்சியினர் அவருக்கு வாக்களித்திருப்பார்களா? என்னதான் நாடாளுமன்றத்தில்நடைபெற்ற இந்த தேர்தல் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் இடம்பெற்றாலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களால் தான் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது உலகறிந்த உண்மை. இதனிடையே "எமது கட்சி வேட்பாளரான டலஸ் அழகபெரும தோல்வியடைந்துவிட்டார், எனினும் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பு மற்றும் உறுப்பினர்களின் தெரிவு ஆகியவற்றை மதிக்கிறோம்" என்று "சூத்திரதாரி" மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களிடம் கூறினார்.

உடனடியாக "அவர் ஊதுகிறதும், இவர் ஆடுகிறதும்" என்று மக்கள் விமர்சிக்கத் தொடங்கிவிட்டனர்.

இதனிடையே நடைபெற்ற ஜனாதிபதி தெரிவை தான் புறக்கணிக்கப் போவதாக முதலாவதாகக் கூறிய வடக்கு மாகாண முன்னாள் முதல்வரும், உச்சநீதிமன்ற நீதியரசருமாக இருந்த சி வி விக்னேஸ்வரன், ரணிலை ஆதரித்து வாக்களிக்கப் போவதாக அறிவித்து அவ்வாறே செய்தார். அவர் சொல்லும் செயலுக்கும் இடையே என்ன நடந்தது அந்த இறைவனுக்கே வெளிச்சம். அதே போன்று கொழும்பில் என்ன நடந்தாலும் அதை எதிர்ப்பது மட்டுமே தமது அரசியல் நிலைப்பாடு என்று கொண்டுள்ள அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் இரண்டு வேட்பாளர்களும்





சொன்னபடி இந்த தெரிவை புறக்கணித்தனர். அதனால் அவர்களுக்கோ, தமிழ் மக்களுக்கோ அல்லது நாட்டிற்கோ என்ன இலாபம் என்பது அவர்கள் இருவரிடமே கேட்க வேண்டும்.

ஆனால் ரணிலும் பதவியிலிருந்து விலகும்வரை தமது போராட்டம் தொடரும் என்று காலிமுகத் திடல் போராட்டக்காரர்கள் உறுதியாக அறிவித்துள்ளனர். பொதுமக்கள் பாதுகாப்பு என்ற பெயரில் அந்த போராட்டத்தை ஒடுக்க அனைத்து வழிகளையும் ரணில் பயன்படுத்துவார் என்பது உறுதி. அவர் மிகவும் விரும்பிய பதவியை, நேரடி தேர்தல் மூலம் பெற முடியாத பதவியை, எதிர்பாராத திருப்பங்கள் காரணமாக, அரசியல் யாப்பின் ஒரு ஷரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தின் மூலமாக தெரிவான அவர் சுலபமாக அந்த பதவியை விட்டுக்கொடுக்க மாட்டார், அதை தக்க வைத்துக்கொள்ள அனைத்தையும் அவர் செய்வார் என்பது அவரை அறிந்தவர்கள் மற்றும் அவரது அரசியலை அவதானித்தவர்களுக்கு தெரியும், புரியும். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பிரிவை ஏற்படுத்தி, அதை பலவீனமாக்கி இறுதியில் அவர்கள் அழித்தொழிக்கப்பட்டத்தில் ரணிலின் பங்கு கணிசமானது என்பது வரலாறு.

சரியோ, பிழையோ அவர் இப்போது நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி. "நல்லாட்சி அரசு" என்று அவரும் மைத்திரிபால சிறிசேனவும் செய்த ஆட்சியின் போதுதான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க அரசியல் யாப்பில் 19 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. இப்போது குறைந்தபட்சம் அதையாவது செய்வாரா ரணில் என்கிற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

அவர் ஆட்சியில் இருக்கக் கூடிய அடுத்த 28 மாதங்களில், சிறுபான்மை மக்களால் அதிலும் குறிப்பாக தமிழ் மக்களால் பெரும்பாலான நேரங்களில் ஆதரிக்கப்பட்ட அவர் சில குறைந்தபட்ச விஷயங்களையாவது போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செய்வாரா என்று கேள்வியும் எழுந்ததில்லை. இராணுவம் இன்னும் நிலை கொண்டுள்ள பொதுமக்களின் காணிகளையாவது அவர் விடுவித்துக் கொடுத்தும், அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் காத்திரமான முன்னெடுப்பு ஆகியவற்றை குறைந்தபட்சமாகச் செய்வாரா. அப்படிச் செய்தால் அவரது பின் வெற்றியின் களங்கம் ஓரளவுக்குத் துடைக்கப்படலாம்.

இதேநேரம் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட டலஸ் அழகபெருமவின் பின்புலமும் மக்கள் அறிந்ததே. ராஜபக்சக்களின் நெருங்கிய கூட்டாளியாகச் செயற்பட்டு பேரினவாத கொள்கைகளை முன்னெடுத்தவர் என்பதில் ஐயமில்லை அதில் மாற்றுக் கருத்துக்களும் இல்லை. தெரிவில் போட்டியிடுவதாக அறிவித்துவிட்டு பிறகு டலஸுக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்த சஜித் பிரேமதாஸ மீதும் மக்கள் அதிருப்தியில் உள்ளனர். இலங்கையில் ஜனநாயகம் தழைக்க வேண்டுமாயின், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு அதற்கான தேர்தல் நடைபெற வேண்டும். அதற்கு முதல் படியாக ஜெ ஆர் ஜெயவர்தன கொண்டுவந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும், அதற்கு இதயசுத்தியுடன் ரணில் செயல்பட வேண்டும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதியாகவோ அல்லது நாடாளுமன்ற பெரும்பான்மை மூலம் பிரதமராகவோ ரணில் வந்தால் மட்டுமே அவரது பின் வாசல் வெற்றி களங்கம் நீங்கும்.

தஞ்சை ராமையாதாஸ் அவர்கள் மலைக்கள்ளன் படத்திற்கு அமரத்துவமான அந்த பாடலை எழுதுவதற்கு முன்னரே மகாகவி பாரதியார் நூறாண்டுகளுக்கு முன்னரே எழுதிவிட்டான்

நெஞ்சு பொறுக்குதில்லையே -
இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்...



# ஜனாதிபதி தேர்தல்: கூட்டமைப்பில் உட்கட்சி குழப்பம்?

**- யாழ்ப்பாணத்தில் இருந்து நடராசா லோகதயாளன்**



ஒரு வழியாக ரணில் விக்ரமசிங்க தனது வாழ்நாள் இலட்சியத்தை எட்டிவிட்டார். பதவி தான் முக்கியம் அதன் பிறகு தான் ஜனநாயகம் என்பது இலங்கை, பாகிஸ்தான், மியான்மார், நேபாளம், ஆப்கானிஸ்தான் போன்ற பல நாடுகளில் இன்று யதார்த்தம்.

யாருடன் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் கூட்டணி வைத்துக் கொள்ளலாம், பேச்சுவார்த்தைகளின் போது ஒன்று பேசுவது பின்னர் வாக்கெடுப்பின் போது வேறு மாதிரி செயல்படுவதெல்லாம் தெற்காசிய அரசியலில் சாபக்கேடாகும்.

அதேபோன்று ஒரு கட்சிக்குள்ளேயே கூட்டணி தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளியாகி, கூட்டணியே முறிந்து போவதும் இந்தியா, இலங்கை ஆகியவற்றில் நடைபெற்றவையே. போதாத குறைக்கு நடைபெற்றது என்னவென்று முழுமையாகத் தெரியாமல் அல்லது புரியாமல் அல்லது தெரிந்துகொள்ள விருப்பமில்லாமல் செவிவழிச் செய்தியை மட்டுமே நம்பி செய்தி வெளியிட்டு குட்டையைக் குழப்புவதும் ஊடகங்களுக்கு கைவந்த கலையாகவுள்ளது. இதில் பெரும்பாலும் உள்நோக்கமும் இருக்கக் கூடும். அவ்வகையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் டலஸ் அழகபெரும-சஜித் பிரேமதாச ஆகியோரிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்து கசிந்த சில தகவல்களை மட்டும் வைத்துக்கொண்டு, இலங்கையின் முன்னணி ஆங்கில பத்திரிகை ஒன்று வாக்கெடுப்பன்றி காலையில், ஏதோ கூட்டமைப்பின் அனைத்து கோரிக்கைகளையும் டலஸ் ஏற்றுக்கொண்டது போலவும், உடனடியாக அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர், காணிகள் விடுவிக்கப்படும், போர் குற்றச்சாட்டுக்கு பொறுப்புக்கூறல் இடம்பெறும் என்றெல்லாம் டலஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டதாக முதல் பக்க செய்தியை வெளியிட அது சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்று கொழும்பிலிருந்து எமக்குக் கிடைக்கப்பெற்ற தகவல் கூறுகின்றன.



இதனிடையே கூட்டமைப்பிற்குள் இந்த பேச்சுவார்த்தைகளின் போது என்ன நடைபெற்றது என்பதை உதயன் கண்டறிந்தது.

இலங்கையின் 8வது ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பின் முடிவு சரியானதா தவறானதா என்பது பலரிடமும் ஓர் மிகப் பெரும் கேள்வியாகவுள்ளது.

தமிழர்களின் பிரச்சனையில் இனம் கண்ட 10 பிரச்சனைகளைத் தீர்த்து தருவோம் என முதல் தடவையாக ஓர் ஜனாதிபதி வேட்பாளரிடம் கூட்டமைப்பு எழுத்தில் வேண்டியது.

இது 2015 ஆம், 2020 ஆம் ஆண்டுகளின் பட்டறிவின் அடிப்படையில் வேண்டியதாகவும் இருக்கலாம் இருப்பினும் மைத்திரிபால சிறிசேனாவை இதயத்தால் மட்டும் நம்பி ஏமாந்து ஏறக்குறைய கழுத்தறுப்பிற்கு சமணாகவும் பல தடவை ரணிலின் வாக்குறுதியை மட்டும் நம்பி ஏமாந்து வாக்கு வங்கியின் வீழ்ச்சிக்கு வித்திட்ட பட்டறிவின் பிரதிபலிப்போ என்னவோ இம்முறை தமது நிபந்தனையை கூட்டமைப்பு எழுத்தில் கோரிப் பெற்றது.

அதாவது 2022-07-19 ஆம் திகதி அன்று இரவு கூட்டமைப்பின் கூட்டம் அதன் தலைவர் இரா. சம்பந்தன் இல்லத்தில் இடம்பெற்றபோது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ரணில் விக்கிரமசிங்கவை வீழ்த்துவதற்கு தான் இணங்கவே மாட்டன் என்பதுபோல் உரையாற்றி இறுதியில் இணங்கினார். ஆனால் ஆரம்பம் முதலே ரணிலை ஆதரிக்கவே முடியாது, ஏன் நடுநிலையாக இருக்க கூடாது என்பது சாள்ஸ் நிர்மலநாதனின் முடிவாக இருந்தது. இந்த நிலையில் அமெரிக்கா, இந்தியாவின் முடிவு என்ன என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வினாவியுள்ளார்.

இதன்போதுதான் ஆட்டம் களை கட்டியது, அவர்களின் ஒப்புதல் இல்லாமல் இந்த முடிவிற்கு செல்லவில்லையென சுமந்திரன் பதிலளித்தபோது அப்படி நீங்கள் மட்டும்தானே கூறுகின்றீர்கள் என சுமந்திரனை நோக்கி சிறிதரன் பதில் கேள்வி எழுப்பியபோது இதற்கு பதிலளித்த சுமந்திரன் இவ்வாறு கதை வரும் என்றே செல்வத்திடமும் கூறப்பட்டது என சுமந்திரன் தெரிவிக்க, சஜித் என்றால் ஆதரவளிக்குமாறே கூறப்பட்டதாக செல்வம் அடைக்கலநாதன் கூற முற்பட்டார்.

இதனால் வேறு வழியின்றி இந்திய அதிகாரி ஒருவருக்கு சுமந்திரன் உடனே தொடர்பை ஏற்படுத்தி தனது தொலைபேசியை செல்வத்திடம் வழங்கி உரையாட வைத்த பின்னர் செல்வம் அடைக்கலநாதன் தெளிவாக கூறினார் - தூதரகம் டலசிற்கே வாக்களிக்குமாறு கூறுகின்றனர் என்றார். இவற்றின் பின்பே டலஸ், சஜித், ஜி.எல். பீரிஸ் போன்றோர் நேரில் சென்று கூட்டமைப்பின் 10 கோரிக்கைக்கும் ஒப்பம் வைத்து வழங்கியதாக தகவல் வெளியானது. எனினும் இதை சுயாதீனமாக உதயனால் உறுதிப்படுத்த முடியவில்லை.

ஆனால் டலஸ் அழகபெருமவிற்கு வாக்களிக்க இந்தியா தமிழ் தேசியக் கூட்டமைப்பை அறிவுறுத்தியது என்றா செய்தியை கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் மறுத்துள்ளது. அவ்வாறான செய்தி தவறனாது, ஜனாதிபதி தேர்தலில் தாங்கள் யாருக்கும் எந்த அறிவுரையோ அல்லது ஆலோசனையோ வழங்கவில்லை என்று அதிகாரபூர்வமாக ட்வீட் செய்துள்ளனர்.

இவ்வாறெல்லாம் அமளி நடக்கும்போது சித்தார்த்தனோ கை கட்டி பார்த்த வண்ணம் இருந்தாரே அன்றி பதிலளிக்கவில்லை. அதேநேரம் என்ன முடிவு எட்டினாலும் டலஸ்சிற்கே வாக்களிப்பேன் - ஏனெனில் டலஸ் புளட் அமைப்பில் இருந்தார் என சித்தார்த்தன் முதல் நாளே தெரிவித்திருந்தார். (இருப்பினும் முடிவை மாற்றினார்.)

இதேநேரம் 10 கோரிக்கையும் ஒப்பமிட்ட பேப்பர் சுமந்திரனிடமே இருந்தபோதும் அதன் தமிழாக்கம் சி.சிறிதரனின் கைத் தொலைபேசியிலும் அது பதிவேற்றம் செய்யப்பட்டது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்ட டலஸ் நாம் தான் எழுத்திலேயே வழங்குகின்றோமே அரசு அமைந்தால் ஏன் நீங்கள் அமைச்சுப் பதவியை ஏற்க்கூடாது எனவும் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இது ஓம் என வழங்கும் உத்தரவாதம் இவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் அமைச்சராக வரலாம் என்ற போது நீங்கள் கேட்டதற்கு அதுதான் பதில் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

இவ்வாறு ஓர் தீர்மானத்தை எட்டிய நிலைமையிலும் 2022-07-20 ஆம் திகதிய வாக்கெடுப்பின்போது இலங்கையின் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 223 பேர் வாக்களிப்பில் கலந்துகொண்டனர். அதில் 04 வாக்குகள் செல்லுபடியற்றது. இதில் 134 பேர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும், 82 பேர் டளஸ் அழகம்மெருமாவிற்கும் வாக்களிக்க 03 பேர் அநுராகுமார திசநாயக்காவிற்கு வாக்களித்தனர்.

தமிழர் தரப்பில் எவருக்குமே வாக்களிக்க மாட்டேன் என முதலில் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் இறுதியில் தனது முடிவை மாற்றி ரணிலிற்கு வாக்களித்தபோதும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

இலஙபையின் வரலாற்றில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த மற்றும் போட்டியிடவே தகுதி போதாது என நிராக்கப்பட்ட ரணில் தற்போது இலங்கையின் 8 வது நிறைவேற்று ஜனாதிபதியாக தேர்வாகியுள்ளார்.

இவ்வாறு ரணில் தேர்வானதற்கு ரணிலிற்கு எதிராக வாக்களிப்பதாக தீர்மானித்த கூட்டமைப்பின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களில் நான்குபேர் ரணிலிற்கே வாக்களித்திருப்பர்கள் என தற்போது அறிய முடிகின்றது. அந்த நால்வருக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. அதன் மூலம் இலகுவில் அடையாளம் காணமுடியும்.



இவ்வாறான சூழலில் கூட்டமைப்பின் முடிவை தற்போது சிலர் விமர்சித்தாலும் முடிவு எடுக்கும் முன்போ அல்லது முடிவை அறிவித்து வாக்களிக்கும் முன்போ பதிலளிக்க துணியாது தற்போது விமர்சிக்கின்றனர் என்றும், என்ன முடிவை எட்ட வேண்டும் என ஒரு வார கால அவகாசம் இருந்தபோது வாய்திறக்கவில்லை என்ற கருத்தும் கூறப்படுகின்றது.

இதேவேளை வாக்கெடுப்பில் பங்கேற்பதில்லை என்று கூறிய விக்னேஸ்வரன் ஏன் தனது முடிவை மாற்றிக்கொண்டார் என்று கேட்டு அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதயன் சார்பில் கேட்ட முயன்றோம். எனினும் அவர் பதிலளிக்காததால் அவருக்கு நான்கு கேள்விகளை அனுப்பினோம்.



கேள்வி 01:
ஜனாதிபதி தேர்வில் நடுநிலை வகிப்பதாக அறிவித்த நீங்கள் எதன் அடிப்படையில் அந்த முடிவை மாற்றிக்கொண்டீர்கள்?.

கேள்வி 02:
ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலக வேண்டும் எனக் கோரிக்கை முன் வைக்கபடுவதோடு அவரை ஆதரித்த தங்களிற்கு எதிராகவும் போராடும் நிலைமை ஏற்படும் என சமூக ஊடகங்களில் தெரிவிக்கப்படுவது தொடர்பில் என்ன கருதுகின்றீர்கள்?.

கேள்வி 03:
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்தால் அமைச்சரவையில் பங்குகொள்வீர்களா?.

கேள்வி 04:
மாகாண முதலமைச்சராக இருந்த காலத்தில் ரணிலை நம்ப முடியாது அவர் ஒரு பொய்யர் எனத் தெரிவித்த நீங்கள் தற்போது எதன் அடிப்படையில் நம்பினீர்கள்?

எனினும் இந்த கட்டுரை இணையத்திலும் அச்சுப் பதிப்பிற்கும் செல்லும்வரை அவரது பதில் கிடைக்கவில்லை.

## வீணாவின் கவிக்கணை

உன்னோடு வாழ்ந்த நொடிகள் எல்லாம்,
காய்ந்த மரம் கூட காய்த்து
குலுங்குவது போல் இருக்கும்,
உன்னை பிரிந்த ஒரு நொடியில்
ஏனோ ஆயிரம் முட்கள் ஒன்றாய்
குத்தியது போலவும்,
இதயத்தை கைவிட்டு யாரோ
பிடிங்கி எறிந்தது போலும்
என் ஐம்புலன்களும் அடங்கி
நான் முடமாய் நிற்பது போலும்
உணர்கிறேன்அன்பரே

# கனடா இந்து

CANADA HINDU

*Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648*


# துர்க்கேஸ்வரத்தில் மகோற்சவம் ஆரம்பமாகிவிட்டது



7-7-2022 வியாழன் கொடியேற்ற காட்சிகள்



**துர்க்கேஸ்வரத்தில் தேர்த்திருவிழா**
**30-7-2022 சனி**

07-07-2022 வியாழன்
கொடியேற்றம்

## இனி வரும் திருவிழாக்கள்

கைலாசவாகனம்
12-07-2022 செவ்வாய்
இரவு 8.00 மணி

மஞ்சத் திருவிழா
16-07-2022 சனி
இரவு 8.00 மணி

வசந்தோற்சவம்
24-07-2022 ஞாயிறு
இரவு 8.00 மணி

பக்த முத்தி
பாவனோற்சவம்
26-07-2022 செவ்வாய்
இரவு 8.00 மணி

ஞானப்பால் உற்சவம்
27-07-2022 புதன்
இரவு 8.00 மணி

வேட்டைத் திருவிழா
28-07-2022 வியாழன்
இரவு 8.00 மணி

சப்பறம்
29-07-2022 வெள்ளி
இரவு 8.00 மணி

தேர்த்திருவிழா
30-07-2022 சனி
காலை 9.00 மணி

தீர்த்தம்
பூரகர்மம் ருதுசாந்தி
31-07-2022 ஞாயிறு
காலை 9.00 மணி

பூங்காவனம்
1-08-2022 திங்கள்
மாலை 6.30 மணி

வைரவர் மடை
2-08-2022 செவ்வாய்
மாலை 6.30 மணி



# ரணில் எதிர் அரகலிய?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

**தா**மரை மொட்டுக்கு தலைமை தாங்கும் யானைக்கும், யானைக்குத் தலைமை தாங்கும் தாமரை மொட்டுக்கும் இடையிலான ஒரு போட்டியில் யானைகளின் தலைவர் வென்று இருக்கிறார். ஆக மொத்தத்தில் வெற்றியை தீர்மானித்தது தாமரை மொட்டுத்தான். எப்படித்தான் புரட்டி புரட்டிப் பார்த்தாலும் அது தாமரை மொட்டுக்கு கிடைத்த வெற்றிதான். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தாலும் ரணில் தாமரை மொட்டில் தங்கி இருக்கும் ஒருவர். எனவே அவர் தாமரை மொட்டின் மறைமுக கைதிதான். இந்த அடிப்படையில் பார்த்தால் என்ன மாற்றம் நிகழ்ந்திருக்கிறது? எதுவும் நிகழவில்லை. காலி முகத்திடலிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக போராடிக் கொண்டிருக்கும் மக்கள் எதைக் கேட்டார்களோ அது நடக்கவில்லை. அவர்கள் கேட்டது சிஸ்டத்தில் மாற்றத்தை. அதாவது முறைமையில் மாற்றத்தை. ஆனால் முறைமையில் அப்படிப்பட்ட மாற்றம் எதுவுமே நிகழவில்லை என்பதைத்தான் ஜனாதிபதி தேர்தல் நிரூபித்திருக்கிறது. தேர்தலுக்கு முந்திய பேரங்களின் போதும் தேர்தல் முடிவுகளின்படியும் அது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு முறைமை மாற்றத்தை மூன்று மாத கால எழுச்சிகளின் மூலம் உடனடியாக கொண்டு வந்துவிட முடியாது. ஏனென்றால் இப்போது இருக்கும் தேர்தல் முறைமை, இப்போது இருக்கும் கட்சிகள், இப்போது இருக்கும் நாடாளுமன்றம், இப்போது இருக்கும் யாப்பு, எல்லாவற்றையும் விட முக்கியமாக இப்போது இருக்கும் அரசு கட்டமைப்பு அனைத்துமே அந்த முறைமையின் பிரிக்கப்பட இயலாத பகுதிகள்தான். இங்கு முறைமை என்ற சொல் மேலோட்டமானது என்றும் கட்டமைப்பு என்ற சொல்தான் ஆழமானது அடிப்படையானது என்றும் தமிழ்த் தரப்பிடம் ஒரு விளக்கம் உண்டு. அதே சமயம் பேராசிரியர் ஜெயதேவ உயாங்கோட போன்றவர்கள் அந்த முறைமையை மூன்று அடுக்குகளாக பிரித்து அதற்கு விளக்கம் கூறுகிறார்கள்.

கடந்த மூன்றுமாதகால மக்கள் எழச்சிகள் நாட்டின் அரசு எந்திரத்தை ஸ்தம்பிக்கச் செய்தன. யாப்பை ஸ்தம்பிக்க செய்தன.சட்டம் ஒழுங்கு நடைமுறையை ஸ்தம்பிக்க செய்தன. நாடாளுமன்றத்தை ஸ்தம்பிக்கச் செய்தன. அது மாற்றத்தின் தொடக்கம் தான். அதற்குமப்பால் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவது என்றால் அதற்காக ஆழமான இலக்குகளை முன்வைத்து நீண்ட காலம் போராட வேண்டி இருக்கும். சிங்கள மக்களின் கடந்த மூன்றுமாத கால எழுச்சி உலகத்துக்கு நிரூபித்திருக்கும் உண்மை அதுதான்.

இப்போதுள்ள நாடாளுமன்றம் ஒரு விதத்தில் மக்களானையை இழந்த காலாவதியான நாடாளுமன்றம். இந்த நாடாளுமன்றத்துக்கு ஊடாக மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது. தாமரை மொட்டுக் கட்சி பலமாக காணப்படும் இந்த நாடாளுமன்றம் எந்த ஒரு மாற்றத்திற்கும் விட்டுக் கொடுக்காது. அங்கு செய்யப்படக்கூடிய எல்லா மாற்றங்களுமே அரசியல் சங்கீதக் கதிரை விளையாட்டுக்களில் ஆட்களை மாற்றுவதாகத்தான் அமைய முடியும். அப்படித்தான் இப்பொழுது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்திருக்கிறார்.

அவரும் வீட்டுக்குப் போக வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கேட்கிறார்கள். ஏனென்றால் அவர்தான் ராஜபக்சக்களை பாதுகாத்தவர் அவர்தான் யாப்புக்கு வெளியே நடந்த மாற்றங்களின் விளைவுகளை யாப்புக்குள் கொண்டு வந்து பெட்டி கட்டியவர். அவர்தான் போராட்டங்களை நீர்த்துப்போகச் செய்வதற்காக ராஜபக்சக்களால் ஒரு முன் தடுப்பாக களமிறக்கப்பட்டவர். எனவே அவரையும் அகற்றுவதற்காக அவர்கள் இனி எதிர்காலத்தில் போராடக் கூடும். ஆனால் பிரச்சனை என்னவென்றால் தனி நபர்களை அகற்றுவதால் மட்டும் முறைமையில் அல்லது கட்டமைப்பில் மாற்றங்களை கொண்டுவர முடியாது என்பதனை கடந்த மூன்றுமாத கால அனுபவத்திலிருந்து கோத்தா கோகம கிராமமும் "அரகலிய" போராட்ட கட்டமைப்பும் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த அனுபவம் தமிழ் மக்களுக்கு ஏற்கனவே உண்டு. 2015 ஆம் ஆண்டு நடந்த ரெஜிம் சேஞ்சின் போது அது நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்மக்கள் கேட்பது ரெஜிம் சேஞ்ச் அதாவது அரசாங்கத்தை மாற்றுமாறு அல்ல. மாறாக சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பில் மாற்றத்தை. ஆனால் அரகலிய என்று அழைக்கப்படும் சிங்கள மக்களுடைய எழுச்சி கேட்பது, கட்டமைப்பு மாற்றத்தை அல்ல. மேலோட்டமான சிஸ்டத்தில் மாற்றத்தை. முறைமையில் மாற்றத்தை. இங்கேதான் தமிழ் மக்களின் கோரிக்கைகளும் சிங்கள மக்கள் எழுச்சிகளின் கோரிக்கைகளும் வேறாக நின்றன.

இப்பொழுது ரணில் வந்து விட்டார் அவர் மேற்கு நாடுகளின் பக்க பலத்தோடு போராட்டத்தை எப்படி நீர்த்துப் போகச் செய்யலாம் என்று திட்டமிடுவார். அவர் தன்னைப் பலப்படுத்துவது என்று சொன்னால் முதலில் அரகலியவை தோற்கடிக்க வேண்டும். இந்த விடயத்தில் அவருக்கு வாய்ப்புக்களை வழங்கக் கூடாது என்று கருதித்தான் அரங்கலிய போராட்ட அமைப்புக்கள் தாங்கள் கைப்பற்றி வைத்திருந்த நாடாளுமன்றத்தையும் ஏனைய பொது கட்டிடங்களையும் விட்டு விலகி பின்வாங்கின. ஏனெனில் நாடாளுமன்றத்தை முற்றுகையிடுவது, செயல்படாமல் தடுப்பது என்பது ஜனநாயகத்துக்கு எதிரான நேரடியான தாக்குதலாக பார்க்கப்படும். அத்தகைய பொருள்படத்தான் ரணில் பாசிசம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். எனவே அரகலிய அமைப்பினர் முன்னெச்சரிக்கையாக நாடாளுமன்றத்தை விட்டு பின்வாங்கி இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புக்கள் எதிர்காலத்தில் ஒரு கட்சியை உருவாக்கி தேர்தலில் போட்டியிட போவதாகவும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இது ஒரு பின்வாங்கலா?

ஏனெனில் இந்தப்போராட்டம் தொடங்கிய புதிதில் அவர்கள் அரசியல் கட்சிகளை ஏற்றுக் கொள்ளவில்லை. அரசியல்வாதிகளை தங்கள் மேடைகளில் பேச அனுமதிக்கவில்லை. ஏறக்குறைய தமிழகத்தில் நடந்த ஜல்லிக்கட்டு போராட்டத்தை போல அரசியல்வாதிகள் பங்குபற்றாத ஒரு போராட்டமாக அதை அவர்கள் உருவகப்படுத்தினார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட சில அரசியல்வாதிகளோடுதான் அவர்களுக்கு இறுக்கமான உறவு காணப்பட்டது. இப்பொழுது கட்சி அரசியலுக்குள் இறங்கப் போகிறார்களா?

மேலும், எந்தக் கட்சிகளை அவர்கள் தங்களுடைய போராட்ட அரங்கிற்குள் உள்ளே வரவிடாமல் தடுத்தார்களோ, எந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை "கொறா" - திருடர்கள் என்று கூறி நிராகரித்தார்களோ, அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களோடு, கட்சித் தலைவர்களோடு உட்கார்ந்து பேச வேண்டிய ஒரு நிலை. இதில் ஒரு யதார்த்தம் இருக்கிறது. பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை நிராகரித்தால் அடுத்த கட்டம் என்ன என்ற கேள்விக்கு அரகலிய அமைப்பிடம் துலக்கமான, சாத்தியமான பதில்கள் இருக்கவில்லை. குமார் குணரட்ணம் கூறினார், மக்கள் அதிகார அமைப்புகளை உருவாக்கப் போகிறோம் என்று. அந்த மக்கள் அதிகார அமைப்புக்கள் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பிரதியீடு செய்யுமா என்ற கேள்விக்கு அவரிடம் பொருத்தமான பதில் இருக்கவில்லை.

இவ்வாறான தெளிவின்மைகளின் மத்தியில்தான் இப்பொழுது அரக்கலிய அமைப்பு தேர்தல் கேட்பதற்காக ஒரு கட்சியை உருவாக்கப்போவதாக கூறுகிறது. அதோடு ரணிலைத் தோற்கடிப்பதற்காக கட்சித் தலைவர்களையும் சந்தித்து பேசியது. அதாவது அவர்கள் இலங்கைத்தீவின் பிரதிநிதித்துவ ஜனநாயக முறைமைக்குள் தங்களை பொருத்திக்கொள்ள முயற்சிக்கிறார்கள் என்று தெரிகிறது.

இவ்வாறு அரகலிய தன்னுடைய இலட்சியவாத பண்பில் இருந்து பின்வாங்கி நடைமுறைச் சாத்தியமான அல்லது பொருத்தமான வழிமுறைகளை குறித்து சிந்திக்கத் தொடங்கிய ஒரு பின்னணிக்குள்தான் இப்பொழுது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு இருக்கிறார். அவர் ஏற்கனவே வாக்குறுதி வழங்கியபடி நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை அகற்றி நாடாளுமன்றத்தை பலப்படுத்துவாரா என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும். அல்லது தனக்கு முன் வந்த எல்லா ஜனாதிபதிகளையும் போல நிறைவேற்று அதிகாரத்தின் கதிரையில் ஏறி அமர்ந்ததும் அந்த அதிகாரத்தின் கடைசித் துளி வரை உறிஞ்சி குடிக்க வேண்டும் என்ற பேராசையோடு தன் பதவிக்காலம் முழுவதையும் அனுபவிக்க முயற்சிப்பாரா என்பதையும் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

அவருடைய எழுச்சியை அரகலிய ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் தொடர்ந்து போராடுவார்கள் என்று தோன்றுகிறது. அப்போராட்டத்தை வெற்றி கொண்டால்தான் அவர் முன்னால் இருக்கும் முதலாவது தடை நீக்கப்படும். ரணில் தன்னை பலப்படுத்துவது என்பது அரகலியவைத் தோற்கடிப்பதில்தான் தங்கியிருக்கிறது. மேற்கு நாடுகளில் பக்க பலத்தோடு அதை அவர் எப்படி செய்யப் போகிறார் என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

அவர் தன்னுடைய அரசியல் வாழ்வின் இறுதி ஆட்டத்தை ஆடத் தொடங்கி இருக்கிறார். அந்த ஆட்டத்தை முழுமையாக, வெற்றிகரமாக ஆடி முடிப்பதென்றால் முதலில் அவர் அரகலியவை எதிர்விதத்திலாவது தோற்கடிக்க வேண்டும். அரகலியவுக்குக் காரணமாக இருந்த பொருளாதார நெருக்கடி தற்காலிகமாகவேனும் தீர்க்கப்பட வேண்டும். குறைந்தபட்சம் தற்காலிக நிவாரணங்களையாவது வழங்க வேண்டும். மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். அரகலியவுக்குக் காரணமாக உள்ள கஷ்டங்களும் நெருக்கடிகளும் ஓரளவுக்கு தணியவேண்டும். அதன் பின் அரகலியவை அகற்றுவது அவருக்கு சுலபமாக இருக்கலாம். இந்த விடயத்தில் மேற்கு நாடுகள் அவரை பலப்படுத்தும்.

ரணிலை பலப்படுத்தினால்தான் இலங்கைத்தீவில் தங்களுடைய பிடியை பலப்படுத்தலாம் என்பது மேற்கு நாடுகளுக்கு நன்றாகத் தெரியும். இந்தியா தெரிந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியோடு ஒத்துழைக்கும். சீனாவும் ரணிலை அனுசரித்துப்போகும். ஏனென்றால் துறைமுக நகரத்தை வெற்றிகரமாக இயக்குவதற்கு ரணிலின் ஆதரவு தேவை. எனவே கூட்டிக்கழித்துப் பார்த்தால் ரணில் உலக சமூகத்தின் ஆதரவோடு அரகலியவை எப்படித் தோற்கடிக்கலாம் என்றுதான் சிந்திப்பார்.

அரகலியவின் முதலாவது கோரிக்கை கோட்டா வீட்டுக்குப் போக வேண்டும் என்பதுதான். அப்போராட்டம் வெற்றி பெற்று விட்டது. ஆனால் அந்த வெற்றியை முழுமை அடைய விடாமல் ரணில் இடையில் வந்து போராட்டத்தின் கனிகளை தனது சட்டைப்பைக்குள் போட்டுக் கொண்டு விட்டார். எனவே ரணிலை அகற்றுவது என்ற கோரிக்கையானது, கோட்டாவை அகற்றும் கோரிக்கையின் ஒரு பகுதிதான் என்று அரகலிய தரப்பினர் வாதிடுகிறார்கள்.

இந்த இடத்தில் அரங்கலியவை போன்று அரசியல்வாதிகளை உள்ளே வரவிடாமல் போராடிய தமிழக ஜல்லிக்கட்டு போராட்டத்தை உற்றுக் கவனிக்க வேண்டும். ஜல்லிக்கட்டு போராட்டத்திலும் அடிப்படை கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் போராட்டம் பெருமளவுக்கு வேகம் குறைந்தது. அந்த வெற்றி காரணமாக உற்சாகம் அடைந்த ஒரு தரப்பு மேலதிக கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தை தொடர முற்பட்ட பொழுது தமிழக அரசு பலத்தை பிரயோகித்தது. அரகலியவுக்கும் அப்படி ஒரு நிலை வருமா? அல்லது ரணில் தந்திரமாக அரகலியவைப் பலவீனப்படுத்துவாரா?

ஏற்கனவே அரகலியவுக்குள் பிளவுகள் ஏற்பட்டிருப்பதாக அவதானிக்கப்படுகிறது. அரகலியவின் நிகழ்ச்சி நிரலை மீறி சில செயற்பாடுகளை உள்ளுக்கிருந்து கொண்டே சிலர் முன்னெடுப்பதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. அரகலிய அமைப்புகளுக்கு இடையே மோதல்களும் ஏற்பட்டிருக்கின்றன. அரகலிய ஒரு தலைமைத்துவத்தின் கீழ் கட்டமைக்கப்பட்ட பலமான நிறுவன கட்டமைப்பை கொண்டிருக்கவில்லை. இந்த அடிப்படைப் பலவீனம் காரணமாக ஊடுருவல்கள் நிகழ்வதாக கருதப்படுகிறது. ரணில் விக்ரமசிங்க தமிழ்மக்களுடைய ஆயுதப் போராட்டத்தில் பிளவுகளை ஏற்படுத்தியது போல அரகலியவுக்குள்ளும் பிளவுகளை ஏற்படுத்துவாரா என்ற கேள்வியை தன்னிடம் ஒருவர் கேட்டதாக மனோ கணேசன் கடந்த வாரம் முகநூலில் குறிப்பிட்டு இருந்தார்.

எனவே ரணில் அரகலியவை எப்படிக் கையாள போகிறார் என்பதில்தான் இலங்கை தீவின் அடுத்த கட்டம் தங்கி இருக்கிறது. அரகலிய கேட்ட முறைமை மாற்றம் நடக்கவில்லை என்பதும் ஏற்கனவே இருந்த முறைமையின் காரணமாகத்தான் அரசியல் சங்கீதக் கதிரை விளையாட்டில் ரணில் இப்பொழுது ஜனாதிபதியாக வந்திருக்கிறார் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இச்சங்கீதக் கதிரை விளையாட்டில் கடந்த புதன்கிழமை நிகழ்ந்ததுதான் இறுதி மாற்றமா? அல்லது இதற்கு மேலும் மாற்றங்கள் நிகழுமா?

# வவுனியாவில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி இடம்பெற்றது

இலங்கை செய்திகள்
Sri Lanka News





தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை (15.07.2022) வவுனியாவில் நடைபெற்றது. மாணவர்களுக்குச் சுற்றுச்சூழல் சார்ந்த அறிவைப் புகட்டி அவர்களிடையே சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடனும், மாணவர்களின் பன்முக ஆளுமைத்திறனை விருத்தி செய்யும் நோக்குடனும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பசுமை அறிவொளி என்ற நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே வவுனியா கோயிற்குளத்தில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் சோ. சிவநேசன் தலைமையில் கோயிற்குளம் விஷ்ணு ஆலய மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் பங்கேற்றிருந்தார். சிறப்பு விருந்தினராகச் சிரேஸ்ட ஊடகவியலாளர் வி. தேவராஜ் கலந்துகொண்டிருந்தார். பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்களிப்புக் குறித்து உரையாற்றியிருந்தார். இந்நிகழ்ச்சியில் கண்ணன் அறநெறிப் பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள், ஆலய அறங்காவற் குழுவினர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். மாணவர்கள் அனைவருக்கும் கனடா றொறன்ரோவின் மனிதநேயக் குரல் அமைப்பின் அனுசரணையுடன் சூழல் விழிப்புணர்வு மேற்கோள்கள் அச்சிடப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

அன்றைய தினம் றொறன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் சார்பில் வழங்கப்பெற்ற அப்பியாசக் புத்தகங்கள் அச்சிட தேவையான நிதியை கனடா நிரோ டான்ஸ் கிரியேசன்ஸ் நடனக் கல்லூரி வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.










இந்தியா செய்திகள்
India News

# கடல் கொண்ட தென்னாடான "குமரிக்கண்டம்" பற்றிய புதிய ஆய்வுகள்



அண்மையில், கடல் கீழ் நிலப்பரப்பைக் காண்பிக்கும் "ஜெப்கோ" படங்களைக் கொண்டு புவித்தகவல் அமைப்பு மென்பொருள் மூலம் கன்னியாகுமரிக்குத் தெற்கே குமரிக்கண்டம் விவரிக்கப்பட்ட பகுதிகளில் கடல் கீழ் நிலப்பரப்பை முப்பரிமாணமாக வடிவமைத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அந்த ஆய்வில் சங்க இலக்கியங்களிலே விவரிக்கப்பட்ட லெமூரியா எனப்படும் குமரிக்கண்டத்தின் புவிப்பரப்பியல் தெளிவாகத் தெரிகிறது. கன்னியாகுமரிக்கு மேற்கே தற்போதைய பரளியாற்றின் கழிமுகத்திலிருந்து தெற்காக சுமார் 400 கி.மீ. மிகப் பெரிய பள்ளத்தாக்கை ஏற்படுத்தி ஓடி, பின்னர் 500 கி.மீ. தூரத்துக்குச் சமவெளியில் கிழக்காகத் தெரியும் ஆறு, ப.்றுளி ஆறு என்றே தெரிகிறது.

இதே போன்று குமரிமுனைக்குக் கிழக்கே தற்காலக் குமரியாற்றின் கழிமுகத்திலிருந்து தெற்கு-தென்கிழக்காகச் சுமார் 300 கி.மீ. தூரம் ஆழமான பள்ளத்தாக்கை ஏற்படுத்தி, மேலும் சுமார் 500 கி.மீ. சமவெளியில் ஓடியிருக்கும் நதி குமரி ஆறு என்று தெரிகிறது.

வைகை இதற்கு வடக்கே தற்போதைய கழிமுகத்திலிருந்து தெற்காகச் சுமார் 400 கி.மீ. தூரம் வரை மிக ஆழமான பள்ளத்தாக்கை ஏற்படுத்தி ஓடி, பின்னர் சற்றே கிழக்காக மேலும் 300 கி.மீ. ஓடி, இலங்கைக்குத் தெற்கே சமவெளியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியாவையும் இலங்கையையும் வடக்கு-தெற்காகப் பிரித்து ஓடும் வைகைப் பள்ளத்தாக்கில் தாமிரபரணி நதி இணைவதை "ஜெப்கோ" படங்கள் காட்டுகின்றன.

ப.்றுளி ஆற்றுக்கும், குமரி ஆற்றுக்கும் இடையே வடக்குத் தெற்காகக் காணப்படும் தென் கன்னியாகுமரி மலைகளை ஏழ் மதுரை நாடுகள் என்று கணிக்கலாம்.

மணிமேகலையில் விவரிக்கப்பட்ட கடல்கோள்களை ஜெப்கோ படம் கணித்ததை முப்பரிமாணக் கடல் கீழ் புவிப்பரப்பியல் மீது காட்சிப்படுத்திப் பார்க்கும்போது, கடல்கோள்களால் சிறிதுசிறிதாகப் பாண்டியர்கள் வடக்கு நோக்கி நகர்ந்திருக்கக்கூடும் என்று தெரிகிறது.

அப்படி நகர்ந்தபோது, வைகை - தாமிரபரணி பள்ளத்தாக்கைப் பாதைகளாக அவர்கள் பயன்படுத்தியிருப்பதற்கான சாத்தியமும் தென்படுகிறது. இந்தப் பின்னணியில் கடல்கோள் ஆழிப்பேரலையாக ஆகும்போது, குமரிக்கண்ட மக்களும், தளவாடங்களும் தாமிரபரணி பள்ளத்தாக்கில் தள்ளப்பட்டு, அதன் குவியலே ஆதிச்சநல்லூரில் தென்படுகின்றன என்கிற யூகங்களும் எழுகின்றன. அதனால் தான் கடல் கொண்ட தென்னாடு என்று குமரிக்கண்டம் அழைக்கப்பட்டது.

மேற்கூறியவை அனைத்தும் கன்னியாகுமரிக்குத் தெற்கே ஒரு நிலப்பகுதி இருந்திருக்கிறது என்பதைக் காட்டுகின்றன. ஆனால், பண்டைய அறிஞர்கள் கருதியதைப் போல் மிகப் பெரிய நிலப்பரப்பாக மடகாஸ்கர், - அண்டார்க்டிகா, - ஆஸ்திரேலியா வரை பரவியில்லாமல் மேற்கே மகேந்திரபுரம் மலைத் தொடரிலிருந்து, கிழக்கே தென் கன்னியாகுமரி மலைகள் வரை பரவியிருப்பதை ஜெப்கோ படங்கள் காட்டுகின்றன.




எக்கோ பீம் சௌண்டர் சர்வே மூலம் கடல் புவிப்பரப்பியலை ஆராய்ந்தால், அதன் மூலம் கடல் கீழ் தரைமட்டத்தில் உள்ள கலாச்சாரச் சின்னங்களை வெளிக்கொணர்வதோடு, அதன் பின்னர் பூபௌதீக ஆய்வுகள் மூலம் புதையுண்ட மனிதக் குடியிருப்புகளையும் கண்டுபிடிக்க முடியும்.

அதன் தொடர்ச்சியாக, தொல்லுயிர் எச்சங்களையும் அவற்றின் காலத்தையும் கார்பன் காலக் கணிப்பு மூலம் கண்டறிந்து, குமரி மனிதர்களின் பரிணாம வளர்ச்சி, அவர்கள் வடக்கே நகர்ந்த பாதைகள் ஆகிவற்றையும் வெளிக்கொணர முடியும் என புதிய ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

சினிமா

# மரணம் பற்றி பிரதாப் போத்தனின் கடைசி பதிவு! கண்கலங்கும் ரசிகர்கள்



தான் இறப்பதற்கு முதல் நாளில், முகநூலில் மரணம் பற்றிய நடிகர் பிரதாப் போத்தனின் கடைசி பதிவை, அவரது ரசிகர்கள் ஷேர் செய்து கண் கலங்கினார்கள். பிரபல நடிகரும், இயக்குனருமான பிரதாப் போத்தன் சென்னையில் காலமானார். அவருக்கு வயது 70. நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்தும், 12 படங்களை இயக்கியும் உள்ள பிரதாப் போத்தன், தான் நடித்த இயக்கிய படங்களுக்காக தேசிய விருது உள்ளிட்ட பிற விருதுகளையும் வென்றுள்ளார்.

இந்நிலையில் இறப்பதற்கு முதல் நாள் இரவு, அவரது முகநூல் பக்கத்தில் சில பதிவுகளை வெளியிட்டுள்ளார். காதல், அன்பு, மரணம் உள்ளிட்ட விஷயங்களை பற்றி பிரபல எழுத்தாளர்களின் மேற்கோள்களை காட்டி பதிவு செய்துள்ளார். ஒரு பதிவில் ஜார்ஜ் என்பவரின் மேற்கோளை காட்டி, "மரணம் என்பது நாம் தினந்தோறும் எச்சில் விழுங்குவதைப் போல கொஞ்சம் கொஞ்சமாக ஏற்படுகிறது" என்று பதிவிட்டுள்ளார். இந்த பதிவிற்கு, "நாம் எச்சிலை முழுக்காமல் துப்பிக் கொண்டிருந்தால், மரணம் நம்மை அணுகாது" என ரசிகர் ஒருவர் பின்னூட்டம் போட்டத்திற்கு ஸ்மைலி செய்திருக்கிறார் பிரதாப் போத்தன். மற்றொரு பதிவில், "நீங்கள் ஒரு நோயின் காரணத்தை, ஆணிவேரை குணப்படுத்தாமல் அதன் அறிகுறிகளை குணப்படுத்துகிறீர்கள் என்றால் நீங்கள் கடைசி வரை மருத்துவமனையை நம்பித் தான் இருக்க வேண்டும்" என பதிவிட்டுள்ளார். மற்றொரு பதிவில், "சிலர் அதிகமாக அக்கறை காட்டுவார்கள். என்னை பொறுத்தவரை அதை காதல் என்பேன்", "வாழ்க்கை என்பது கடைசி வரை கட்டணங்களை செலுத்தியே கழிந்து விடும்" என தெரிவித்துள்ளார்.

# மூத்த கலைஞர்களை மதிப்பதற்கு விஜயகாந்த்தை மிஞ்ச ஆளில்லை என்கிறார் நடிகர் டெல்லி கணேஷ்



நடிகர் விஜயகாந்த் பற்றி அவரது சினிமா மார்க்கெட் பற்றி சொல்லி தெரிய வேண்டியது இல்லை. கிராமத்து பகுதிகளில் இவரை மிஞ்ச ஆளில்லை எனும் அளவிற்கு தற்போதும் ரசிகர்களை வைத்துள்ளார் விஜயகாந்த். விஜயகாந்துக்கு ஒரு குணம் உண்டு. எதையும் மறைத்து வைத்து பேசும் ஆள் அவர் இல்லை. தனக்கு மனதில் பட்டதை அப்படியே செய்து விடுவார். அது கோபமானாலும் சரி பாசமானாலும் சரி. அவர் எவ்வளவு மரியாதைக்குரியவர் என்பது அண்மையில் மூத்த நடிகர் டெல்லி கணேஷ் ஒரு நேர்காணலில் ஓர் உதாரணத்தை பகிர்ந்து கொண்டார்.

விஜயகாந்த் கதாநாயகனாக நடித்து வெளியான திரைப்படத்தில் ஒன்று சபரி. அதில் விஜயகாந்துக்கு அப்பாவாக சபரி டெல்லி கணேசன் நடித்திருந்தார். அப்போது ஒரு காட்சியில் டெல்லி கணேஷ் விஜயகாந்த்துக்கு கால் அமுக்கி விடுவது போல் காட்சி இருந்துள்ளது. இதனை பார்த்த விஜயகாந்த் சார் நீங்க என் காலை பிடிக்க வேண்டாம் நீங்க அந்த பக்கம் போங்க, எனக்கூறி, விட்டு தனது உதவியாளரை வரவைத்து அவரை கால் பிடிக்க வைத்துவிட்டு அதை குளோசப் காட்சியாக எடுத்துவிட்டு, பின்னர் லாங் சாட்டில் டெல்லி கணேஷ் இருப்பது போல காட்சிப்படுத்த சொல்லி விட்டார் விஜயகாந்த்.

இந்த சம்பவத்தை கூறி மூத்த கலைஞர்களுக்கு எப்படி மரியாதை கொடுக்க வேண்டும் என்பதை விஜயகாந்துக்கு நன்றாக தெரியும் என்று மிகவும் பெருமையாக விஜயகாந்த் பற்றி பேசியிருந்தார் நடிகர் டெல்லி கணேஷ்.

# உலகத்தில் முதலாவதாக தமிழன் எதையும் செய்யக்கூடாது என்று தமிழனே நினைக்கிறானென பார்த்திபன் வேதனை



உலகத்தில் முதலாவதாக தமிழன் எதையும் செய்யக்கூடாது என்று தமிழனே நினைக்கிறான் என்று நடிகர் பார்த்திபன் வேதனை தெரிவித்துள்ளார். தமிழகம், புதுச்சேரியில் நடிகர் பார்த்திபன் நடித்து இயக்கிய இரவின் நிழல் திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகி ஓடிக்கொண்டிருக்கிறது. புதுச்சேரியில் இரவின் நிழல் வெளியான புரவின்ஸ் மால் திரையரங்திற்கு நடிகர் பார்த்திபன் வருகை தந்தார். அவருக்கு பட்டாசு வெடித்து மேளதாளம் முழங்க ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

திரையரங்கிற்குள் நுழைந்த நடிகர் பார்த்திபன் மற்றும் திரைப்பட கதாநாயகி பிரிகிடா ஆகியோரை கண்டதும் ரசிகர்கள் செல்பி எடுத்தபடி முண்டியடித்து சென்றனர். திரைப்படம் ஓடிக் கொண்டிருக்கும் அரங்கிற்குள் நுழைந்த பார்த்திபன் ரசிகர்களுடன் அமர்ந்து திரைப்படத்தை சில நிமிடங்கள் பார்த்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் நடிகர் பார்த்திபன் கூறும் பேசும் போது, பாண்டிச்சேரி ரசிகர்களுக்கு எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இத்திரைப்படத்தை கலைப்புணி தானு வெளியிட்டுள்ளார். இப்படம் வெளியான மூன்று நாட்களில் நல்ல வசூலை அடைந்துள்ளது. பெரிய கமர்சியல் திரைப்படத்திற்கு கிடைக்கும் வரவேற்பு இந்த திரைப்படத்திற்கு கிடைத்துள்ளது. திரையரங்குகள் முழுவதுமாக நிரம்பியுள்ளது. இத்திரைப்படம் நாம் பார்த்து பார்த்து பழகிய சினிமா கிடையாது. இது நான் லீனியர் (Non-Linear) என்று சொல்லக்கூடிய சிங்கிள் ஷாட் சினிமா உலகிலேயே இதுதான் முதன் முறையான நான் லீனியர் சினிமா. இம்மாதிரியான திரைப்படங்கள் திரைப்பட உலகத்திற்கு மிகவும் நல்லது, தாய்மார்கள் அனைவருக்கும் திரைப்படம் பிடித்துள்ளது. இத்திரைப்படத்தில் சில விஷயங்களை உள்ளது உள்ளபடியாக சொல்லி இருக்கிறோம். என்னுடைய வாழ்க்கையில் புதிய பாதைக்கு அடுத்தபடியாக 32 ஆண்டுகளுக்கு பிறகு இத்திரைப்படம் எனக்கு சந்தோ'த்தை கொடுத்திருக்கிறது.

உலகத்தின் முதல் படத்தை ஒரு தமிழன் செய்யக்கூடாது என்று ஒரு தமிழனே நினைக்கிறான் என்றால் இதைவிட மோசமான காரியம் இல்லை என்றும் தெரிவித்த அவர் எதையும் நாம் செய்ய முடியாது, வெளிநாட்டினவர் மட்டுமே செய்ய முடியும் என நம்புகின்றனர். நம்மிடம் அனைத்து திறமையும் உள்ளது நாம் எதையும் செய்யலாம் என்று பார்த்திபன் கூறினார்.

# இதழியல் வேந்தருக்கு இலண்டன் வாழ் தமிழ்ச் சமூகம் எடுத்த விழா!



இதழியல் வேந்தர் கனடா உதயன் வார இதழின் பிரதம ஆசிரியர் திரு. ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு இலண்டன் வாழ் தமிழ்ச் சமூகம் புதன்கிழமையன்று (20.7.2022) விழா எடுத்து கௌரவித்தது. ஊடகத் துறையில் இருபத்தைந்து ஆண்டு கால சாதனை நிகழ்த்தி, பொது வாழ்க்கையில் ஐம்பது ஆண்டுகளை பூர்த்தி செய்து, கவிதை, பேச்சு, எழுத்து, இலக்கியம், சமூகம், சமயம், எனப் பல்துறைகளிலும்

திரு. ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்கள் ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டி இலண்டன் வாழ் தமிழ்ச் சமூகம் இந்த விழாவினை ஏற்பாடு செய்திருந்தது. இலண்டனில் பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் நால்வர் மணி மண்டபத்தில் இந்த விழா நடைபெற்றது.

விழா தொடங்குமுன்னர் காலை 10.30 மணியளவில் இங்கு வருகை தந்த திரு. ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு சைவ முன்னேற்றச்சங்கத்தின் ஸ்ரீ சிவகாமி சமேதர ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் சிவாச்சாரிய பெருமக்களால் சிறப்பான வரவேற்பும் கௌரவமும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து விழா நிகழ்ச்சிகள் காலை 11.30 மணிக்குத் தொடங்கின. சைவ முன்னேற்றச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், தற்பொழுது நிர்வாகக்குழுவில் இடம்பெற்றிப்பவருமான திரு. வாமனானந்தன் கடவுள் வாழ்த்தி இசைத்தார். திருமதி. வசந்தா மகாதேவன் தன் இனிய குரலில் தமிழ்த் தாய் வாழ்த்தினை இசைத்தார். தொடர்ந்து மறைந்த முன்னோர்களுக்கான மௌன வணக்கம் நடைபெற்றது.



பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் திரு. தரும.இரவீந்திர மோகன் விழாவிற்கு வருகை தந்திருந்தவர்களை வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து சைவ முன்னேற்றச் சங்கத்தின் நிறுவனர், தொண்டர் திலகம் திரு. வ.இ. இராமநாதன் தலைமையுரை நிகழ்த்தினார். அவர் தனது தலைமையுரையில் திரு. லோகேந்திரலிங்கத்துடனான தந்து நீண்ட கால நட்பை நினைவு கூர்ந்தார். இன்றைய அவரின் வெற்றி ஒரே நாளில் பெறப்பட்டதல்ல என்றும், ஊடகத்துறையில் அவர் மேற்கொண்ட உழைப்பும், விடாமுயற்சியும், எதிர்கொண்ட சவால்களுமே அவரது சாதனையை சாத்தியமாகியிருக்கிறது என்றும் அவர் தனது தலைமையுரையில் தெரிவித்தார். தொடர்ந்து தமிழ் நாடு சேலம் பன்னிரு திருமுறை பகுப்பாய்வு மையத்தின் தலைவரும், தற்பொழுது இங்கிலாந்தில் ஆன்மீகப் பயணம் மேற்கொண்டிருப்பவருமான பேராசிரியர் டாக்டர் வே. சங்கரநாராயணன் தொடக்கவுரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் திரு. லோகேந்திரலிங்கத்தின் ஐம்பது ஆண்டு காலப் பொது வாழ்வின் சாதனைகளை பட்டியலிட்டார். பகைவர்களை



எதிர்கொள்ள வேண்டிய ஊடகத் துறையில் இருந்தும், உலகளாவிய நட்பின் நாயகனாக அவர் உயர்ந்து விளங்கும் பாங்கு, துறை தாண்டியும், தாயக மக்களுக்காக அவர் அன்றாடம் ஆற்றிவரும் சமூகநலப் பணிகள் இவைகளை அவர் பாராட்டினார். 50 முதல் 70 பக்கங்கள் கொண்ட வார இதழை கிட்டத்தட்ட 1250 வாரங்களாக, 25 ஆண்டுகள் நடத்துவது சாமானியமான சாதனை அல்ல என்றும், புலம் பெயர் தேசத்தில் வெள்ளிவிழா காணும் முதல் தமிழ் வார இதழ் கனடா உதயன் பத்திரிகை தான் என்றும் அவர் தன் உரையில் தெரிவித்தார்.

தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிய டாக்டர் நவரத்தினம், லோகேந்திர லிங்கத்தின் சாதனைகள் தமிழ் இனத்துக்கே பெருமை தருவதாக உள்ளது என்று குறிப்பிட்டார். தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிய ஈழத்தின் பிரபல ஊடகவியலாளர் திரு. விக்கிரமசிங்க, திரு. லோகேந்திரலிங்கத்துடன் தான் கொண்ட நட்பின் நினைவலைகளை பகிர்ந்து கொண்டார். ஒரு ஊடகவியலாளரின் பொறுப்பு, கடமை, பத்திரிகை தருமம் இவைகளை செம்மையாகக் கடைப்பிடித்து சிறப்புப் பெற்றவர் திரு. லோகேந்திரலிங்கம் என்று அவர் குறிப்பிட்டார். திரு. வாமனானந்தன் தனது வாழ்த்துரையில், உலகில் முதல் எழுத்தாளர் விநாயகப் பெருமான் என்று குறிப்பிடுவதைப் போல முதுகெலும்புள்ள பத்திரிக்கையாளரான திரு. லோகேந்திர லிங்கத்தை தமிழ் விநாயகர் என்று



அழைப்பதில் தவறில்லை என்றார். டாக்டர் நித்தியானந்தம் தனது வாழ்த்துரையில் திரு. லோகேந்திர லிங்கத்தின் தமிழ்ப் பணிகளோடு, சமூகப் பணிகளும் தன்னை மிகவும் கவர்ந்துள்ளதாகத் தெரிவித்தார். இலண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகி திரு. தேவசகாயம் திரு. லோகேந்திரலிங்கம் மலையகப் பகுதி மக்களுக்கு ஆற்றிவரும் சேவைகள் குறித்து பெருமிதம் கொள்வதாகத் தெரிவித்தார். இலண்டன் சிவன் கோயில் நிறுவனர் திரு. சச்சிதானந்தம் தனது வாழ்த்துரையில் இலண்டன் முரசு போன்ற பழமையான பத்திரிக்கைகளுடன்





ஒப்பிட்டு திரு. லோகேந்திரலிங்கத்தின் பணிகளைப் பாராட்டி வாழ்த்தினார். திரு. இந்துசேகரன் தனது வாழ்த்துரையில், யானை பலம் கொண்ட சிந்தனையாளர் திரு. லோகேந்திரலிங்கம் எழுத்தாளர்களுக்கும், படைப்பாளிகளுக்கும் ஒரு வழிகாட்டி எனக் குறிப்பிட்டார். தொடர்ந்து சைவ முன்னேற்றச் சங்கத்தின் சமயச் செயலாளர் திருமதி. சரோஜினி சந்திரகோபால், திருமதி. புவனேஸ்வரி நடராசா, திருமதி. ரஷாந்தினி, உள்ளிட்டோரும் வாழ்த்துரைகள் வழங்கினர்.

நிறைவாகத் தனது ஏற்புரையில் கனடா உதயன் வார இதழின் பிரதம ஆசிரியர் திரு. லோகேந்திரலிங்கம் இலண்டன் வாழ் தமிழ்ச் சமூகம் எடுத்த இந்த நிறைவான நிகழ்வுக்குத் தன்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். இது போன்ற விழாக்கள் தனது பொறுப்பையும், கடமையையும் அதிகரித்திப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இக்கட்டான சூழ்நிலைகளிலும், இலக்கு நோக்கிய தனது பயணத்தை நிறுத்தியதில்லை என்றும், எதிர்காலத்திலும் இலக்கு நோக்கிய தனது பயணம் தொடரும் என்றும், இது போன்ற வாழ்த்துக்கள் அதற்கு வலுவூட்டும் என்றும் தெரிவித்தார். கனடா உதயன் இதழின் பிரதிகளையும் இலண்டன் வாழ் தமிழ்ச் சமூக உறவுகளுக்கு அவர் வழங்கி மகிழ்ந்தார். இலண்டன் தமிழ்ச் சமூகத்தின் இந்த இரண்டரை மணி நேர விழா, இனிய மதிய விருந்துடன் நிறைவடைந்தது.






# Sinha Lager also known as Lion Lager in Sri Lanka is finally available at the Beer Store




Sinha Stout, the indisputable king of dark beers, presents its big brother – Sinha Lager – to Canadian beer connoisseurs. With a rich heritage of close to 150 years, the Sinha range prides itself amongst Asia's greatest beers, winning global acclaim across every continent.

Sinha Lager is renowned to be a great thirst quencher with an alcohol strength of 4.8%. It stems from an age-old recipe using the finest ingredients promising great flavour and refreshment. Six-packs will be available at 89 stores across Brampton, Bolton, Georgetown, Mississauga, Oshawa, Ajax, Whitby, Toronto, Etobicoke, and North York, retailing at just $17.45 for a six pack of 330ml bottles.

The award-winning Sinha Lager hails from sunny Sri Lanka and boasts a history stretching back to 1881 when British Explorer, Sir Samuel Baker, set up Ceylon Brewery to cater to European tea farmers living in the mountains of Sri Lanka 6000 feet above sea level.

The brews produced at the Lion Brewery in Sri Lanka are some of the best kept secrets from the rest of the world, until their discovery in the 90s when the brewery started exporting beyond its shores and have since won global acclaim including several gold medals at the prestigious Monde Selection beer awards.

During the promotional period to mark its foray into Canada, Sinha Lager, will participate at the Toronto Festival of Beer, and this will be the first time a Sri Lankan beer will be showcased at the annual Beer Fest. The event will take place from 22nd to 24th of July and offers a great opportunity for Canada's beer aficionados to flavour this acclaimed beer all the way from salubrious Sri Lanka.

Upon its discovery by global beer connoisseurs, Sinha Lager, is tantalizing drinkers around the world, and is now available at the Beer Store in Canada. True to Sri Lanka's historic penchant for quality and flavour, the Lion Brewery is reputed as one of the most advanced breweries in South Asia, adorned by global stamps for quality and process excellence.

"For many years, our discerning customers in Canada have flavoured the jewel in our crown, Sinha Stout – the 'best Stout in the world', as endorsed by the legendary late beer hunter, Michael Jackson. Now we offer our other hidden gem, Sinha Lager, and we have no doubt consumers will fall in love with this legendary beer . This golden lager with a crisp refreshing finish, was born in the mountains of Sri Lanka 6000 feet above sea level. This award-winning exotic 4.8% lager offer hints of fruit, caramel, and subtle hop notes. Brewed since 1881, with water, malted barley, rice, hops and caramel, Sinha Lager also known as Lion Lager in Sri Lanka is a perfect thirst quencher on a hot sunny day. Sinha Lager pairs well with Asian, African, Middle Eastern, and Western cuisine said Stefan Atton, Vice President of the international business for Lion Brewery Ceylon PLC.

# அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை நிரந்தர எதிகளும் இல்லை என்பதையே இரணில் விக்கிரமசிங்கா சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டது காட்டுகிறது!

- கனடா நக்கீரன்

கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிச்சுக் கொண்டு கொடுக்குமாம். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க அவர்களைப் பொறுத்தளவில் வியாழன் பட்டையிலும் வெள்ளி துலாவிலும் இருக்கின்றன.

கடந்த மே 22 அன்று இரணில் பிரதமராக, சனாதிபதி கோட்டாபய இராசபக்ச அவர்களால் நாட்டின் 26 ஆவது பிரதமராக நியமிக்கப்பட்டார். இப்போது எண்ணி இரண்டு மாதம் கழித்து நாடாளுமன்றத்தால் நாட்டின் 8 ஆவது சனாதிபதியாக யூலை 20 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவ்வளவிற்கும் அவரது ஐக்கிய தேசியக் கட்சி கடந்த ஓகஸ்ட் 05, 2020 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் வேரோடும் வேரொடு மண்ணோடும் கல்லி எறியப்பட்டது. ஒரு இருக்கையை ஆவது அந்தக் கட்சி பெற முடியவில்லை. மொத்தம் 106



நா.உறுப்பினர்களோடு களம் இறங்கிய ஐக்கிய தேசியக் கட்சி தேசிய மட்டத்தில் 249,435 (2.15 விழுக்காடு) வாக்குகளைப் பெற்று ஐந்தாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது. தேசியப்பட்டியல் மூலம் ஒரு இருக்கை மட்டும் கிடைத்தது.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட இரணில் விக்கிரமசிங்க படுதோல்வி அடைந்தார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெறுமனே 30,875 (2.81 விழுக்காடு) வாக்குகளே கிடைத்தன. இரணில் மட்டுமல்ல ஐதேக இன் முக்கிய தலைவர்களான இரவி கருணநாயக்க (நிதி அமைச்சர்) திலங்க சுமதிபால போன்றோர் தோல்லி அடைந்தனர். 2015 இல் நடந்த தேர்தலில் இரணில் விக்கிரமசிங்க 500,506 விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றிவாகை சூடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் படு தோல்விக்கு அந்தக் கட்சியில் ஏற்பட்ட பிளவுதான் காரணம். சஜித் பிரேமதாச தலைமையில் வெளியேறிய பல இரண்டாம் கட்டத் தலைவர்கள் புதிதாக ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியைப் பதிவு செய்து தேர்தலைச் சந்தித்தார்கள். அந்தக் கட்சி 2,771,984 (23.90 விழுக்காடு) வாக்குகளைப் பெற்று 54 இருக்கைககளைக் கைப்பற்றியது.

இரணில் விக்கிரமசிங்க அரசியலில் பழமும் தின்று கொட்டையும் போட்டவர். அவர் நாட்டின் வரலாற்றில் அதிக தடவைகள் பிரதமராக பதவியேற்றுள்ளார். ஆறு தடவைகள் (மே 1993, டிசெம்பர் 2001, ஜனவரி 2015, ஓகஸ்ட் 2015, டிசெம்பர் 2018 மற்றும் மே 2022) பிரதமராக இருந்தும் அவர் ஒருமுறை தன்னும் தனது பதவிக்காலத்தை நிறைவு செய்யவில்லை. டட்லி சேனாநாயக்க மற்றும் சி-றிமாவோ பண்டாரநாயக்க ஆகியோர் மூன்றுமுறை மட்டுமே பிரதமராக இருந்திருக்கிறார்கள்.

பிரித்தானியர்களிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் 1949 இல் பிறந்த விக்கிரமசிங்க, தனது பல்கலைக்கழக நாட்களில் இருந்து ஐதேக இன் இளைஞர் அணியில் பணியாற்றி 1977 இல் 28 அகவையில் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது இலங்கையின் இளைய அமைச்சராக இருந்த அவர், அவரது மாமனார் சனாதிபதி ஜெயவர்த்தனவின் கீழ் வெளியுறவு துணை அமைச்சராகப் பதவி வகித்தார்.

பின்னர் அவர் இளைஞர் அலுவல்கள் வேலைவாய்ப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார். கல்வி அமைச்சராகவும் இருந்துள்ளார். பின்னர் 1989 இல், சனாதிபதி பிரேமதாசவ-ின் கீழ் அவைத் தலைவராக நியமிக்கப்பட்டார். தொழில், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

1991 ஆம் ஆண்டு ஐதேக க்குள் காம-ினி திசநாயக்க மற்றும் அத்துலமுதலி ஒரு பக்கமும் மறுபக்கம் இரணசிங்க பிரேமதாச இடையில் உட்கட்சி மோதல் ஏற்பட்ட போது இரணில் கட்சித் தலைவர் பிரேமாதாசாவை ஆதரித்தார்.

சனாதிபதி தேர்தலில் இரணில் விக்கிரமசிங்கவுக்கு 134 வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. இது மொத்தம் 225 உறுப்பினர்களில் 60 விழுக்காடாகும். இதனை யாரும் எதிர்பார்க்கவில்லை. கடந்த தேர்தலில் போட்டியிட்ட பொதுசன பெரமுன 145 தொகுதிக-ளில் வெற்றி பெற்றிருந்தது. தேர்தலுக்குப் பின்னர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள், ரிசாட் பதியுதீனி-ன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த 3 உறுப்பினர்கள் ஆளும் கட்சியோடு சேர்ந்து கொண்டார்கள். இதன் காரணமா 20 ஆவது சட்ட திருத்தம் 155 வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதன் பின்னர் பொதுசன பெருமனவில் உடைவுகள் ஏற்பட்டன. சிறிலங்கா சுதந்திரக்கட்சி (15 உறுப்பினர்கள்) விமல் வீரவன்ச மற்றும் தயா கமன்பில போன்றோர் (10 உறுப்பினர்கள்) பொதுசன பெருமு-னவில் இருந்து விலகினார்கள். பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து 2 பேரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து இரண்டு பேரும் பொதுசன பெரமுனவுக்குத் தாவினார்கள். அமைச்சர் ஜிஎல் பீரிஸ், சனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப்பெரும இருவரும் இரணிலுக்கு வாக்களிக்கவில்லை. அப்படிப்பார்த்தால் 122 வாக்குகளே விக்கிரமசிங்க அவர்களுக்கு விழுந்திருக்க வேண்டும். 134 வாக்குகள் எங்கிருந்து வந்தது?

வழக்கம் போல முஸ்லிம் நா.உறுப்பினர்கள் இரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு வாக்களித்துள்ளார்கள். சுதந்திரக் கட்சி நா.உறுப்பினர்கள் சிலர் மாறி வாக்களித்துள்ளார்கள் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரே தெரிவித்துள்ளார்.

மகிந்த இராசபக்ச செய்தியாளர்களிடம் பேசும் போது



## டலஸைக் களமிறக்கியவர்கள் தாங்களே என்கிறார் மஹிந்தர்

நாம் டலஸை போட்டியிடச் செய்தோம். நாமும் வாக்களித்தோம். ஆனால் அவர் தோல்வியடைந்து விட்டார் என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதிக வாக்குகள் கிடைத்தமையால் ரணில் விக்கிரமசிங்க வெற்றிப் பெற்றார். எதிர்காலத்தில் 8



"நாங்கள் டலஸ் அழகப்பெருமாவை போட்டியிடச் செய்தோம். நாமும் வாக்களித்தோம். ஆனால் தோல்வி அடைந்துவிட்டார்" எனக் குறிப்பிட்டார். அழகப்பெருமாவுக்கு வாக்களித்தது உண்மையானால் அவர் ஆதரித்ததாகச் சொல்லும் அழகப்பெருமா எப்படித் தோற்றுப் போனார்? இது சனாதிபதி தேர்தல் நேர்மையாக நடைபெறவில்லை என்பதைக் காட்டுகிறது.

சனாதிபதி தேர்தலை அடுத்து ஒரு சர்வகட்சி அமைச்சரவை உருவாக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. அது சாத்தியப்படுமா என்பது தெரியவில்லை. ஏற்கனவே பொதுசன பெரமுனவைச் சார்ந்த தினேஷ் குணவர்த்தன அடுத்த பிரதமர் என அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னைய அமைச்சர்கள் மீண்டும் அமைச்சர்களாக நியமிக்கப்பட உள்ளார்கள்.

கடந்த மே மாதக் கடைசியில் பிரதமர் இரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தினால் கொழும்பு காலி முகத்திடலில் உள்ள 'கோட்டகோகம' போராட்டத் தளத்தில் போராட்டக்காரர்களுக்கான இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இரு கட்சிகளுக்கும் இடையிலான தொடர்பாடல் சாதனமாக சிறப்பு இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஐதேக யின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்திருந்தார். அரசாங்கத்திற்கு எதிரான போராட்டக்காரர்கள் தமது சிக்கல்களை முன்வைக்கவும், தமது முன்மொழிவுகளை பிரதமரிடம் சமர்ப்பிக்கவும் இந்த இணையத்தளம் உதவும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

கோட்டகோகம எதிர்ப்பாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்து ஆராய பிரதமரால் நியமிக்கப்பட்ட விஜேவர்தன, போராட்டக்காரர்கள் இப்போது ஂஅழக-கஉைந.பழஎ.டம ஊடாக தொடர்பு கொள்ள முடியும் என்றும் கூறினார்.

(தொடர்ச்சி 20ம் பக்கம்)


SINHA
FROM LION BREWERY SRI LANKA
FROM LION BREWERY SRI LANKA
254, Colombo Road, Biyagama, Sri Lanka
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
alc./vol
330 ml
es / Bouteilles
SINHA
–1881–
SINHA
LAGER
IMPORTED
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
4.8% alc./vol
6 x 330 ml
Bottles / Bouteilles
AVAILABLE AT SELECTED BEER STORES
For further info go to www.thebeerstore.ca
or call 416-443-2020




# 68 Russell Jarvis Drive, Markham






(9th Lane
& Rouge Bank)

3 Bed
3washrooms
----------
4 Cars On
Driveway
And Double Car
Garage
----------
Finished
Basement
With Large
Recreation Area
----------
Across from
Legacy PS

**Open House
July 23/24
@ 2-4PM**

http://www.68russelljarvis.com




# 96 Jack Monkman Cres, Markham

(Markham & Denison)

Detached
spacious
updated home
in Markham!

----------

4+1 Bed
4 Washrooms

----------

Finished
basement for
extra
recreational and
living space!






http://www.jackmonkman.ca

**Kavas** Satchithanandan
*Sales Representative*

**416 288 8882**

RE/MAX REALTRON Realty Inc. Brokerage | Home of the Top Producers

TEAM BLUE FORCE



"Our focus in your investment is our mission"

SULLIVAN AUTO GROUP's

Tamil Fest
தமிழர் தெரு விழா
2022

POWERED BY iConnect Mortgages

ஆசியாவுக்கு வெளியே நடைபெறும் மாபெரும் தமிழர் தெருவிழா !




ஒகஸ்ற் 27 & 28
August 27 & 28

Markham Road
(Between McNicoll Ave.
& Passmore Ave.)

தமிழர் பெருமை சொல்லும் வகையில் கலை நிகழ்வுகள், உணவு வகைகள், மற்றும் பல பொழுது போக்குகள்!

வர்த்தக அங்காடிகள் அமைக்க விரும்புபவர்கள் தாமதமின்றிக் கனடிய தமிழர் பேரவையுடன் தொடர்பு கொள்ளவும்: (416) 434-7658 / (647) 676-3965.

TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
BRIMELL TOYOTA · Formula Honda · MORNINGSIDE NISSAN

POWERED BY
iConnect Mortgages · Dominion Lending Centres

HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

ZONE SPONSORS
COMPUTEK COLLEGE · HOMELIFE Future Realty Inc. · NAVA WILSON LLP Barristers and Solicitors · Pradon Silks · TD · VIBRANT HOSPITALITY GROUP · WOW! WING HOUSE

COMMUNITY PARTNER
Federation of Tamil Sangams of North America (Since 1988)

SUPPORTED BY
TORONTO · Canada

MEDIA SPONSORS
ATN Asian Television Network · east FM 102.7 · STAR METROLAND MEDIA

TAMILFEST.CA | TAMILFEST@CANADIANTAMILCONGRESS.CA | 416.240.0078 |
@tamilfest

# MEDCENTRE HEALTH

SYNCHRONIZING HEALTH SECTORS

## Markham McNicoll Women's Health Clinic (MMWHC)

## மார்க்கம் மக்நிக்கல் மகளிர் மருத்துவ நிலையம்

**2901 Markham Road, Unit – 7,**
**Scarborough, ON, M1X 0B6**
**TEL: 416 331 8888 – Fax: 416 331 8889**

**முழுவதும் (100%) பெண்களாலேயே பெண்களுக்கே உரிய மருத்துவ தேவைகளை பெண்களுக்கு விருப்பமான சூழலில் இரகசியத்தன்மையுடன் வழங்குகின்றோம்.**

**சேவைகள்:**

- குடும்பக் கட்டுப்பாடு/கருத்தடை சம்பந்தமான தேவைகள் (IUD, IMPLANTS etc.)
- PAP TEST (PAP SMEAR)
- பால்வினை நோய்களுக்கான சோதனைகளும் தீர்வுகளும். (SEXUALLY TRANSMITTED INFECTIONS)
- பெண்களுக்கு உரித்தான வேறு பல மருத்துவத் தேவைகள்.

**முக்கிய தகவல்கள்:**

- மருத்துவ அட்டை (HEALTH CARD - OHIP) ஏற்றுக்கொள்ளப்படும்.
- HEALTH CARD இல் உள்ளடங்காத சேவைகளுக்கு கட்டணமுண்டு.
- எந்தக் கிழமை நாளிலும் 416 331 8888 எனும் இலக்கத்தில் விபரம் அறிய முடியும்.

எந்த மருத்துவர் மூலமும் Reference செய்ய முடியும்.
யாரும் நேரடியாக தமக்கான Appointment ஐப் பெற முடியும்.



**www.medcentrehealth.com**

# நடுக்கடலில் தத்தளித்த மன்னார் மீனவர்களை மீட்ட தமிழக மீனவர்கள்

- யாழ்ப்பாணத்தில் இருந்து நடராசா லோகதயாளன்



இந்திய இலங்கை கடற்பரப்பில் இரு நாட்டு மீனவர்களும் எல்லை தாண்டியதாக குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்து சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் படகுகள் இன்றி மீனவர்கள் மட்டும் விடுவிக்கப்படுவது ஆகியவை தொடர்கதையாக இருக்கும் வேளையில் மீனவர்களிடையே உதவும் பண்பு மாறாமல் உள்ளது.

அவ்வகையில் படகு பழுதாகி நடுக்கடலில் தத்தளித்த இலங்கை மீனவர்கள் இருவர் தமிழக மீனவர்களால் காப்பாற்றப்பட்டனர்.


மன்னார் பியர் பகுதியில் இருந்து படகு ஒன்றில் இம்மாதம் 14 ஆம் திகதி கடல் தொழிலிற்குச் சென்ற மூவரில் இருவர் தமிழக மீனவர்களால் உயிரோடு மீட்கப்பட்டபோதும் ஒருவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டம் பியர் பகுதியில் இருந்து கடந்த 14 ஆம் திகதி பகல் ஒரு மணிக்கு தொழிலிற்குச் சென்ற ஓர் படகு கரை திரும்பவில்லை என்ற தகவல் தெரிவிக்கப்பட்டு கடற்படையினருக்கும் அந்த தகவல் வழங்கப்பட்டது. இருந்தபோதும் மூவருடன் பயணித்த இந்த படகு நடுக் கடலில் 14 ஆம் திகதி இரவே பழுதடைந்த காரணத்தால் மூவரும் தம்மை படகுடன் கட்டியுள்ளனர். இவ்வாறு கட்டியிருந்தவர்களை இந்திய ட்ரோலர் படகு அவதானித்து உயிருடன் இருந்த இருவரையும் மீட்டுள்ளனர்.

இவ்வாறு இருவரையும் மீட்ட தமிழக ட்ரோலர் விசைப் படகு மன்னார் மீனவர்களை கச்சதீவை அண்மித்த பகுதியில் கொண்டு வந்து இறக்கியுள்ளனர். கச்சதீவிற்கு அருகில் கடலில் குதித்து கரையேறிய மோகன்ராஜ், ஜெனார்த்தனன் ஆகிய இரு மீனவர்களையும் கடற்படையினர் மீட்டு மன்னார் அழைத்து வந்தனர்.

கச்சத்தீவு தொடர்பான பிரச்சனை இரு நாடுகளுக்கும் இடையே நெருடலாகவே தொடரும் நிலையில், இந்திய மீனவர்களால் மீட்கப்பட்ட மன்னார் பகுதி மீனவர்கள் கச்சத்தீவிற்கு அருகில் இறக்கிவிடப்பட்டனர். கச்சத்தீவிற்கே வந்து அவர்களை இறக்கிவிடும் சாத்தியங்கள் இருந்த போதிலும், இலங்கை கடற்படையின் அச்சுறுத்தல் காரணமாகவே அந்த இரு மீனவர்களும் அதற்கு அண்மித்த பகுதியில் இறக்கிவிடப்பட்டனர் என்று அறிய முடிகிறது.

அதேவேளை இந்திய மீனவர்கள் இந்த மீனவர்களை மீட்டதற்கு அப்பாற்பட்டு, அவர்களின் ட்ரோலர் விசைப்படகு இலங்கை கடற்பரப்பிற்கு அருகில் தொடர்ந்து தொழிலில் ஈடுபடுவதையும் இந்த சந்தர்ப்பம் மீண்டும் காட்டுகிறது. போருக்கு பிறகு தமது வாழ்வாதாரத்தை இன்னும் முழுமையாக மீட்டெடுக்க முடியாமல் இலங்கையின் வட பகுதி மீனவர்கள் சிரமப்படும் நிலையில், இந்திய ட்ரோலர் விசைப்படகுகள் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி கடற்தொழிலில் ஈடுபடுகின்றன என்று வட பகுதி மீனவர்கள் ஆதங்கப்படுகின்றனர்.



இதேநேரம் படகில் உயிரிழந்த இராயமூர்த்தி என்னும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 52 வயது மீனவரை மீட்க மன்னாரில் இருந்து ஓர் படகு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளது.

மன்னாரின் இரு மீனவர்களையும் மீட்ட தமிழகம் இராமேஸ்வரம் விசைப்படகான IND TN 10 MM 738 இலக்க கார்மாக்ஸ் என்பரின் படகை செலுத்தி வந்த ஓட்டியான தனுஷ் நிக்லாஸ் ரவீஸ்டன் என்னும் அந்தோணியார்புரம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்தவரைத் உதயன் சார்பாகத் தொடர்பு கொண்டு இது தொடர்பான விபரம் கேட்டபோது, ”17/51 என்ற பொயின்ரை அண்மித்த பகுதியில் 2022-07-16 அன்று இரவு 6.20 மணியளவில் ஓர் படகு தத்தளித்த நிலைமயில் இருப்பதனைக் கண்டோம். அது இலங்கை மீனவர்களினது என்பதனையும் அடையாளம் கண்டபோது அதில் தம்மைத் தாமே பாதுகாப்பதற்காகவும் தம்மை கடல் அலை இழுத்துச் செல்லாத வகையிலும் தாமே படகுடன் தம்மை இணைத்து கட்டியவாறு மூவர் தத்தளித்தவாறு இருந்தனர்.

இதனால் எமது தொழிலைக் கைவிட்டு உடனடியாக அந்த மூன்று உயிர்களையும் காப்பதற்காக முயன்றோம். அதற்காக சுமார் 2 மணிநேரம் போராடி இருவரை உயிரோடு மீட்டோம். இதற்காக எமது படகில் என்னுடன் இருந்த 7 பேரும் பெரிதும் முயன்ற சமயம் கடல் அலை அதிகமாக இருந்தமையால் அந்த மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இதன்பின்பு 3வது மீனவரை மீட்க முயற்சித்தோம். அப்போது அவர் உயிர் பிரிந்த நிலையில் காணப்பட்டார். அதனை இலங்கை மீனவர்களும் அறிந்திருந்தனர்”.



இதனால் வேறு வழியின்றி மீட்கப்பட்ட இருவரை மட்டும் ஏற்றிய அவர்கள் கச்சதீவை அண்மித்த பகுதிவரை உயிரைப் பணயம் வைத்தே வந்ததாக கூறுகின்றனர். இலங்கை கடற்படை கண்டால் கைது செய்யும் என்று அஞ்சியதாகவும் அவர்களை தமது நாட்டிற்கு கொண்டு சென்றால் இந்திய கடற்படை தம்மை கைது செய்யும் என்ற நிலையில் இலங்கை மீனவர்களின் விருப்பத்தைக் கேட்டே நடவடிக்கை எடுத்ததாக தனுஷ் நிக்லாஸ் ரவீஸ்டன் கூறினார்.

“அவர்களின் விருப்பத்திற்கு அமைய கச்சதீவை அண்டிய பகுதியில் அதிகாலை 5 மணிக்கு இறக்கி விட்டு அவர்கள் கச்சதீவை அடைந்து எமக்கு கை அசைத்து வழி அனுப்பும் வரை காத்திருந்து அவர்களின் உயிர் தப்பியதனை உறுதி செய்த பின்பு தமிழகம் திரும்பினோம்” எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையில், எரிபொருளுக்கு மிகவும் கடுமையான தட்டுப்படு



நிலவுகிறது. இதன் காரணமாக மண்ணெண்ணெய் கிடைக்காத காரணத்தால் கடந்த சில மாதங்களாக கடற்தொழிலுக்கு செல்ல முடியாத நிலையில் இலங்கை மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்து செய்வதறியாமல் தவிக்கின்றனர்.

இந்த நெருக்கடி காரணமாக பல்லாயிரக்கணக்கானவர்கள் ஜீவனோபாயத்தை இழத்து தவிக்கின்றனர். கடற்தொழிலை விடவும் முடியவில்லை வேறு வழியும் தெரியவில்லை என்று வட மாகாண மீனவர்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

நடுக்கடலில் படகுகள் பழுதாகி இருநாட்டு மீனவர்களும் தத்தளிக்கும் வேளையில் இருநாட்டு கடற்படையினரும் கைது நடவடிக்கை போன்றவற்றில் ஈடுபடவோ அவ்வாறு செய்யப்படும் என்று அச்சுறுத்தல் விடுக்காமல், மனிதாபிமானத்தோடு தமக்கு உதவ வேண்டும் என்பது இருநாட்டு மீனவர்களின் எதிர்ப்பார்ப்பாக உள்ளது.




# அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை நிரந்தர எதிகளும் இல்லை என்பதையே இரணில் விக்கிரமசிங்கா சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டது காட்டுகிறது!

(14ம் பக்கத் தொடர்ச்சி)

"நடைமுறை மற்றும் ஆக்கபூர்வமான முன்மொழிவுகளை முன்வைப்பவர்கள் பிரதமர் இரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாட அனுமதிக்கப்படுவார்கள். நான் போராட்டக்காரர்களுடன் இணைந்து அவர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என்று நம்புகிறேன்" என்று அவர் மேலும் கூறினார்.

சனாதிபதியின் பதவி விலகல், பிரதமரின் பதவி விலகல் மற்றும் அரச முறைமை மாற்றத்தை வலியுறுத்தி அரசாங்கத்திற்கு எதிராக 'கொட்டகோகம'வில் கடந்த 104 நாட்களுக்கும் மேலாக காலிமுகத் திடல் போராளிகளும், பல்கலைக் கழக மாணவர்களும், பொதுமக்களும் நாடு தழுவிய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் இரணில் விக்கிரமசிங்க சனா-திபதியாக பதவி ஏற்ற பின்னர் அவரது பேச்சில் சுருதி மாறிக் காணப்படுகிறது. யாரைப் போராளிகள் என வருணித்தாரோ அவர்களை இப்போது "பாசிஸ்ட்டுகள்" "கிளர்ச்சின்காரர்கள்" எனத் திட்டத் தொடங்கியுள்ளார்

தனது குறுகிய பதவிக் காலத்தில், சனாதிபதி-யின் அதிகாரங்களைக் குறைக்கவும், நாடாளுமன்றத்தைப் பலப்படுத்தவும் அரசியலமைப்பை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை தொடங்கவுள்ளதாக விக்கிரமசிங்க தொலைக்காட்சி அறிக்கை ஒன்றில் தெரிவித்தார். மேலும், சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்கப் போவதாகவும், கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அவர் சூளுரைத்துள்ளார்.

மே 13 புதன்கிழமை இரவு நாடாளுமன்றத்திற்கு அருகில் இடம்பெற்ற மோதல்களில் பல இராணுவத்தினர் காயமடைந்ததாகக் கூறப்படும்போது, உண்மையான எதிர்ப்பாளர்கள் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள் என்று விக்கிரமசிங்க கூறுகிறார். "எதிர்ப்பாளர்களுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே பெரிய வித்தியாசம் உள்ளது. கிளர்ச்சியாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்போம்," என்கிறார்.

கடந்த மே மாதம் விக்கிரமசிங்க அவர்களைப் பிரதமராக நியமித்தது கோட்டாபய இராசபக்சவை பதவி விலக வேண்டும் என்ற அழுத்தத்தை குறைப்பதற்கு என்று எதிர்ப்பாளர்கள் கருதுகிறார்கள். விக்கிரமசிங்க பதவி விலகு மட்டும் தங்கள் போராட்டம் தொடரும் என போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர்.

சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க ஒன்றை மட்டும் மறந்துவிடக் கூடாது. யாரைப் பார்த்து "பாசிஸ்டுகள்" "கிளர்ச்சிக்காரர்கள்" என்று வசை பாடுகிறாரோ அவர்களது இடைவிடாத போராட்டம் காரணமாகவே அவர் இன்று சனாதிபதியாக மகுடம் சூட்டப்பட்டுள்ளார். இதனை அவர் மறக்கக் கூடாது.

இதற்கிடையில் வருகிற ஓகஸ்ட் மாதத்தில் நாடு திரும்பப் போவதாக சிங்கப்பூரில் இருந்து கோட்டாபய அறிவித்துள்ளார். சிங்கப்பூர் அரசு அவருக்கு 14 நாட்களுக்கு மட்டும் விசா கொடுத்துள்ளது. இதுவரை எந்த நாடும் அவருக்குக் கொடுக்க முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர் இப்போது சாதாரண குடிமகன். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை நிறைவேற்றிய தீமானத்துக்கு அமைய அவர் கால் பதிக்கும் நாடு அவரைக் கைது செய்யலாம்.

2009 ஆம் ஆண்டு முடிவடைந்த இலங்கையின் நீண்ட உள்நாட்டுப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை சேகரித்து பாதுகாக்க ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் தலைவர் **Michelle Bachelet** அதிகாரம் பெற்றுள்ளார். சந்தேக நபர்களை வெளிநாடுகளில் விசாரணை செய்ய வேண்டும் என்றும் சபையின் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

கோட்டாபய இராபக்சவுக்கு விசா வழங்க அமெரிக்கா மறுத்திருப்பதற்கு பன்னாட்டு சர்வதேச அதிகார வரம்புச் சட்டம் காரணமா? என இலங்கையில் உள்ள சனாதிபதி சட்டத்தரணி ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார். **(https://island.lk/universal-jurisdiction-manohara-asks-whether-us-visa-refusal-aimed-at-gotabayas-arrest/)**

சில மாதங்களுக்கு முன்னர் வரை இரணில் விக்ரமசிங்கவைத் துரோகி என்று முத்திரை குத்திய ஸ்ரீலங்கா பொதுசன பெரமுன நா.உறுப்பினர்கள் தற்போது அவர் பின்னால் அணி திரண்டுள்ளனர் என இராமண்ணா பவுத்த பீடத்தின் பிரதம சங்கநாயக்க (தட்சிண லங்காவ) ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக எதையும் செய்வார்கள் எனவும், மக்களின் வேட்கைகளை அவர்கள் சிறிதும் கருதுவதில்லை எனவும் தேரர் கூறியுள்ளார்.

"மகிந்த இராசபக்ச முதல் பின்வரிசை உறுப்பினர்கள் வரை அனைத்துப் பொதுசன பெரமுன உறுப்பினர்களும் விக்கிரமசிங்கவை துரோகி எனக் குற்றம் சாட்டினார்கள். இப்போது அவருக்காக தோட்டாக்களை விழுங்க அணியமாகிவிட்டனர். எனவே, விக்கிரமசிங்கவுக்கு எதிராக அவர்கள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் பொய்யானதாக இருக்கலாம்" என்றும் தேரர் கூறினார்.
அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை நிரந்தர எதிகளும் இல்லை என்பதையே இரணில் விக்கிரமசிங்கா சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டது காட்டுகிறது!


# அருள் மிகு நல்லூர்க்கந்தசுவாமி கோவில்

20 Nugget Ave #01,Scarborough, ONT. (Mc Cowan/Sheppard)

தொலைபேசி இலக்கம் -4162939004





## நல்லூர்க்கந்தன் 27 தின மகோற்சவ விஞ்ஞாபனம்

01.08.2022 திங்கள் முதல் 28.08.2022 ஞாயிறுக்கிழமை வரை

குகனேய அடியார்களே !
நிகழும் மங்களகரமான சுபகிருது வருசத்திற்கான நல்லூர் முருகன் 27 தினத்திருவிழா கனடா நாட்டில் ரொறன்ரோ மாநகரின் எழில் நகராம் ஸ்காபரோ பகுதியில் எழுந்தருளியிருக்கும் நல்லூர்க்கந்தன் என்ற திருநாமத்துடன் கூடிய முருகப் பெருமானுக்கு 27 தினமும் திருவிழா நடைபெறத்திருவருள் கூடியுள்ளது. யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்தன் திருவிழாவை போன்றே இங்கும் அதே காலப்பகுதியில் அழகு மிகுந்த அலங்காரக்காட்சியுடன் அபிசேகம் ,விசேடபூசை,சுவாமிவீதிவலம் வருதல் போன்ற அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. முருகன் அடியார்கள் அனைவரும் திருவிழாக்காலங்களில் ஆலயத்திற்க்கு வருகை தந்து நல்லூர்க்கந்தவேலனின் திருவருளைப்பெற்று வாழ்வீர்களாக.

| திகதி | கிழமை | நாள் | விசேடதிருவிழாக்கள் |
|---|---|---|---|
| 01.08.22 | திங்கள் | 00 | கணபதிஹோமம் (காலை) |
| 02.08.22 | செவ்வா | 01 | கொடியேற்றம் |
| 05.08.22 | வெள்ளி | 04 | வரலஸ்மி விளக்குப்பூஜை. |
| 09.08.22 | செவ்வா | 08 | பிரதோசம் |
| 11.08.22 | வியாழ | 10 | மஞ்சம். |
| 14.08.22 | ஞாயிறு | 13 | சங்கடஹரசதுர்த்தி |
| 17.08.22 | புதன் | 16 | அருணகிரிநாதர் உற்சவம் |
| 19.08.22 | வெள்ளி | 18 | கிருஷ்ணஜெயந்தி திருவிழா<br>கார்த்திகை கற்பூரத்திருவிழா |
| 20.08.22 | சனி | 19 | சூரியோற்சவம் |
| 21.08.22 | ஞாயிறு | 20 | சந்தானகோபாலர் திருவிழா |
| 22.08.22 | திங்கள் | 21 | கஜவல்லி மஹாவல்லி திருவிழா |
| 23.08.22 | செவ்வா | 22 | மாம்பழத்திருவிழா, |
| 24.08.22 | புதன் | 23 | சப்பறம், பிரதோசம் |
| 25.08.22 | வியாழ | 24 | தேர்த்திருவிழா |
| 26.08.22 | வெள்ளி | 25 | தீர்த்த உற்சவம் |
| 27.08.22 | சனி | 26 | திருக்கல்லியாணம் |
| 28.08.22 | ஞாயிறு | 27 | வைரவர் உற்சவம் |

**காலை DAY TIME**

காலை 07:00 மணி திருவனந்தல் 1ST Pooja 7:00 AM
காலை 10:00 மணி காலசந்தி 2nd Pooja 10:00 AM
காலை 10:30 மணி கும்ப பூஜை Kumba pooja 10:30 AM
பகல் 12.00 மணி விசேட பூஜை 3rd Pooja 12:00 PM
பகல் 12:20 மணி வசந்த மண்டபப்பூஜை Vasantha Mandapa Pooja
பகல் 01:00மணி அன்னதானம் வழங்கப்படும். Annathanam Distribution

**மாலை NIGHT TIME**

மாலை 5:30 மணி சாயரட்ச்சை 1ST Pooja 5:30 PM
மாலை 6:15 மணி கும்ப பூஜை Kumba pooja 6:15 pm
மாலை 7:00 மணி மூலஸ்தானபூசை Main Pooja 7:00 Pm
இரவு 7:30 மணி வசந்த மண்டபப்பூஜை Vasantha Mandapa Pooja 7:30 Pm
இரவு 7:50 மணி சுவாமி உள்வீதி வலம் Sri Murugan Procession 7:50 pm

பகல்.இரவுதிருவிழா உபயங்கள் செய்ய விரும்வோர் ,வரலக்ஸ்மி விளக்குப்பூசை கலந்து கொள்ளவிரும்வோர் கற்பூரச்சட்டி,காவடிபோன்ற நேர்த்திக்கடன் செய்யவுள்ளோர் தேர்த்திருவிழாஅன்றுஆறு முப்பெருமானுக்கு108பால் குடபிசேகம்நிகழவுள்ளதால் பால்குடஅபிசேகத்தில் கலந்தகொள்ளவிரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை பதிவுசெய்யவும்

**25.08.2022 வியாழக்கிழமை தேர்த்திருவிழா**

காலை 6:00 மணி மூலமூர்த்திக்கு அபிஷேகம்
காலை 7:00 மணி மூலஸ்தானபூசை
காலை 8:00 மணி வசந்தமண்டபபூசை
காலை 09:00 மணி தேர்புறப்பாடுதல்
காலை 10:00 மணி இருப்பிடம்சேர்தல்
பகல் 12:00 மணி பச்சைசார்த்தல் (தேரிலிருந்துசுவாமிஇறக்குதல், பிராயச்சித்தாபிஷேகம்,சண்முகார்ச்சனை)அன்னதானம் வழங்கல்

**அடியார்கள் அனைவரும் திருவிழாக்காலங்களில் ஆலயத்திற்க்கு வருகை தந்து நல்லூர்க்கந்தவேலனின் திருவருளைப்பெற்று வாழ்வீர்களாக.** தொலைபேசி இலக்கம் -416 2939004

# இந்தியாவின் 15வது குடியரசுத் தலைவருக்கான தேர்தல்: பாஜக வேட்பாளர் திரவுபதி முர்மு அபார வெற்றி

இந்திய குடியரசுத் தலைவர் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் திரவுபதி முர்மு (64) அமோக வெற்றி பெற்றார். அவர் 64 சதவீத வாக்குகளைப் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட, எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் யஷ்வந்த் சின்ஹாவுக்கு 36 சதவீத வாக்குகள் கிடைத்தன.தற்போதைய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் பதவிக் காலம் வரும் 24ம் தேதியுடன் நிறைவடைகிறது. இதையடுத்து, புதிய குடியரசுத் தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது.

பாஜக கூட்டணி சார்பில் ஜார்க்கண்ட் முன்னாள் ஆளுநர் திரவுபதி முர்முவும், எதிர்க்கட்சிகள் சார்பில் முன்னாள் மத்திய அமைச்சர் யஷ்வந்த் சின்ஹாவும் வேட்பாளர் களாக அறிவிக்கப்பட்டனர்.பாஜக கூட்டணி வேட்பாளர் முர்மு பழங்குடியினத்தைச் சேர்ந்தவர் என்பதால், அந்தக் கூட்டணியில் இடம்பெறாத பல்வேறு கட்சிகள் அவருக்கு ஆதரவு தெரிவித்தன.கடந்த 18ம் தேதி நாட்டின் குடியரசுத் தலைவர் தேர்தல் நடைபெற்றது. நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் எம்.பி.க்கள், எம்எல்ஏ.க்கள் வாக்களித்தனர். இந்த தேர்தலில் 771 எம்.பி.க்களும், 4,025 எம்எல்ஏ.க்களும் வாக்களித்தனர். ஒட்டுமொத்தமாக 99 சதவீத வாக்குகள் பதிவாகின.குடியரசுத் தலைவர் தேர்தலில் பதிவான வாக்குகள் டெல்லியில் நேற்று எண்ணப்பட்டன.

முதல் சுற்றில் எம்.பி.க்களின் வாக்குகளும், தொடர்ந்து எம்எல்ஏ.க்கள் வாக்குகளும் எண்ணப்பட்டன. இறுதியில், திரவுபதி முர்முவுக்கு ஒட்டுமொத்தமாக 2,824 வாக்குகள் கிடைத்தன. இதன்படி அவருக்கு 6,76,803 வாக்கு மதிப்பு கிடைத்தது. முர்மு 64 சதவீத



வாக்குகளை பெற்றுள்ளார். யஷ்வந்த் சின்ஹாவுக்கு 1,877 வாக்குகள் கிடைத்தன. இதன்படி அவருக்கு 3,80,177 வாக்கு மதிப்பு கிடைத்தது. சின்ஹா 36 சதவீத வாக்குகளை பெற்றுள்ளார்.திரவுபதி முர்மு நாட்டின் முதல் பழங்குடியின குடியரசுத் தலைவர், 2வது பெண் குடியரசுத் தலைவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். வரும் 25ம் தேதி அவர் குடியரசுத் தலைவராகப் பதவியேற்கிறார்.

பிரதமர் மோடி வாழ்த்து: பிரதமர் மோடி ட்விட்டரில் நேற்று வெளியிட்ட பதிவில், "புதிய குடியரசுத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள திரவுபதி முர்முக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து கொள்கிறேன். எம்எல்ஏவாக, அமைச்சராக, ஆளுநராக அவர் மிகச் சிறப்பாகப் பணியாற்றினார். இதேபோல, மிகச் சிறந்த குடியரசுத் தலைவராக அவர் நாட்டை வழிநடத்துவார். 130 கோடி இந்தியர்களும் 75வது சுதந்திர தினத்தைக் கொண்டாடி வருகின்றனர். ஒட்டுமொத்த இந்தியர்களுக்கும் நம்பிக்கை நட்சத்திரமாக அவர் உருவெடுத்துள்ளார். இந்தியா புதிய வரலாறை எழுதுகிறது" என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், திரவுபதி முர்முவை டெல்லியில் நேற்று பிரதமர் நரேந்திர மோடி நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். பாஜக தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா உடனிருந்தார்.யஷ்வந்த் சின்ஹா வாழ்த்து: எதிர்க்கட்சி வேட்பாளர் யஷ்வந்த் சின்ஹா ட்விட்டரில் நேற்று வெளியிட்ட பதிவில், "குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற திரவுபதி முர்முவுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசமைப்புச் சாசனத்தின் பாதுகாவலனாக, அச்சமின்றியும் எவ்வித விருப்பு, வெறுப்பின்றியும் அவர் பணியாற்றுவார் என்று ஒட்டுமொத்த நாடும் எதிர்பார்க்கிறது" என்று தெரிவித்துள்ளார்.சொந்த கிராமத்தில் கொண்டாட்டம்: நாட்டின் புதிய குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவின் பூர்வீக கிராமமான ஒடிசா மாநிலம் உபர்பேடாவில் 300 வீடுகள் உள்ளன.

சுமார் 6,000 பேர் அங்கு வசிக்கின்றனர்.குடியரசுத் தலைவர் தேர்தலில் அவர் அமோக வெற்றி பெற்றதைத் தொடர்ந்தது, அந்த கிராமமே விழாக்கோலம் பூண்டுள்ளது.கிராம மக்கள் ஒன்று திரண்டு லட்டுகளைத் தயாரித்து, அனைவருக்கும் வழங்கினர். கிராமத்தின் பல்வேறு பகுதிகளிலும் இளைஞர்கள் டிரம்ஸ் இசைத்து, தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பாரம்பரிய உடையணிந்த இளைஞர்களும், இளம்பெண்களும் பாரம்பரிய நடனமாடினர்.முதல்வர்கள், தலைவர்கள் வாழ்த்து: திரவுபதி முர்முவுக்கு, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், முன்னாள் முதல்வர் பழனிசாமி மற்றும் பல்வேறு மாநிலங்களின் முதல்வர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

# அதிமுக தலைமை அலுவலகம் போலீஸ் பாதுகாப்புடன் திறப்பு : சேதம், காணாமல் போன பொருட்களை மதிப்பிடும் பணி தொடக்கம்



உயர் நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, அதிமுக தலைமை அலுவலகத்தில் வைக்கப் பட்டிருந்த சீல் அகற்றப்பட்டு, பலத்த போலீஸ் பாதுகாப்புடன் நேற்று திறக்கப்பட்டது.அதிமுகவில் பழனிசாமி, பன்னீர்செல்வம் ஆகியோர் இரு அணிகளாக செயல்பட்டு வருகின்றனர். இந்நிலையில் கடும் சட்டப் போராட்டத்துக்குப் பிறகு பழனிசாமி தலைமையில் கடந்த 11ம்தேதி சென்னை வானகரத்தில் அதிமுக சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் கட்சியின் இடைக்கால பொதுச்செயலாளராக பழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பொதுக்குழு நடந்து கொண்டிருக்கும் வேளையில், பிரச்சார வாகனத்தில் பன்னீர்செல்வம் தனது ஆதரவாளர்களுடன் ராயப்பேட்டையில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்துக்கு திடீரென வந்தார். அப்போது அங்கிருந்த பழனிசாமி ஆதரவாளர்களுக்கும், பன்னீர்செல்வம் ஆதரவாளர்களுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் கட்சி அலுவலகக் கதவுகளை உடைத்துக்கொண்டு உள்ளே சென்றனர். அங்கு பல்வேறு அறைகளை சேதப்படுத்தி, ஆவணங்கள் மற்றும் விலைமதிப்புள்ள ஜெயலலிதாவின் பரிசுப் பொருட்கள் உள்ளிட்டவற்றை அவர்கள் தூக்கிச் சென்றதாக பழனிசாமி தரப்பினர் குற்றம்சாட்டினர்.

தகவல் அறிந்து விரைந்து வந்த போலீஸார் இரு தரப்பினரையும் விரட்டி அடித்தனர். தொடர்ந்து வந்த வருவாய்த் துறையினர் கட்சி தலைமை அலுவலகத்தைப் பூட்டி சீல் வைத்தனர். அதைத்தொடர்ந்து, கட்சி தலைமை அலுவலகத்தை ஒப்படைக்கக் கோரி, பன்னீர்செல்லம், பழனிசாமி தரப்பினர் தனித்தனியே சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கில் நேற்று முன்தினம் வழங்கிய தீர்ப்பில், கட்சி அலுவலக சாவியைபழனிசாமி வசம் ஒப்படைக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.உயர் நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து, மயிலாப்பூர் வட்டாட்சியர் ஜெகஜீவன் ராம் தலைமையிலான வருவாய்த் துறை அதிகாரிகள், ராயப்பேட்டை அதிமுக தலைமை அலுவலகத்துக்கு நேற்று காலை வந்தனர்.பிறகு கடந்த 11ம் தேதி வைக்கப்பட்ட சீலை அகற்றி எழுத்துப்பூர்வமாக அதிமுக தலைமை அலுவலக மேலாளர் மகாலிங்கத்திடம் அலுவலக சாவியை ஒப்படைத்தனர்.

அப்போது அதிமுகமுன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் உடனிருந்தார்.அலுவலகத்தின் தரை தளத்தில் இருக்கும் தலைவர்களின் அறைகள் உடைக்கப்பட்டு, அவற்றிலிருந்த ஆவணங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. முதல் தளத்தில்இருக்கும் கட்சி அலுவலக அறையில் இருந்த பீரோ உடைக்கப்பட்டு அதில் இருந்த ஆவணங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. கணினிகளின் நினைவகங்கள் சிலவும் காணவில்லை என அதிமுகவினர் தெரிவித்துள்ளனர்.மேலும் 2ம் தளத்தில் கணக்காளர் அறையில், ஜெயலலிதா கடந்த 1984ம் ஆண்டு முதல் பொதுக்கூட்டங்களுக்கு செல்லும்போது, தொண்டர்கள் சார்பில் வழங்கப்படும் செங்கோல், போர் வாள், வெள்ளி சிலைகள் போன்றவை பாதுகாக்கப்பட்டு வருவதாகவும், அந்த அறையையும் பன்னீர்செல்வம் தரப்பினர் சேதப்படுத்தி இருப்பதாகவும் கூறப்படுகிறது.

3ம் தளத்தில் உள்ள அறைகளின் கதவுகளும் உடைக்கப்பட்டு, ஆவணங்கள் சிதறிக் கிடந்தன.மேலும் பீரோக்கள், நாற்காலிகள், மேஜைகள் என பல்வேறு பொருட்கள் சேதப்படுத்தப்பட்டிருந்தன. அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பிடும் பணிகளை அலுவலக பணியாளர்கள் தொடங்கினர். இதுதொடர்பாக அவர்கள் கூறும்போது, "இங்கு பல அறைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. சில அறைகளின் விலைமதிப்புள்ள பொருட்கள், ஆவணங்கள் காணாமல் போயுள்ளன. அதுதொடர்பாக மதிப்பிடும் பணிகளைத் தொடங்கி இருக்கிறோம். ஒரு மாதத்துக்கு தொண்டர்கள் யாரும் அலுவலகத்துக்கு வரக் கூடாது என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எனவே சேதம் மற்றும் காணாமல் போன பொருட்கள் தொடர்பாக மதிப்பீடு செய்து, கட்சியின் இடைக்கால பொதுச்செயலாளர் பழனிசாமியிடம் அளிக்க இருக்கிறோம். அதன் பிறகு புனரமைக்கும் பணிகள் தொடங்கப்பட உள்ளன" என்றனர்.

# சென்னை, திருச்சியில் செயற்கை கருத்தரிப்பு மையங்கள்: தமிழக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

தமிழக அரசு சார்பில் திருச்சி மற்றும் சென்னையில் செயற்கை கருத்தரிப்பு மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு வருவோர் பயன்பெறும் வகையில் ரூ.1 கோடிமதிப்பிலான 4 லட்சம் முகக்கவசங்களை இலவசமாக வழங்கும் நிகழ்ச்சியை சென்னை டிஎம்எஸ் வளாகத்தில் வைத்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று தொடங்கி வைத்தார்.இதைத் தொடர்ந்து செயற்கை கருத்தரிப்பு தொழில்நுட்ப சட்டம் மற்றும் வாடகைத் தாய்சட்டம் தொடர்பாக இணை இயக்குநர்களுக்கான கருத்தரங்கத்தை தொடங்கி வைத்து ஆலோசனை வழங்கினார்.

பின்னர் அரசு மருத்துவர்களுக்கான பணிமூப்பு பட்டியலை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார்.இதையடுத்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:தமிழகத்தில் செயற்கை கருத்தரித்தல் மையங்களை கட்டுப்படுத்த மற்றும் அதன் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு, செயற்கை இனப்பெருக்க நுட்பங்கள் சட்டம், தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்துதல் சட்டம், கருத்தரிப்பு முன் மற்றும் பிறப்புக்கு பின் நோய்களைக் கண்டறியும் நுட்பங்கள் என்ற சட்டம்உள்ளிட்ட 3 சட்டங்களின் தேவைகள் மற்றும் அவற்றின் தாக்கம், சட்டம் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து சுகாதாரத் துறை இணை இயக்குநர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

ஸ்கேன் மையங்களுக்கு சீல்தமிழகத்தில் செயற்கை கருத்தரித்தல் முறைகேட்டில் ஈடுபட்ட 4 மருத்துவமனைகள் மீது கடந்தவாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், சேலம் மற்றும் ஈரோட்டில் உள்ளசுதா மருத்துவமனைகள், பெருந்துறையில் உள்ள ராம்பிரசாத் மருத்துவமனை, ஒசூரில் உள்ள விஜய் மருத்துவமனை ஆகிய 4 மருத்துவமனைகளில் செயல்பட்டு வந்த ஸ்கேன் மையங்களுக்கு கடந்த வாரம் சீல் வைக்கப்பட்டன.அதேபோல் ஈரோடு, சுதா மருத்துவமனை, பெருந்துறை ராம்பிரசாத் ஆகிய 2 மருத்துவமனைகளின் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

# வடக்கு கிழக்கு ஊழல்வாதிகளிற்கு எதிராக ஞாயிறன்று போராட்டம்

வடக்கு - கிழக்கு ஊழல் வாதிகளுக்கு எதிராக 17ஆம் திகதி மட்டக்களப்பில் மாபெரும் கண்டன அமைதிவழி ஆர்ப்பாட்டம் ஒன்று தமிழ் இளையோர் மக்கள் இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ராஜபக்ச குடும்ப ஊழல் வாதிகளுக்கு பின்னால் அடகு வைத்து பிழைப்பு நடத்தியவர்கள் வடக்கு - கிழக்கில் பலர் உள்ளனர். மக்கள் இயக்கம் என்ற அடிப்படையில் அவர்களை மிக வண்மையாக கண்டிக்கின்றோம்.

அது மாத்திரம் அன்றி இவ்வாறானவர்களை கண்டணத்திற்குள்ளாக்கும் வகையில் காலை 09.30 மணிக்கு மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் இடம்பெற்று மாபெரும் கண்டன அமைதிவழி ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் தமிழ் இளையோர் மக்கள் இயக்கம் ஒழுங்கு செய்துள்ளதாக அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

இதேநேரம் நாளைய ஆரப்பாட்டத்தில் பங்குகொள்வோர் ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஓர் ஒன்றுகூடலை மேற்கொண்டு இந்த ஊழல்வாதிகளை விரட்ட மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

இவ்வாறு இடம்பெறும் கலந்துரையாடலின் தீர்மானத்திற்கு அமைய எதிர்காலத்தில் மேற்கொள்ளும் போராட்ட வடிவங்கள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.




# ஜனாதிபதி தேர்தல்: கூட்டமைப்பினர் யாருக்கு ஆதரவு?



இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார் என்பது குறித்த பரபரப்பு அதிகரித்துள்ள நிலையில், இது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது கருத்தை வெளியிட்டுள்ளது. “புதிய ஜனாதிபதியாக யாரைத் தெரிவு செய்வது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 19ஆம் திகதியன்றே கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி இது தொடர்பில் முடிவு எடுக்கும்” என கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் மேலும் விபரம் தெரிவிக்கையில், புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடத்தப்படவுள்ளது. ஜனாதிபதிப் பதவிக்கு மும்முனைப் போட்டி நிலவக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, டலஸ் அழகப்பெரும ஆகிய மூவரும் போட்டியிடத் தயாராகியுள்ளனர். இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளது என சுமந்திரன் எம்.பியிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 19ஆம் திகதிதான் வேட்புமனுத் தாக்கல் இடம்பெறவுள்ளது. அன்றுதான் புதிய ஜனாதிபதித் தெரிவுக்காக யார் யார் போட்டியிடுகின்றார்கள் என்பதை சரியாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். எனவே 19ஆம் திகதி வேட்புமனுத் தாக்கலின் பின்னர் அன்றைய தினமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி எந்த வேட்பாளரை ஆதரிப்பது தொடர்பில் முடிவு எடுப்போம். அதுவரைக்கும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடனும் நாடாளுமன்றத்திலுள்ள பிரதான கட்சிகளுடனும் பேச்சுக்கள் தொடரும் என்றார்.



# ஈழத்துத் திருக்கோவில்கள் 1007



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## சோமாஸ்கந்த ஈஸ்வரம்
## (நயினை முத்துக்குமாரசுவாமிகள் கோவில்)
## நயினாதீவு, யாழ்ப்பாணம்

*"அன்பரும் ஓங்க தரணியொடு அருட் திறமும் தானோங்க*
*வன்பிறவி பிணிநீங்க முத்துசாமி நயந்து நின்றேன்*
*உன்புகழ்பாடும் இன்பத் திறந்தந்து நின்றாய்*
*அன்புருகும் மலர்த்துங்க சங்கரனின் அடைக்கலமே"*

சுவாமிகள் குறிப்பிட்டவாறு 1949 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை இரவு 12 மணிக்கு, ஜீவ முக்தராகிய சுவாமிகள் யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடியில், அவர் தங்கியிருந்த வீட்டில் விதேகமுத்தி அடைந்தார்கள். சுவாமி அவர்களின் ஆத்மஜோதி சிவஜோதியுடன் இரண்டறக் கலந்தது. ஒரு கண்ணாடிப்பெட்டியில் சுவாமிகளின் உடலை பூக்களாலும் மாலைகளாலும் அலங்கரித்து, நிஷ்டையில் இருந்தபடியே வைத்து, அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் ஊர்காவற்துறைக்கு எடுத்துச் சென்றார்கள். அங்கிருந்து நயினாதீவிற்குக் கொண்டு சென்றார்கள். சுவாமிகள் சமாதியடைந்த மூன்றாம் நாள், சகல முறைப்படி இணுவில் வடிவேற் சுவாமிகளின் வழிகாட்டலில், அடியவர்கள் முறைபடி சமாதியை நிறைவு செய்தார்கள்.

சித்தர்கள் தாம் சமாதியடையும் நாளை, தமது நெருங்கிய தொண்டர்களிடம் தெரிவிப்பது வழக்கம். அவ்வாறே சுவாமிகளும் தெரிவித்தநாளன்று முக்தி அடைந்தார்கள். சுவாமியினுடைய திருவுடலை அவரது கூற்றுப்படியே நயினாதீவிற்கு எடுத்துச் சென்று, காட்டுக் கந்தசாமி கோயிலின் பின்புறம், நாலு பக்கமும் வாசல் வைத்து சமாதி அமைத்தனர்.

சமாதி அனுபவத்தை எட்டிப்பிடிப்பது சித்தத்தை வென்றவர்களுக்கே இயலும். யோகப்பயிற்சி செய்து வரும்பொழுது பல சித்திகள் கிடைக்கும். ஆயினும் அவற்றில் நாட்டங் கொள்ளாது, சமாதி அனுபவத்தை எட்டிப்பிடிப்பதில் நாட்டம் கொண்டவர்கள் சித்தர்கள். "யோக சமாதியை உவந்தவர்கள் சித்தர்கள்" என, சித்தர்களின் இயல்புபற்றித் திருமூலர் கூறியுள்ளார். உயர்ந்த யோகநிலையில் வாழ்ந்த காரணத்தினாலேயே நயினாதீவுச் சுவாமிகள், தமது சமாதிபற்றிய விபரங்களை தனது தொண்டர்களுக்கு அறிவித்து, அதன்படியே யோகசமாதி அடைந்தார்.

சுவாமிகளின் சமாதியில், சிவலிங்கப்புளியடி வீட்டில் இருந்த, பார்வதி பரமேஸ்வரர் சிலையுடன், ஒரு முருகன் சிலையும் செய்து, சோமாஸ்கந்த முகூர்த்தமாக நிறுவி, அத்தோடு விக்கினந் தீர்க்கும் விநாயகர் சிலையும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதன்பின்னர் சுவாமியின் சமாதிக்கோவிலை, "சோமாஸ்கந்த ஈஸ்வரம்" என வழங்கினர். ஆலய முன்றலில் தல விருட்சமாக அரசும், வேம்பும் பின்னிப்பிணைந்து நிற்கின்றது. சமாதிக்கு முன்பாக தென்புறத்தில், இந்தியாவில் பனைக்குளம் ஆத்மசாந்தி நிலையத்தைச் சேர்ந்த, ஸ்ரீசத் சித்திரமுத்து அடிகளாரைக் கொண்டு 1959 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பத்தாந்திகதி அத்திவாரம் இடப்பட்டு மடமும் கட்டப்பட்டது. 1957 ஆம் ஆண்டு சுவாமிகளின் குருபூசை தினத்தன்று, அருள்ஒளி நிலையம் எனப் பெயர் சூட்டப்பட்டு ஸ்ரீசத் சித்திரமுத்து அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் சுவாமிகளின் சமாதினமாகிய தைத்திங்களன்று, விசேட அபிசேக பூசைகள் நடைபெற்று அன்னதானமும் வழங்கப்படும். சுவாமிகள், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்திற்குச் செல்லும் அடியவர்களுக்கு, அன்னதானம் செய்வதில் பெருவிருப்புடையவர். திருவிழாக்காலங்களில் தினமும் மகேஸ்வர பூசை செய்யவேண்டும் என, சுவாமிகள் எண்ணங்கொண்டு அதனை நிறைவேற்றியும் வந்துள்ளார். இதற்காக அடியவர்கள் செலுத்தும் பணத்தைப் பத்திரப்படுத்தி வைத்து, அதன்மூலம் அரிசி. பருப்புமூட்டைகள் மரகறிவகைகள் என்பவற்றை வாங்கி, அன்னதானத்திற்காகக் கொண்டுசெல்வாரென, அவருடன் பழகிய தொண்டர்கள் கூறியுள்ளாகள்.


நயினை நாகபூசணி அம்மன் வருடாந்த மகோற்சவதினத்தில், அம்பாள் கங்காதரணிதீர்த்தத்தில் தீர்த்தமாடும் அதே தினத்தில், நயினாதீவு சுவாமிகள் எனப்போற்றப்பட்ட முத்துக்குமாரசுவாமிகளின் சமாதியிலும், பெரிய மண்டகப்படி வைத்து அம்பாளை வழிபாடியற்றுவர். சுவாமிகளிடம் குழந்தைப் பேறில்லாதோர் ஆசிவேண்டி வருவார்கள். அவர்களுடைய வருங்காலத்தை ஞானத்தால் அறியும் சுவாமிகள், அவரவருக்கு ஏற்றமுறையில் பரிகாரம், ஆசி, மனஆறுதலுக்கான இனியவார்த்தைகளைக் கூறுவார். அவர்கள் எண்ணம் நிறைவேறியபின்னர் சுவாமிகளைத் தரிசித்து, தமது நன்றியைத் தெரிவிப்பர். இவ்வாறான பல அற்புதச் செயல்களை அடியவர்களின் வேண்டுதலுக்காக நயினாதீவுச் சுவாமிகள் செய்துள்ளார்கள்.

புலம்பெயர்நாடுகளிலிருந்து செல்லும் மக்கள், வாழுங்காலத்தில் மனிதகுலத்திற்குத் தம்மை அர்ப்பணித்த, சித்தர்களின் சமாதிக் கோயில்களைத் தரிசிப்பதோடு, அக்கோயில்கள் ஆண்டாண்டு காலமாக மக்களை வாழவைக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டு, இவ்வாறான சதாதிக்கோயில்களைத் தரிசித்து அருள்பெறுவதோடு, சமாதிக் கோயில்களின் திருப்பணிக்கு உதவுவதும் எம்மையும், எமது சந்ததியையும், இனத்தையும் வாழவைக்கும் என்பதில் உறுதி கொள்ள வேண்டும்.

*"தெளிவு குருவின் திருமேனி காண்டல்*
*தெளிவு குருவின் திருநாமம் செப்பல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குருவுரு சிந்தித்தல்தானே"*


*வளரும்...*






## 18 தோற்றங்கள் பல

புதிதாகப் பொருத்தப்பட்ட ICD எனும் குட்டி இயந்திரத்தையும், புதிதாக அறியப்பட்ட தாளம் தப்பிய அதி வேகத்துடிப்பு நோய் - Arrhythmia எனும் புதிய கவலையையும் நெஞ்சில் சுமந்து கொண்டு மருத்துவ நிலையத்திலிருந்து வீடு வந்து சேர்ந்தேன்.





ஒரு மாதம் அளவில் வேலைக்கு போகாமல் வீட்டில் ஓய்வு எடுத்துக் கொண்டேன். இதயமே, உன் புதிய பிரச்சினை என் துணைவியாருக்கும் பிள்ளைகளுக்கும் புதிய கவலையை கொடுத்தது. ஆனாலும் ICD யை பொருத்தியதால் இனிமேல் அது போன்ற பிரச்சினைகள் வந்தால் நெஞ்சுள் வைக்கப்பட்ட ICD என்னை காப்பாற்றி விடும் என்பதை மகள் உறுதியாக சொல்லி ஆறுதல்படுத்தினா.

வைத்தியத் துறையில் அவ படித்துக் கொண்டிருந்ததால் அதன் பெறு மதியை ஆமோதிக்க வேண்டியே இருந்தது. அறுவை சிகிச்சைக்காக வெட்டப்பட்ட புண் சீழ் பிடிக்காமல் மாறுவதில் மருத்துவர்களின் ஆலோசனைப்படி நானும் மிகக் கவனமாகவே இருந்தேன். பொது வாக எந்த அறுவைச் சிகிச்சை ஆனாலும் வெட்டிய புண்ணில் தொற்று ஏற்படாமல் கவனிக்க வேண்டியது அவசியம். அவ்வாறு தொற்று ஏற்பட்டால் பக்ரீறியா எதிர்ப்பு மருந்துகளை (Antibiotics) கொடுத்து சுகப்படுத்துவார்கள்.

ஆனால் இந்த அறுவைச் சிகிச்சையை பொறுத்தவரை இதில் தொற்று ஏற்பட்டால் உள்ளே இணைக்கப்பட்ட வயர்களை எடுக்க வேண்டி வரும் என்றும் எச்சரித்து இருந்தார்கள். அந்த வில்லங்கத்தை விலைக்கு வாங்கக் கூடாது என்பதில் நானும் அதிகம் கவனமாக இருந்தேன்.

ICD பற்றி மேலும் தகவல்களை விரிவாக அறிந்து கொண்டேன். மூன்று விதமான ICD க்கள் இருக்கின்றன. ஆங்கில சொற்களையும் கலந்தே இவற்றின் பெயர்களை குறிப்பிட வேண்டி உள்ளது.



1. Single Chamber ICD

ஒரு வயர் மட்டும் வலது இதயக் கீழறையில் (Right Ventricular) பொருத்தப்படுகிறது.

2. A Dual Chamber ICD

இந்த வகையில் இரண்டு வயர்கள் பொருத்தப்படும். ஒன்று வலது இதய மேலறையிலும் (Right Artrium) மற்றது வலது இதயக் கீழறையிலும் (Right Ventricular) பொருத்தப்படும்.

3. A Biventricular ICD

மூன்று வயர்கள் பொருத்தப்படும். வலது இதயமேலறை (Right Artrium), வலது இதயக் கீழறை (Right Ventricular), இடது இதயக் கீழறை (Left Ventricular) மூன்றிலும் இந்த வயர்கள் இணைக்கப்படும்.




எது தேவைப்படும் என்பதை நோயாளியின் நிலையைப் பொறுத்து மருத்துவ நிபுணர்கள் தீர்மானிப்பர். இவற்றில் எனக்குப் பொருத்தப்பட்டது இரண்டாவது வகை ஆகும். இதயத் துடிப்பை சரி செய்யும் இந்த குட்டி இயந்திரம் நான்கு விதமாக இந்த வேலையை செய்கிறது.

1. Anti-Tachycardia Pacing

தொடர்ச்சியான மின்னதிர்வுகளை (Rapid Pacing Impulses) வழங்குவதன் மூலம் வேகமான இதயத் துடிப்பை சரி செய்தல்.

2. Cardioversion

இப்படி வழங்கப்பட்ட மின்னதிர்வுகள் வேகமான இதயத் துடிப்பை சரி செய்யாத நிலையில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சக்தி குறைந்த மின்னதிர்ச்சிகளை (Lower Energy Shock) வழங்கி இதயத்துடிப்பை சரி செய்தல்.


3. Defibrillation

இதயத்தின் மோசமான - அதிகூடிய இதயத் துடிப்பை கண்டுபிடித்து அதி கூடிய வலுவான மின்னதிர்ச்சியை (A High Energy Shock) வழங்கி இதயத் துடிப்பை சீராக்குதல்.

4. Bradicardia Pacing

சிறிய மின்னதிர்வுகளை (Tiny Pacing Impulses) அனுப்புவதன் மூலம் சீரற்ற மிகவும் தாமதமான தளர் இதயத் துடிப்பை (Slow Heart Beat) சரி செய்தல்.

ICD யின் நினைவுப் பகுதியில் தகவல்கள் சேகரித்து வைக்கப்படுகின்றன. கட்டுக்கடங்காத வேகங்களும் அதேபோல தாமதங்களும் அவற்றை சரி செய்வதற்கு சிகிச்சை அளித்த எண்ணிக்கைகளும், பயன்பட்ட எண்ணிக்கைகளும் அந்தந்த நேரங்களின் இதயமே நீ எவ்வளவு பிரச்சினைகளுக்கு உள்ளானாய் என்ற விபரங்களும் இந்த நினைவுப் பகுதியிலிருந்து மருத்துவர்களாலும் இதற்கென உள்ள மருத்துவ தொழில்நுட்பவியலாளர்களாலும் மீளப் பெறப்படுகின்றன.




இதன்மூலம் கருவியின் செயற்பாடும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும். எந்த எண்ணிக்கையில் துடிப்பு அதிகரிக்கும்போது மின்னதிர்வுகளை கொடுக்க வேண்டும் என்பது பற்றிய கீழெல்லைகளும் மேலெல்லைகளும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட இலக்கங்களுடன் ஒப்பிடப்பட்டு தேவையென்றால் சில மாற்றங்களும் செய்யப்படும். இதற்கான பரிசோதனைகள் தொடக்கத்தில் மாதம் ஒரு முறையும், பின்னர் தேவை கருதி மூன்று மாதங்கள் ஆறு மாதங்கள் எனும் இடைவெளிகளிலும் செய்யப்படும்.

ICD ஒன்று பொருத்தப்பட்டவர் எவ்வளவு தூரம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பது பற்றிய அறிவுறுத்தல்களையும் மருத்துவர்கள் வழங்கி இருந்தார்கள். மின்காந்த அலைகள் (Magnetic Waves) கூடுதலாக உள்ள இடங்களிலிருந்து விலகி இருப்பது அவசியம். விமானப் பயணங்களின் போது செய்யப்படும் பரிசோதனைக் கருவிகளை (Scanning Mechines) தவிர்ப்பது அவசியம்.



பரிசோதகர்களிடம் ICD, Pacemaker பொருத்தப்பட்டிருப்பது பற்றி தெரியப்படுத்தும் போது அவர்கள் அந்தக் கருவிகளின் ஊடு செல்ல விடாது வேறாக வைத்து பரிசோதிப்பார்கள். மருத்துவப் பரிசோதனைகளில் MRI (Magnetic Resonance Imaging) தவிர்க்கப்பட வேண்டும். செல்போன்களை (Cell Phone) ஆறு அங்குல தூரத்தில் வைத்திருப்பது நல்லது என்று சொல்லப்படுகிறது.

இங்குதான் எனக்கு அதிகம் பிரச்சினை. வலது கையில் போனை எடுத்து வைத்து பேச வேண்டும் என்று நினைத்தாலும் நடைமுறையில் இதனை மறந்து போவதே அதிகம். மறதிக்கும் ஒரு கருவி விரைவில் கண்டு பிடித்து விடுவார்கள். பலத்த சத்தம் உள்ள மோட்டார் இயந்திரங்களை தவிர்ப்பதும், சத்தம் மிகுந்த ஒலிபெருக்கிகளை (Sound Speakers /Boxes) தவிர்ப்பதும் நல்லது என்று பரிந்துரைக்கப்படுகிறது.

ICD களில் எச்சரிக்கை மணியும் (Alarm) பொருத்தப்பட்டுள்ளது. இதன் தேவை பின்வரும் காரணங்களைக் கொண்டு இருக்கும்.

1. ICDயின் சக்தியின் (Battary) ஆயுட்காலம் நெருங்கும்போது
2. ICD இணைப்பு வயறில் தொற்று, உடைவு, முறிவு போன்ற குறைபாடுகள் இருக்கும்போது.
3. ஓர் அபாயகரமான நிலை தோன்றும்போது. (Risk & Malfunction)

தொற்றுக்கள் ஏற்பட்டால் ICDஐயும் அதன் இணைப்பு வயர் களையும் அகற்ற வேண்டும். இதயத்துக்குள் தொற்று ஏற்பட்டால் அது பாரதூரமான விளைவுகளை உண்டாக்கி ஒரு மரணத்துக்கும் இட்டுச் செல்லலாம்.

ஆகவே இப்படியான சந்தர்ப்பங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். ICD கருவியை நெஞ்சில் இருந்து அகற்றுவது அவ்வளவு கடினமானதல்ல. ஆனால் அதனுடன் இணைந்த வயர்களை இதயத்துள் இருந்து இழுத்தெடுப்பது இலகுவல்ல. பொதுவாக ICD கருவி 7 முதல் 10 வருடங்கள் வரை பிரச்சினைகள் இல்லாது இயங்கக்கூடியது. வயர் இதயத்துக்குள் செலுத்தப்படுவதால் காலம் செல்லச்செல்ல இதயத் தசைகளுடனும் இளையங்களுடனும் அவை இறுக்கமாகப் பிணைந்து இருக்கும்.

அதனால் இலகுவில் இந்த வயர்களை இழுத்தெடுக்க இயலாது. இவற்றை அகற்றும்போது இரத்தக் குழாய்கள் சேதமுற்று அதிக இரத்தப் போக்கு உண்டாகவும் அதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படவும் வாய்ப்புக்கள் உண்டு. இதனால் இவ்வாறு வயர்களை அகற்றுவதில் மிகக் கூடிய கவனமும் மருத்துவர்களின் நிபுணத்துவமும் தேவை. இப்போது லேசர் (Laser) தொழில்நுட்பம் மூலம் வயர்களை சுற்றவுள்ள இளையங்களிலிருந்தும் விடுவித்து பாதுகாப்பாக வயர்களை எடுக்கும் அளவுக்கு தொழில் நுட்பங்கள் வளர்ந்து வருவது நம்பிக்கை அளிப்பதாகும். நான் ஒரு பாடசாலையில் கல்வி உதவியாளர் (Educational Assistant) ஆக பணியாற்றிக் கொண்டிருந்தேன். சுகயீனமாக வீட்டில் ஓய்வாக இருந்த எனது சுகத்துக்கு வேண்டி பாடசாலையின் அதிபர் உட்பட ஆசிரியர்கள், அலுவலகர்கள், எல்லோரும் கையொப்பமிட்டு வாழ்த்து மடல்களை அனுப்பி இருந்தார்கள்.

நான் கற்பிக்கும் பாலர் வகுப்பு. முதலாம் தர மாணவர்களும் தமது கைப்படவே படங்களை வரைந்து எனது நலத்திற்கு வாழ்த்திய வரிக-ளுடன் தனித்தனியாகவும் வாழ்த்து மடல்களை அனுப்பியிருந்தார்கள். இவை யாவும் இதயமே நோயுற்ற உனக்கு மெல்லிய ஒத்தடம் கொடுப்பது போல ஆறுதலைத் தந்தன. இது போன்று குழந்தைகள் அவர்களுக்கு தோன்றியதை வரையவும் எழுத வும் வைக்கும் கற்பித்தல் முறைமையும் அதனூடே வளர்க்கப்படும் பண்பாடும் நாம் பாராட்ட வேண்டிய அம்சமாகும். அந்தக் குழந்தைகள் என் நலம் வேண்டி அனுப்பிய மடல்களை இன்றும் நான் பாதுகாப்பாக வைத்திருக்கிறேன்.


வேலைக்கு திரும்பிய போதும் எல்லோரும் மிகவும் பரிவோடு சுகம் விசாரித்தார்கள். ஒரு கல்விச் சமூகத்தில் தொடர்ந்தும் பணியாற்றுவது எனக்கு திருப்தியாகவும் பெருமையாகவும் இருந்தது. மாணவ உலகம் - இளையோர் உலகம் எப்போதும் உற்சாகம் தருவதுதானே.

புலிப்பந்தின் சுழற்சியிலே காலங்கள் இலையுதிர் - குளிர் - வசந்தம் - கோடை என்று விரைந்து வந்தன. நான் சதா நோயைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கும் பேர்வழி அல்ல. மேலதிக வேலையாக காப்புறுதி முகவராக இயங்குதல், பாடுதல், எழுதுதல், நடித்தல், திரைப்படம் எடுத்தல், இயக்குதல், இசையமைத்தல், துணைவியாரின் நடன வகுப்புக்களுக்கு உதவுதல் என்ற விதமாக இயங்கிக் கொண்டிருந்ததில் தன் பாட்டுக்கு நேரங்கள் கரைந்து கொண்டிருந்தன.

ஒலிப்பதிவுக் கூடத்தில் எனது எழுத்திலும் இசையிலும் நாட்டிய நாடகத்துக்காக பாடல்களை ஒலிப்பதிவு செய்து கொண்டிருந்த ஒரு பொழுது... ஒரு பாட்டு... ம்... பாட்டும் நானே...

இதயமே, என் பாட்டு உனக்கு விருப்பம் இல்லையா...?
அப்படி ஒரு சம்பவம் அடுத்து நிகழ்ந்தது...
அந்தக் கதையையும் சொல்லத்தானே வேண்டும்.


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Residential
* Commercial
* Building Permits
Contact: Siva
416-706-8160


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
ALL DEBT SOLUTIONS
C R PLAN
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?
நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.
நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.
தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077
ஓட்டாண்டியாகப் போக வேண்டியதில்லை
மகிழுந்தகளை வைத்திருங்கள்
வீட்டை வைத்திருங்கள்
ஆர்ஆர்எஸ்பியை வைத்திருங்கள்
கூலி முடக்கம் இல்லை
கடன் அறவிடும் அழைப்புக்கள் இல்லை
மாதம் ஒரு சிறு கொடுப்பனவு
0%வட்டி
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills
வசந்தி சிவராஜா
எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577
4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு
MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga
SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7
HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto
RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill
NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# ஜீவன் முக்தி 588

## உங்கள் வாழ்க்கையே மரப்பாச்சி பொம்மை விளையாட்டுதான்

உகங்களுடைய உறவுகள் எல்லாமே ஒவ்வொரு பாத்திரங்கள்தான். ஒரு நடிப்புதான். நன்கு புரிந்துகொள்ளுங்கள் மொத்தமுமே Psycho drama அதில்தான் பிறப்பெடுக்கிறீர்கள்.

யாரோ ஒருவர் அப்பா யாரோ ஒருவர் அம்மா யாரோ ஒருவர் அக்கா யாரோ ஒருவர் தம்பி யாரோ ஒருவர் தங்கச்சி என்று வைத்து விளையாடுகிறோம்.

சின்ன வயதில் குழந்தைகள் மரப்பாச்சி பொம்மை வைத்து விளையாடுவதைப் பார்த்திருக்கிறீர்களா?

ஒரு நான்கு மரப்பாச்சி பொம்மை வைத்து விளையாடுவார்கள். அந்த விளையாட்டு இந்தக் காலத்திலெல்லாம் இல்லாமல் போய் விட்டது. இந்தக் காலத்தில் எல்லாம் வீடியோ கேம்தான் குழந்தைகள் விளையாடும் விளையாட்டில் உறவு என்ற பெயரில் ஒரு நான்கு மரப்பாச்சி பொம்மையை வைத்தும் விளையாடிக் கொண்டிருப்பார்கள். ஒன்றிற்கு வெள்ளைத் துணியை சுற்றி "இது அப்பா" என்று வைத்து விடுவார்கள்.

இன்னொன்றிற்குக் கலர் துணியைச் சுற்றி "இது அம்மா" என்று வைத்துவிடுவார்கள். இன்னொரு பொம்மைக்குப் பேண்ட் மாதிரி போட்டுவிட்டு. "இது அண்ணன்" என்று வைத்துவிடுவார்கள். இன்னொரு பொம்மைக்குச் சட்டை போட்டு விட்டு "இது தங்கச்சி" என்று வைத்து விடுவார்கள்.

இப்படிக் குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்தால் மிக சந்தோஷமாக இருக்கும். மிக ஆழ்ந்து பார்த்தீர்கள் என்றால் அப்பா பொம்மையை எடுத்துக்கொண்டு "அப்பா வேலைக்குப் போகிறார்..." என்று கார் சத்தம் மாதிரியே சத்தம் போட்டுக்கொண்டு அப்பாவை வேலைக்கு எடுத்துகொண்டு போய் உட்கார வைப்பார்கள்.

"அம்மா சமைக்கிறார்கள்..." என்று சமையல் செய்கிற மாதிரி சத்தம் எல்லாமே கொடுப்பார்கள்.

"அண்ணன் பள்ளிக்குப் போறார்..." என்று சைக்கிள் மிதித்துக்கொண்டே அந்த அண்ணன் பொம்மையைப் பள்ளிக்கு எடுத்துக்கொண்டு போய் உட்கார வைப்பார்கள். அதன்பிறகு "பாடம் படிக்கிறார்" போன்று சத்தம் எல்லாம் கொடுப்பார்கள்.

"A for Apple, B for Brinjal," என்று சொல்லித் தருவார்கள்.

"தங்கச்சி பள்ளிக்குப் போகமாட்டேன் என்று சொல்லி அழுகிறாள்" என்று சொல்லி என்ன செய்வார்கள். "ஆ!..." என்று தங்கை மாதிரி அழ ஆரம்பித்து விடுவார்கள்.

அதாவது எல்லா உறவுகளின் மாதிரியையும் இந்த மரப்பாச்சி பொம்மையை வைத்தே விளையாடிப் பார்ப்பார்கள். ஏதாவது ஒரு பொம்மை இந்தக் குழந்தை இழுத்த இழுப்பிற்கு வரவில்லை என்றால் "இது கெட்ட பொம்மை" என்று தூக்கிப் போட்டு விடுவார்கள். "இது ஆய் பொம்மை ஒழுங்காக விளையாட்டுக்கு வரமாட்டேன் என்கிறது" என்று ஒதுக்கி வைத்துவிடுவார்கள்.

ஆழ்ந்து பாருங்கள் இந்த மொத்த வாழ்க்கையும் பாருங்கள் நம்முடைய வாழ்க்கையும் இவ்வளவுதான். வேறு ஒன்றுமே கிடையாது.

யார் யார் எப்படி எப்படி எந்தெந்த மாதிரியில் விளையாட வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களோ அதன்படி விளையாடினீர்கள் என்றால் அவர்கள் எல்லாம் உறவுகள்.

அந்தப் பாத்திரம் போன்று அவர்கள் ஒழுங்காக விளையாடவில்லை என்றால் அந்த உறவையே "இது ஆய் பொம்மை கெட்ட பொம்மை" என்று தூக்கிப் போட்டுவிடுவோம்.

உங்களின் மொத்த வாழ்க்கையுமே இவ்வளவுதான் வேறு ஒன்றும் கிடையாது.

இப்படித்தான் எல்லாரும் விளையாடிக்கொண்டே இருப்போம். ஒரு குறிப்பிட்ட இடத்தை நம்முடையது என்று வேலி போடுகிறோம். அந்த வேலியை அகலமாக்குவதற்கு முயற்சி செய்துகொண்டே இருப்போம்.

இப்போது ஐம்பது ஏக்கர் நிலம் வைத்திருந்து அதைச் சுற்றி வேலி போட்டிருந்தால் என்ன யோசிப்போம் "அடடா! இன்றும் ஒரு மூன்று அடி வேலியைத் தள்ளிப் போட்டிருக்கலாமே" என்று யோசிப்போம்.

ஐம்பது ஏக்கர் என்பதால்தான் அப்படி யோசிக்கிறோம் என்று நினைக்காதீர்கள். ஒரு ஆயிரம் ஏக்கர் இருந்தாலும் என்ன செய்வீர்கள்? "ஒரு அடி வேலியைத்தள்ளி போட்டால்தான் என்ன" என்று யோசிப்பீர்கள்.

அந்த எல்லைக்குள்ளிருந்து வேலியை அகலமாக்குவது நம்முடைய ஜீவாதார சக்தியோடு தொடர்புடையது.

வாழ்க்கையும் இவ்வளவுதான். வேலிகளை அகலமாக்குவது போன்று உறவுகளை ஆழமாக்குவது.

ஆழமாக்குவது என்றால் என்ன?

உங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக் கொண்டுவருவது. மேலும் மேலும் பல்வேறு உறவுகளை உங்கள் கட்டுப்பாட்டிற்குள் எடுத்து வருவது அசைகிறபொருட்களை உங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் என்று சொல்கிறோம்.

அசையாத பொருட்களை உங்களின் கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக்கொண்டு வருவதை "Possesion" என்று சொல்கிறோம்.

இரண்டு வார்த்தையையும் புரிந்துகொள்ளுங்கள். அசையாத பொருட்களை உங்களின் கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக்கொண்டு வருவதைச் சேர்த்து வைத்தல் என்கிறோம். அதுதான் வேலியை அகலமாக்க முயற்சி செய்வது.

அதுவே அசைகிற பொருட்களை உங்கள் கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக்கொண்டு வருவதை "உறவுகள்" என்கிறோம். அவ்வளவுதான்.

அசையும் சொத்து அசையாத சொத்தான உங்களின் வாழ்க்கையை உங்களின்கட்டுப் பாட்டில் எடுத்துக்கொண்டு வருவதுதான் மொத்த விளையாட்டும். அந்த விளையாட்டையே விளையாடிக் கொண்டிருப்போம். திடீரென்று பார்த்தால் உங்களையே ஒருநாள் அசைத்து தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள்.

மரணம் இன்னொரு இடத்தில் உங்களைப் பிறக்க வைத்துவிடும் உடனே என்ன செய்வீர்கள்? இன்னொருவரை "அப்பா" என்றும் "அம்மா" என்றும் பிடித்துக்கொண்டு விளையாடத் துவங்குவீர்கள். "அண்ணன்" என்று பிடித்துக்கொண்டும் "தம்பி" என்றுபிடித்துக்கொண்டும் அதே விளையாட்டை ஆரம்பிப்பீர்கள்.

இதுதான் என்னுடைய சொத்து. இதுதான் என்னுடையது என்ற அதே விளையாட்டை ஆரம்பிப்போம் திரும்பவும் திரும்பவும் அதே விளை யாட்டை சிறிது நாள் விளையாடுவோம். மரணம் வரும். மீண்டும் மீண்டும் அதே விளையாட்டைவிளையாடுவது...

இந்த விளையாட்டில் ஒருநாள்... நம்மையே அசையாச் சொத்தாக வைத்துக்கொண்டு இருக்கிற யாரோ ஒருவர் என்ன செய்கிறார்?

நம்மையே அசைத்து எடுத்துக்கொண்டு போய் விடுகிறார். அதன்பிறகு உடனே திரும்பவும் இதே விளையாட்டை மீண்டும் மீண்டும் இதே விளையாட்டை நடத்திக்கொண்டே இருப்போம்.

நம் மொத்த வாழ்க்கையுமே இந்த விளையாட்டுதான். இந்த மரப்பாச்சி பொம்மை விளையாட்டுதான். வேறு ஒன்றும் கிடையாது.

அந்த விளையாட்டில் சிக்காத உறவு குரு-சிஷ்ம உறவு இது உறவுகளிலேயே மிக உயர்ந்த உறவு மிக உச்: நிலையான உறவு இதற்கு மேல் உங்களுடைய Psycho drama. நடக்காது நீங்கள் நடத்திக்கொண்டு இருக்கிற நாடகங்களை முடிக்கிற கடைசி காட்சிதான் குரு-சிஷ்ய உறவு.

நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள் பல்வேறு விதமான நாடகக்காட்சிகளை நடத்தி நடத்தி நடத்திச் சலிப்படைந்து ஒருநாள் சோர்வாகி "என்னடா இதே மாதிரி இந்த நாடகங்களையே திரும்பத் திரும்ப நடத்திக்கொண்டே இருக்கிறோமே" என்று சோர்வாகி விடும்.

அப்போது உங்களின் வாழ்க்கையில் வருகிற குரு-சிஷ்ய உறவில் இதற்கு மேல் நாடகம் தொடர்ந்து நடக்க முடியாது என்று முடிவுக்கு வருவீர்கள். எப்போது நாடகம் போதுமென்று நினைக்கிறீர்களோ அப்போதுதான் நீங்கள் அந்தக் குரு-சிஷ்ய உறவிற்குத் தயாராகிறீர்கள்.

### அதிர்ஷ்டசாலியின் ரகசியம்

- **காதலர்கள்?**
  அதிர்ஷ்டசாலிகள் என்று நம்பிக்கொண்டிருக்கும் துர்-அதிர்ஷ்டசாலிகள்.
- **இன்றைய தம்பதியர்?**
  துர்-அதிர்ஷ்டசாலிகள் என நம்பிக்கொண்டிருக்கும் அதிர்ஷ்டசாலிகள்.
- **யார் நிஜமான அதிர்ஷ்டசாலிகள்?**
  எங்கிருந்தாலும், ஏங்காமல் இனிமையாய் இருக்க தெரிந்தவர்களே அந்த அதிர்ஷ்டசாலிகள்.

## அன்பைக் கண்டால் பயமா? ஆனந்த அலைக்கு அணை கட்டாதீர்

உணர்வின் ஆழமான அனுபவங்களைத் தருவதற்கு வரும் ஒரு வாய்ப்பைக்கூட நழுவ விடாதீர்கள்.

உணர்வின் ஆழமான அனுபவங்கள் உள்ளே மலர்வதற்கான ஒரு வாய்ப்பைக்கூட நழுவ விடாமல் வாழ்க்கையை வாழ்ந்தீர்கள் என்றால் வாழ்க்கையைவாழ்ந்து முடிக்கும்போது மிகப்பெரிய திருப்தியோடு மரணத்திற்குள் நுழைவீர்கள்.

நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். ஏன் நாம் அந்த உணர்வின் மிகப் பெரிய தாக்கங்கள் நமக்குள் நடக்க அனுமதிக்காமல் இருக்கிறோம் என்றால் பயத்தினால்தான்! காரணம். நாம் நம்முடைய பொருட்களை நம்மிடம் இருந்து விட்டு விடுவோமென்று பயப்படுகிறோம். ஒன்று நாம் யாரை ஆழ்ந்து நேசிக்கிறோமோ அவருக்குக் கொடுத்து விடுவோமோ? இல்லை அந்த நேசத்தினாலே. இதெல்லாம் பராமரிக்கப்படாவிட்டால் தானாகவே காணாமல் போய்விடுவோமோ என்று பயப்படுகிறோம்! அந்த மிகப்பெரிய ஆன்மப் புரட்சி ஆன்ம எழுச்சி அன்பின் எழுச்சி நமக்குள்ளே நடக்கும்போது அதைக்கண்டு பயந்து நடுநடுங்கி ஒடுங்கிக்கொள்கிறோம்.

## அன்பின் உச்சம் கண்டு பயப்படக்கூடாது

நம் NSP-யில் ஒரு அன்பர் கலந்து கொண்டார். கலந்து கொண்ட பிறகு ஸ்ரமத்திற்கே வருவதில்லை. நம் செக்ரட்டரி ஒரு நாள் ஃபோன் செய்து கேட்டிருக்கிறார் "ஏன் சார் வரவில்லை? உங்களுக்கு பிடிக்கவில்லையா? நன்றாக இல்லையா?" என்று. அவர் சொன்னார் "இல்லைமிகவும் பிடித்திருக்கு... அதனால்தான் வரமாட்டேன் என்கிறேன்!"

செக்ரட்டரி ஐயா கேட்டிருக்கிறார். "அதற்காகப் போய் ஏன் வராமல் இருக்கிறீர்கள்?" என்று. இதற்குமேல் வந்தேன் என்றால் அங்கேயே இருந்து விடுவேன். என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியாதென்று எனக்குத் தெரிகிறது.

அன்பைக் கண்டு பயம். அன்புணர்வின் உச்சத்திலே நாம் செய்கிற செயலைத் தாங்கிக்கொள்கிற அளவிற்கு முதிர்ச்சி இல்லை.

இப்போது அதைத்தான் செய்ய வேண்டும். இந்த அளவிற்கு அன்பின் உச்சத்தை எங்கு அனுபவிக்கப் போகிறோம்?

அன்பின் உச்சத்தை எதிர்ப்பது. அன்பின் ஆழமான அனுபூதியை மறுப்பது. அதைத்தான் குரு துரோகம் என்று சொல்கிறோம்.

நன்கு தெரிந்துகொள்ளுங்கள் வாழ்க்கையில் பல நேரங்களில் குருவாக மட்டும் இல்லை. பல இடங்களில் குரு உங்கள் வாழ்க்கையிலே அன்பின் உச்சத்தை மலர வைக்கிறார்.

ஆனால் அந்த அன்பின் உச்சத்திலே என்ன செய்வோமென்று நமக்கே தெரியாமல் அந்த அளவிற்கு முதிர்ச்சி இல்லாதனால் அன்பின் உச்சம் என்ற மிகப்பெரிய அலை அந்த ஆனந்த அலை ஆனந்தத் தென்றல் வாழ்க்கையில் வீசுவதைத் தடுத்து அணை போட்டு வைப்பதுதான். வாழ்க்கைக்கு நாம் செய்கிற துரோகம்.

அப்போது இரண்டுமுறை வாழ்க்கையில் நம் கதவைத் தட்டிப்பார்த்துவிட்டு திறக்கவில்லை என்றால் அடுத்த கதவைத் தட்டப் போய்விடும்.

அதன் பிறகு பார்த்தீர்கள் என்றால் என்றாவது ஒரு நாள் நீங்கள் கதவு என்று பூட்டு போட்டுப் பூட்டி வைத்திருந்த வீடே காணாமல்போகும். அப்பொழுது உள்ளேயும் ஒன்றும் இருக்காது. வெளியேயும் ஒன்றும் இருக்காது.

வாழ்க்கை என்பதின் மிகத் தெளிவான எளிமையான விளக்கம் இது. வைத்திருக்கிற பொருளை விற்று ஆழமான உணர்வை அனுபவங்களைச் சேர்த்துக்கொள்கிற சந்தைதான். வாழ்க்கை! பொருட்கள் செல்வதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்.

எங்கெங்கெல்லாம் உங்களுடைய உணர்வு உங்களை அறியாமல் மலர்கிறதோ அங்கெல்லாம் பயமில்லாமல் அந்த அனுபவம் உங்கள் மீது ஏற்படுத்தும் தாக்கத்தைவாங்கிக்கொள்ளும் ஸ்திரத்தோடு உங்களைத் திறந்து வைத்து அதிலேயே கரையுங்கள்.

## உணர்வை மலர்த்துவது குரு சக்தியே

குரு சிஷ்ய உறவு மலரும்போதெல்லாம் உங்களுடைய இருப்புத் தன்மை விரிவடையவில்லையா முதிர்ச்சியடையவில்லையா அப்பொழுதெல்லாம் நீங்கள் ஒரு மேம்போக்கான உறவில் சிக்கி இருக்கிறீர்கள்.

உங்கள் இருப்புத்தன்மையை முதிர்ச்சிக்குள் போக விடாமல் தடுக்கும் உறவு மீண்டும் மீண்டும் ஒதுக்கப்பட வேண்டும் குரு-சிஷ்ய உறவே மீண்டும் மீண்டும் மலர்த்தப்பட வேண்டும்.

உங்களுக்குள் மலர்ச்சியை உருவாக்கிட வேண்டும் என்றால் அது குரு சிஷ்ய உறவில்தான் நடக்கும். உங்களுக்கு வேண்டுமானால் குரு தேவைப்படாமல் இருக்கலாம். எதை இழக்கிறீர்கள் என்பது புரியாமல் இருக்கலாம்.

ஆனால் குருவால் "தன் உணர்வை" மற்றவர்களுக்குள்ளும் நிகழ்த்தாமல் இருக்க முடியாது.

ஏனென்றால் அவர்களுக்குத் தெரியும் "தன் இருப்பை" உணர்ந்தவர்களால்தான் அதை மற்றவர்களுக்கும் மலர்த்த முடியும் வேறு நபரால் அதைக் கொடுக்க முடியாது என்பதையும் தெரிந்தவர்கள் குருமார்கள். இப்போது அனைத்து உறவுகளுமே ஆழமற்றவையாக ஆகிவிட்டது. ஆழ மற்றவை என்றால் மிக மேம்போக்காகி விட்டது. இப்போது கணவன் மனைவி உறவுகூட ஏறத்தாழ ஒரு boy friend, girl friend உறவுதான்.

ஏனென்றால் எப்போது வேண்டுமானாலும் விவாகரத்து வாங்கிக் கொள்ளலாம்.

நம்முடைய வேத பாரம்பரியத்தில் அந்த விவாகரத்து கிடையாது.

சமஸ்கிருதத்தில் "விவாகரத்து" என்ற வார்த்தையே இல்லை. ஏனென்றால் இருவரும் ஒன்றாக இருந்தாக வேண்டுமென்பதுதான் திருமணத்தில் எடுத்துக் கொள்ளப்படும் விரதம்.

(தொடர்ச்சி 27 பக்கம்)

(26 பக்கத் தொடர்ச்சி...)

விரும்பும்வரை ஒன்றாக இருக்க வேண்டும் என்கிற விரதமில்லை. மரணம்வரை ஒன்றாக இருந்தாக வேண்டும். அடிவயிற்றில் இருக்கிற அக்னி எரியும்வரை ஒன்றாக இருந்தாக வேண்டும். அதுதான் விரதம். இப்போது என்ன செய்கிறோம்? சாப்பிட்ட சாப்பாடு ஜீரணமாகும்வரை ஒன்றாக இருக்கிறோம். மிகப்பெரிய வாழ்க்கை முறை.

எப்படியோ குரு-சிஷ்ய உறவு மட்டும்தான் எப்போதும் முதிர்ச்சியை மலர வைக்கும். உங்களையே அறியாது உங்களுக்குள் இருக்கும் பல பரிமாணங்களை மலர வைக்கிற சக்தி குரு-சிஷ்ய உறவிற்குத்தான் உண்டு.

ஒவ்வொரு முறையும் எவ்வளவு முறை எவ்வளவு ஆழமாக வாய்ப்பு கிடைத்தாலும் தவறாமல் அந்த உறவிலே கரையுங்கள்.

## மகோன்னத தீக்ஷை

ஒவ்வொரு முறையும் அந்த வாய்ப்பை நழுவ விடாதீர்கள். மீண்டும் மீண்டும் மீண்டும் உங்கள் உணர்வு முழுவதினாலும் ஒத்துழைத்து பயம் இல்லாமல் ஆழ்ந்து அன்பின் ரசத்தில் கரையுங்கள். இரண்டு விஷயம் உண்டு. கரைவதற்கு இப்போது உணர்வு ரீதியாக தைரியம்: இரண்டாவது கரையும்போது நாம் ஏதாவது செயல்களைச் செய்தால் அதற்காக வருத்தப்படாமல் வருந்தாமல் குற்ற உணர்ச்சிக்குப் போகாமல் இருக்கிற முதிர்ச்சிஸ் திரத்தன்மை.

குரு ஒரு பக்கம் எரிகிற காட்டுத் தீ. அவர் ஒரு கரையில் ஒருபக்கம் இருக்கிறார். நடுவில் சம்சாரம் என்கிற ஆறு ஓடுகிறது. நீங்கள் இன்னொரு பக்கம் இருக்கிறீர்கள். இரண்டு பேருக்கும் நடுவில் பாலம் இருக்கிறது. அது எந்தப ் பொருளினால் உருவானாலும் பரவாயில்லை. இந்தக் காட்டுத் தீக்கு அந்தப் பாலத்தை எரித்து உங்களை ஏற்றுக் கொள்கிற சக்தி உண்டு.

பாலத்தை உருவாக்குவதே அந்த மகோன்னத நிலையை அடைவதற்கான தீக்ஷையை நிகழ்த்திவிடும். பாலத்தை மரத்தால் கட்டினாலும் சரி இல்லை மண்ணால் கட்டினாலும் சரி கல்லால் கட்டினாலும் சரி சிமெண்டால் கட்டினாலும் சரி எதில் கட்டினாலும் இந்தக் காட்டுத்தீ பரவி உங்களை ஏற்றுக்கொள்ளும்.

எந்தப் பாவனையில் பாலம் கட்டினாலும் சரி சக பாவமானாலும் தாஸ பாவமானாலும் சரி. எந்தப் பாவமானலும் சரி அந்தப் பாவத்திலே நீங்கள் கரையுங்கள். அவரை இழுக்க முயற்சி செய்யாதீர்கள். நீங்கள் கரையுங்கள்.

கரையத் துவங்கிய அந்த வினாடியே உங்களின் உணர்வு கரைந்து வாழ்க்கையின் உச்சத்தை அது உங்களுக்கு மலர வைக்கும். அது உங்களுக்குள் ஆழமான மாற்றத்தை அளிப்பதாக மாறும் வேறு ஒன்றுமே செய்யத் தேவையில்லை. அந்தச் சத்தியத்தை உள்வாங்கி இதற்காக முயற்சி செய்தீர்கள் என்றால் போதும். உங்கள் உணர்வை ஒன்று திரட்டி குரு சக்திக்குள் குரு என்கிற உணர்விற்குள் குரு தத்துவத்திற்குள் நான் கரைவேனாக" என்கிற ஆழமான சங்கல்பத்தை ஏற்படுத்தி அந்த உணர்வை உங்களுக்குள் ஆழமாக்கினீர்கள் என்றால் போதுமானது.

"ஐயோ! என்னால் கரைய முடியவில்லையே! எப்படிக் கரைவது?" என்று எல்லாம் கேட்கவே வேண்டாம். "கரைவேனாக" என்கிற சங்கல்பத்தை ஆழமாக ஏற்படுத்தினீர்கள் என்றால் போதுமானது. உங்களுக்குள்ளே அப்படியே கரைய ஆரம்பித்து விடுவீர்கள். வேறு ஒன்றுமே நிற்காது.

கரடாக நிற்கிற உங்களின் மனம்கூட கரைகிற பாகத்தைப் பார்த்து தாமும் கரைந்துவிடும். வேறு ஒன்றுமே செய்ய வேண்டியது இல்லை. அவ்வளவுதான் வேறு ஒன்றுமே இல்லை.

கண்களை மூடி ஆழ்ந்து இந்த உணர்விற்குள் செல்லுங்கள்...
இந்தச் சத்தியங்கள் வெறும் வார்த்தையாக இருக்கக்கூடாது.
வாழ்க்கையாக மாற வேண்டும்.






# இவ்வார ராசிபலன்

## 22-07-2022 வெள்ளி தொடக்கம் 28-07-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கும். இனிய தகவல் வந்து சேரும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். வசந்தம் தேடி வரும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். திடீர் செலவு ஏற்படும். நட்பால் பிரிவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பலன் தரும். பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக் கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மாறும். விருப்பமான தொழில் அமையும். பிரச்சனைகள் அகலும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். உள்ளம் மகிழும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தெய்வீகப் பற்று கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். மங்களச் செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K





**ரிஷபம்:** வம்புதும்புகள் ஒழியும். தாய், தந்தை உதவி உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் மந்த நிலை காணப்படும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். தீர்த்த யாத்திரை உண்டு. திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்புக் கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். கோதுமை தானம் குலவிருத்தி சேரும். கணவன் அன்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீர்வு தரும். வியாபாரம் சிறக்கும். பங்குச்சந்தையில் லாபம் வரும். பயணம் அனுகூலம் தரும். முயற்சிகள் பலன் தரும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திர சொத்துக்கள் சேரும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் மறையும். விடாமுயற்சி அவசியம். உடல் உபாதைகள் நீங்கும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். வீண் வம்பு அகலும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உதவிகள் கிடைக்கும். வேலை பளு குறையும். மனோ பயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. தனவரவு பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 2,9,5,7
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,K




**மிதுனம்:** நினைத்த காரியம் நிறைவேறும் வாரம். தன்னம்பிக்கை கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த வி'யம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். தோஷங்கள் ஒதுங்கும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். விரயங்கள் அதிகமாகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வீண் வம்பு உருவாகும். பழைய பாக்கி வசூலாகும். திறமைகள் வெளிப்படும். புதிய முதலீடு லாபம் தரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். நீண்ட நாள் பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. சிறப்புக்கள் சேரும். வாகனத்தால் செலவு உண்டு. பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. உற்சாகம் அலைமோதும். காரிய தாமதம் ஏற்படும். வரவு திருப்தி தரும். புதிய நண்பர்களால் தகுதிகள் உயரும். பெற்றோரின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,L




**கடகம்:** அதிகாரமான பேச்சுகள் அரங்கேறும் வாரம். வெற்றியை எட்டும் காலம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பட்டம் பதவி வந்து சேரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். வினோதமான எண்ணங்கள் விலகும். ஆதாயம் பெருகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. முத்தான வாய்ப்பு பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன்தொல்லை தீரும். கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. பருப்பு தானம் பாவம் போக்கும். தொல்லைகள் விலகும். ேர் மார்க்கெட்டில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்கள் ஆலோசனை பலன் தரும். பேச்சில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. செயல்களில் கவனம் தேவை. பாராட்டுக்கள் அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப் பெருமான், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,O



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**சிம்மம்:** எதார்த்தமாக செயல்படும் வாரம். உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். உறவினரால் உதவி கிட்டும். வழக்குகள் சாதகமாகும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். கலைத்துறையில் கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். விருந்தினர் வருகை உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல்நலம் சீராகும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உறவுகளால் நன்மை உண்டு. எடுத்த முயற்சி வெற்றி பெறும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். சுபிட்ஷங்கள் பெருகும். கல்வியில் கவனம் தேவை. நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். பணவரவு பாகப்பிரிவினை ஏற்படுத்தும். வாகன மாற்றம் உண்டு. புதிய நட்பு ஏற்படும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேச பயணம் உண்டு. வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம கூடும். அணிமணிகள் சேரும். விரும்பியது நிறைவேறும். கட்டிடத் தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். கடன் பாக்கிகள் வசூலாகும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,4,2,8
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Q




**கன்னி:** மங்களச் செய்தி வரும் வாரம். நெருக்கடிகள் குறையும். பழைய பகை தீரும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். கல்வியில் மேன்மை உண்டு. கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். இல்லத்தில் அமைதி பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பதற்றம் குறையும். சுறுசுறுப்பு பெருகும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். சேமிப்பு பெருகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். புதிய நட்பில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். விவசாயம் பலன் தரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். கோரிக்கைகள் நிறைவேறும். பெற்றோர் அன்பு அதிகரிக்கும். வாழ்க்கை பிடிப்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். நன்மதிப்பு கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். கடன் சுமை குறையும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். குடும்ப வி'யத்தில் கவனம் தேவை. தாராளமான தனவரவு உண்டு. கனவுகள் பலிதமாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். மருத்துவச் செலவு குறையும். நினைவாற்றல் பெருகும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். வரன் வாயில் தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 7,4,6,2
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,M




**துலாம்:** வரவும், உறவும் வலிமையாகும். பகை மறையும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பயணங்கள் பலன் தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். விளையாட்டில் கவனம் தேவை. புதிய முயற்சிகளை தள்ளிப் போடவும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இரும்புத்தொழில் ஏற்றம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். மனச்சுமை குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மருத்துவச் செலவுகள் குறையும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கடன் வாங்க நேரிடும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. அன்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். நல்லோர்கள் நட்பு கிட்டும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். வேண்டாத உறவுகளைத் தவிர்க்கவும். இலக்கிய ஆர்வம் கூடும். நிர்வாகப் பொறுப்பு கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். அரசியல் ஆதாயம் தரும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வெளியூர் பிரயாணம் வெற்றியைத் தரும். மாலை நேரத்தில் கவனம் தேவை. வெகுமானம் கிடைக்கும் காலம். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். வறுமையின் வாட்டம் குறையும். பெண்களால் பெருமை சேரும். தனவரவு உண்டு. செயல்திறமை வெளிப்படும். ஞாபக மறதி ஏற்படும். ஆன்மீக ஈடுபாடுகள் அதிகரிக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். சுபச்செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி பெருகும். கருத்து வேறுபாடுகள் விலகும். புத்தி சாதுர்யம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,W




**விருச்சிகம்:** ஆசைப்பட்ட பொருள் சேரும் வாரம். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். பண தேவைகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். மனஅமைதி அதிகரிக்கும். கடன்தொல்லை தீரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். வரவுகள் மிகுதியாகும். உடல் நலம் சீராகும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். தொழிலில் கவனம் தேவை. விவாதம் வாக்குவாதங்களாக மாறும். வேண்டாத நபர்கள் விலகுவர். ஆழமான மேன்மைகள் அமையும். பயணம் அனுகூலம் தரும். பொருளாதாரம் உயரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியை கெடுக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. அயல்நாட்டுப் பயணம் உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். எதிர்ப்புக்கள் அதிகமாகும். வீடு, மனை யோகம் உண்டு. பெண்களால் பெருமை உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். திடீர் பயணம் லாபம் தரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். பதவி உயர்வு தாமதமாகும். பயணத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பொருள் வரவு ஏற்படும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத்திருப்பணியில் ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வரதராஜப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,A

(தொடர்ச்சி _29_ பக்கம்)

## இவ்வார ராசிபலன்

(_28 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும் வாரம். சந்தோஷம் அலைமோதும். உற்சாகம் களை கட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். உயர் பதவி யோகமுண்டு. சகோதர ஒற்றுமை பலப்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தெய்வ பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து கிட்டும். பொருள் வரவு ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். பணியில் பாராட்டு கிடைக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். புதிய சிந்தனை உதயமாகும். பொறுப்புக்கள் கூடும். உள்ளம் மகிழும். உதவிகள் குவியும். இரகசியம் காப்பது நல்லது. முயற்சிகளில் வளர்ச்சி அடைவீர்கள். தொட்ட காரியம் ஜெயமாகும். இல்லத்தில் அமைதி கூடும். தேகப் பலன் கூடும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. ஆபத்துக்கள் விலகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். விரக்திகள் மறையும். வங்கி சேமிப்பு உயரும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். நலம் விளையும் வாரம். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். தேக பலம் கூடும். திருமண முயற்சி வெற்றி பெறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். உல்லாசப் பயணம் இனிக்கும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். முகப்பொலிவு கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பெயர், புகழ், செல்வாக்கு கௌரவம் உயரும். இல்வாழ்வில் இனிமை கூடும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். தந்திரமாக செயல்படுவீர்கள். விபரீத எண்ணம் விலகும். புதிய நட்பு உருவாகும். தொழில் வளம் கூடும். முற்போக்கு சிந்தனை வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,F




**மகரம்:** புதிய எண்ணங்கள் உருவாகும் வாரம். குளிர்பான தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். நன்மையான காலம். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் தீரும். கல்வியில் கவனம் தேவை. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். காம வினைகள் அகலும். பணக்கட்டுப்பாடு அவசியம். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. தனவரவு பெருகும். பிரபலங்களை சந்திக்க நேரிடும். விவேகம் கைகொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காரியம் கைகூடும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரார்த்தனைகள் நிறைவேறும். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். குடும்ப உறவு பலப்படும். வீண் விரயம் தவிர்க்கவும். உறவுகளால் மதிப்பு உயரும். பாக்கிகள் வசூலாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சங்கிலிகருப்புசுவாமி, அதிர்ஷ்ட எண்: 3,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,P




**கும்பம்:** வெளியூர் பயணம் வெகுமதி தரும் வாரம். எதிரிகள் உதிரியாவார்கள். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்து போகும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிம். தனவரவு பெருகும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பாதகமாக சூழ்நிலைகள் விலகும். வியாபாரம் திருப்தி தரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து கிடைக்கும். குடும்பத்தில் மேன்மைகள் உண்டு. டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். உடல்நலம் திருப்தி தரும். பெருமிதம் நிறைந்த காலம். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். உத்தியோக உயர்வு உண்டு. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். சாதனை படைக்கும் காலம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். பூமியால் நன்மை உண்டு. நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும் வெகுமதியும் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ படைவீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 3,7,9,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,L




**மீனம்:** தலைசிறந்த பதவி கிடைக்கும் வாரம். எண்ணம் கைகூடும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். அற்புதமான காலம். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. பொறாமைகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிட்டும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. தொலைதூரப் பயணம் லாபம் தரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் உண்டு. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. உறவினர் பகை மாறும். வார்த்தைகளில் நிதானம் தேவை. செயல்களில் பொறுமை தேவை. சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். தொழில் அபிவிருத்தி அடையும். உடல்நலம் மேம்படும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத்திருப்பணியில் ஆர்வம் கூடும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K

# அதிமுக அலுவலகத்தை எடப்பாடி பழனிச்சாமியிடம் ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவு



அதிமுக அலுவலகத்தின் சீலை நீக்கி அதன் சாவிகளை எடப்பாடி பழனிசாமி தரப்பிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி என் சதீஷ்குமார் உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கில் எடப்பாடி பழனிசாமி தரப்பு வைத்த வாதம் மிக முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. அதிமுக தலைமை அலுவலகத்தில் கடந்த 11ம் தேதி நடந்த கலவரத்தை தொடர்ந்து, தலைமை அலுவலகத்துக்கு சீல் வைத்து வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்தார். இந்த சீல் உத்தரவை எதிர்த்து கட்சியின் இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியும், முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வமும் சென்னை உயர் நீதிமன்றத்தில் தனித்தனியாக மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர். நீதிபதி சதீஷ்குமார் முன் வழக்கு விசாரிக்கப்பட்டது. முதலில், 11ம் தேதி நடந்த கலவரங்கள் குறித்து விரிவான அறிக்கையை தாக்கல் செய்யும்படி தமிழ்நாடு காவல் துறைக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின் அதிமுக அலுவலகம் முன் நடந்த கலவரம் குறித்த வீடியோவை நீதிபதி பார்வையிட்டார். அதன்பின் கேள்வி எழுப்பிய நீதிபதி, அதிமுக அலுவலகம் உள்ளே கூட்டம் இருந்தது போலீசுக்கு தெரியுமா? கலவரத்தை தடுக்க நீங்கள் என்ன செய்தீர்கள்?

போலீஸ் ஏன் கலவரத்தை தடுக்காமல் அமைதியாக இருந்தது. ஏன் இவர்களை கலைக்கவில்லை. வீடியோவை பார்த்தால் போலீஸ் தலையிட்டது போல தெரியவில்லை, என்று கேள்வி எழுப்பினார். இதற்கு போலீஸ் தரப்பு அளித்த பதிலில், போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. இரண்டு பக்கமும்கூடிய கூட்டத்தை தடுக்க முயன்றோம். ஆனால் அதை மீறி கலவரம் செய்தனர். கலவரத்தை நாங்கள் தடுத்தோம், போலீஸ் தடுக்கவில்லை என்றால் பலர் பலியாகி இருப்பார்கள். நாங்கள் தடுத்த காரணத்தால்தான் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. பொதுமக்களுக்கு காயம் ஏற்படவில்லை, என்று கூறியது.

இந்த வழக்கில் எடப்பாடி பழனிசாமி தரப்பு வைத்த வாதம் மிக முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. எடப்பாடி தரப்பு சார்பாக மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயண் வைத்த வாதம் பின்வருமாறு, வீடியோவை பார்த்தாலே போலீஸ் சரியாக செயல்படவில்லை என்று தெரியும். போலீஸ் சரியான பாதுகாப்பு கொடுக்கவில்லை என்று தெரியும். நாங்கள் அதிமுக அலுவலகத்திற்கு போலீஸ் பாதுகாப்பு கேட்டு இருந்தோம். ஆனால் நாங்கள் கேட்ட பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை.

முன்னதாக ஓ பன்னீர்செல்வம் தரப்பு வாதத்திலேயே, எடப்பாடி பழனிசாமிதான் அதிமுக அலுவலகத்தின் செயலாளர் என்று சொல்லி இருக்கிறார்கள். நான் இங்கு இரண்டு முக்கியமான எடுத்துக்காட்டுகளை கூற விரும்புகிறேன். அங்கு கலவரம் நடந்த அன்று, அலுவலகம் யார் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது என்று பார்க்க வேண்டும். விதிப்படி அன்று எடப்பாடி பழனிசாமிதான் அதிமுக அலுவலகத்தின் செயலாளர். அவருக்குதான் அலுவலகம் மீதான உரிமை உள்ளது.

ஆனால் அதை மீறி ஓபிஎஸ் தரப்பு பூட்டை உடைத்து உள்ளே சென்றுள்ளனர். பைல்களை எடுத்து சென்றுள்ளனர். சட்டப்படி எடப்பாடி பழனிசாமிதான் அதிமுக அலுவலகத்தின் செயலாளர் என்பதால் அவரிடம் அலுவலகத்தை ஒப்படைக்க வேண்டும், என்று எடப்பாடி தரப்பு கூறியது. இதையடுத்து ஓ பன்னீர்செல்வம் தரப்பு வைத்த எதிர் வாதத்தில், பொதுக்குழு அன்று கட்சி அலுவலகத்தை மூட கூடாது. பொதுக்குழுவிற்கு பல மாவட்டங்களில் இருந்து ஆட்கள் வருவது வழக்கம்.

ஓ பன்னீர்செல்வம் அலுவலகத்திற்கு சென்றதில் எந்த தவறும் இல்லை. ஆனால் 4 மாவட்ட செயலாளர்கள் யாரையும் உள்ளே விடாமல் தடுத்தனர். 200-3000 ஆட்களை நிறுத்தி அலுவலகம் வந்தவர்களை தடுத்தனர். உள்ளே நுழைய முயன்றவர்கள் மீது கல் வீசி தாக்குதல் நடத்தினார்கள். இதற்கான வீடியோவை நீங்களே பார்க்கலாம். ஓ பன்னீர்செல்வம் அதிமுக அலுவலகம் செல்ல கூடாது என்று விதி இருக்கிறதா? அப்படி இருக்கும் போது அவர் அலுவலகம் சென்றதில் என்ன தவறு? என்று ஓ பன்னீர்செல்வம் தரப்பு கூறியது.

இதையடுத்து கேள்வி எழுப்பிய நீதிபதிகள்.. பொதுக்குழு நடத்த அனுமதி கொடுக்கப்பட்ட பின் ஏன் அதிமுக அலுவலகத்தில் கூடினீர்கள். ஓபிஎஸ் தரப்பு நாங்கள் அந்த உயர் நீதிமன்ற தனி நீதிபதி தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றம் செல்ல இருக்கிறோம் என்று வாதம் வைத்தார். இந்த வாதங்கள் முடிந்த நிலையில் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில் இன்று வழங்கப்பட்ட தீர்ப்பில், அதிமுக அலுவலக சாவியை எடப்பாடி தரப்பிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நீதிபதி சதீஷ்குமார் உத்தரவிட்டார். விரும்பத்தகாத சம்பவங்களை தவிர்க்கும் வகையில் தனது கட்சி தொண்டர்களை ஒரு மாத காலத்திற்கு அனுமதிக்க கூடாது, அலுவலகத்திற்கு தேவையான போதுமான பாதுகாப்பை காவல்துறை வழங்க வேண்டும் என்று நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டார்.

உங்களை வரவேற்க
நாங்கள் ஆவலோடு இருக்கிறோம்!

# வந்து விட்டது!!

1%

குறைந்த வட்டி விகிதம்
தங்கத்தின் மீது கடன்
Lowest Interest in GTA

# எங்களது புதிய கிளை ஜூலை 4 முதல் உதயம்!

# Pawn Bank Inc.

Your Satisfaction is Our Success

# உடனடி நகைக்கடன்

இந்த சலுகை: (FINCH & MCCOWAN)
1571 SANDHURST CIRCLE #159D,
SCARBOROUGH - M1V1V2.
மட்டும் பொருந்தும்

## தொடர்புக்கு: 416-754-7198

முன்னணி நிதி நிறுவனங்களுடன்
இணைந்து பணியாற்றுகிறோம்

KANAGAAMBIKAI PAWN BROKERS: (BRIMLEY & EGLINTON) 2613 EGLINTON AVE E, TORONTO - M1K2S2. CALL US: 416-269-7198

# Carefirst Family Health Team

Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com






Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

**CHRISTEEN SEEVARATNAM**

**(416) 258-6759**



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**

**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**

**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

EXPRESS AIR TRAVELS AND TOURS
"Fly with Confidence"
416.828.9696
info@expressairtravelss.com
Flight Services
All Inclusive Packages
Last Minute Deals
Cruise Services
Car Rentals
Hotels
Tourist Visa
Passport Application
Dual Citizen Application
தமிழர்களின் நிர்வாகத்தில் Majestic City Indoor Mall இல் உங்களுக்கான பிரயாண முகவர் நிலையம்
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6

உதயம் 1372 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 22, 2022

# அன்று அந்த போராட்டக் களத்தில் நின்றவர்கள் இன்று துரத்தப்பட்டுள்ளார்கள்

## புதிய ஜனாதிபதியின் அரச பயங்கரவாதம் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளது

(கொழும்பு காலி முகத்திடலிலிருந்து கனடா உதயன் சென்னைப் பிரதிநிதி பிரகாஸ்)



கடந்த 18ம் திகதி திங்கட்கிழமை நாம் கொழும்பு காலி முகத்திடலில் நிற்கின்றோம். கனடா உதயன் ஆசிரிய பீடத்தினரோடு நானும் அங்கு நிற்கின்றேன். கொழும்பில் உதயன் பிரதம ஆசிரியருக்கு நன்கு அறிமுகமான ஊடக நண்பர்கள் இருவர் எம்மை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

போராட்டக் காரர்கள் முன்னைய உற்சாகத்தோடு கோசங்களை எழுப்பியும் உணர்வுப் பாடல்களைப் பாடியும் தங்கள் போராட்டத்தை தொடர்ந்து கொண்டிருந்தார்கள். சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் நாம் போராட்டக்காரர்களின் முக்கிய அமைப்பாளர்களோடு நாம் உரையாடுகின்றோம்.

ஆச்சரியம் என்னவென்றால் முன்னர் இலங்கையின் பாராளுமன்றமாகவும் பின்னாளில் இலங்கை ஜனாதிபதியின் பிரதான செயலகமாகவும் விளங்கிய காலி முகத்திடல் அமைந்துள்ள அந்த வளாகத்திற்குள் எம்மை அழைத்துச் செல்கின்றார்கள் அந்த முக்கிய அமைப்பாளர்கள்.

இராணுவம் பொலிஸ் என அனைத்து தரப்பினரும் அங்கு அமைதியாக தங்கள் கடமைகளைச் செய்ய போராட்டக் காரர்களும் தங்கள் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

முன்னாள் பாராளுமன்றக் கட்டத்திற்குள் நாம் குழுவாகசவ் செல்கின்றோம். அதன் முன் அறையில் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

போராட்டக் காரர்களில் ஒருவர் எமது உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களோடு உரையாடுகின்றார். அத்துடன் எமது ஆசி-ரியர் கேட்ட கேள்விகளுக்கும் அந்த போராட்டக் காரர்களின் பிரதிநிதி தகுந்த பதில்களை அளிக்கின்றார்.



"கோட்டாபாயவை நாம் பதவியிலிருந்து அகற்றிவிட்டோம். இனி ரணில் பதவிக்கு வருவதையும் நாம் அனுமதிக்கமாட்டோம். அவர் இந்த கட்டடத்திலிருந்து பணியாற்ற அனுமதிக்க மாட்டோம். இந்த கட்டடத்தை நாம் இனிமேல் ஒரு நூலகமாக்கவுள்ளோம். ஆட்சியாளர் இதுவரை காலமும் இந்த பெரிய கட்டடத்திலிருந்து மக்களுக்கு எந்த சேவையையும் ஆற்றவில்லை. அதனால் இதை மக்களுக்கு அறிவைப் பெற்றுத்தரும் ஒரு நூலகமாக மாற்றவுள்ளோம். ரணில் அவர்கள் ஜனாதிபதியாக வருவதற்கு முயல்கின்றார். ஆனால் நாம் அவரையும் கோட்டாபாயவைத் துரத்தியது போன்று துரத்தியடிப்போம்" என்று போராட்டக் காரர்கள் உதயன் பிரதம ஆசிரியர்களிடம் தெரிவித்தார்கள். அவர்களது போர்க்குணத்தை மெச்சியபடி நாங்கள் அந்த இடத்தை விட்டு நீங்கினோம்.

ஆனால் இன்று அந்த இடத்தில் அவர்கள் இல்லை. இலங்கையின் அரச பயங்கரவாதம் மீண்டும் தனது கோரமான முகத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது. விடுதலைப் புலிகளின் போராட்டத்தை சர்வதேச அரச பயங்கரவாதம் எவ்வாறு அழித்து நிர்மூலமாக்கியதோ. அதைப்போன்று தென்னிலங்கைப் போராளிகளின் மற்றும் பல்கலைக் கழக மாணவர்களின் உணர்வு கொண்ட போராட்டத்தை ரணில் தலைமையில் அழிக்க முற்பட்டுள்ளார்கள்.

கோட்டாபாய என்ற கொடியஅரசியல்வாதியை சில நாட்களில் பதவியிலிருந்து விரட்டியடித்தவர்கள். எவ்வாறு இந்த நரிக்குணம் கொண்ட ரணிலை கையாளப் போகின்றார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# "ரொறன்ரோவின் மனித நேயக் குரல்" அமைப்பின் நிதியுதவியில் வவுனியாவில் மாணவர்களுக்கான அப்பியாசப் புத்தகங்கள்



தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பசுமை அறிவொளி நிகழ்ச்சித்திட்டம் கடந்த 16ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை வவுனியா கோவில் குளம் கிராமத்தில் இடம் பெற்றது.

-மாணவர்களுக்கு சூழல் அறிவு மற்றும் சூழல் விழிர்ப்புணர் வை ஏற்படுத்தி மாணவர்களை சூழல் பாதுகாப்பில் ஈடுபடுத்தும் நோக்குடனும்,அவர்களுடைய ஆளுமைகளை விருத்தி செய்யவும் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தினால் தொடர்ச்சியாக குறித்த நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



அதன் அங்கமாக வெள்ளிக்கிழமை 16ம் திகதி மாலை வவுனியா கோவில்குளம் கிராமத்தில் குறித்த நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

-தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என்.லோகேந்திரலிங்கம் கலந்து கொண்டார்.மேலும் விருந்தினர்களாக முன்னாள்



'வீரகேசரி' பிரதம ஆசிரியர் வி. தேவராஜ், கனடா உதயன் பத்திரிகையின் சென்னைப் பிரதிநிதி பிரகாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு வழங்கப்பெற்ற மாணவர்களுக்கான அப்பியாசப் புத்தகங்களுக்கான நிதியை கனடா-வில் இயங்கிவரும் "ரொறன்ரோவின் மனித நேயக் குரல்" அமைப்பினர் வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் – திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் நூலகத்தில் அதன் நிர்வாகிகளைச் சந்தித்த 'கனடா உதயன்' பிரதம ஆசிரியர்

- திருநெல்வேலியிலிருந்து இ.பிரகாஸ்

கடந்த ஒருவார காலத்திற்கு மேலாக இலங்கையில் தங்கியிருந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுத்த கனடா உதயன் பிரதம ஆசிரியர் அவர்கள் யாழ்ப்பாணம்-திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் நூலகத்திற்கு சென்று அதன் நிர்வாகிகளையும் சந்தித்த கனடா உதயன் வார இதழின் பிரதிகள் சிலவற்றையு நூலகத்திற்கு வழங்கினார்.



இங்கு காணப்படும் படத்தில் முன்னாள் வடக்கு மாகாண வி-வசாய அமைச்சரும் தற்போதைய தலைவருமான திரு பொ. ஐங்கரநேசன் மற்றும் முன்னாள் திருநெல்வேலி கிராம சேவையாளரும் தற்போதைய நூலகருமான திரு பாக்கியராஜா ஆகியோர் உதயன் பிரதிகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

ALLSTATE'S 2022 NATIONAL CHAMPION AWARD WINNER!
RONALD ANTON
Allstate Trusted Advisor and Agent
GET A FREE QUOTE
FOR AN EXCLUSIVE DISCOUNT, PLEASE CALL:
416.846.6479
Allstate. You're in good hands.
உங்கள் வீடு, வாகன காப்புறுதி தேவைகளுக்கு என்னை அழையுங்கள் தமிழிலும் உரையாடலாம்

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker